# தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2016 - 2017

### மானியக் கோரிக்கை எண்.32


### டாக்டர் நிலோபர் கபில்
### தொழிலாளர் நலத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு

2016

## அட்டவணை


| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| | **1. தொழிலாளர் துறை** | |
| 1.1. | செயல்பாடுகள் | 6 |
| 1.2. | நிர்வாக அமைப்பு | 7 |
| 1.3. | தொழில் உறவுகள் | 8 |
| 1.4. | சமரசம் | 8 |
| 1.5. | தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழிலாளர் தீர்ப்பாயங்கள் | 12 |
| 1.6. | தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946 | 14 |
| 1.7. | தொழிற்சங்கங்கள் சட்டம், 1926 | 14 |
| 1.8. | பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் அமலாக்கம் | 15 |
| 1.9. | ஒழுங்குமுறை சட்டங்களின் அமலாக்கம் | 15 |
| 1.10. | இதர ஒழுங்குமுறை சட்டங்கள் | 22 |
| 1.11. | ஊதியம் தொடர்புடைய சட்டங்கள் | 23 |
| 1.12. | சமூக பாதுகாப்பு சட்டங்கள் | 24 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1.13. | குழந்தைத் தொழிலாளர் முறை ஒழித்தல் | 27 |
| 1.14. | தொழிலாளர் நல வாரியங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் | 33 |
| 1.15. | நுகர்வோர் பாதுகாப்பு | 44 |
| 1.16. | தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் | 46 |
| 1.17. | தமிழ்நாடு கட்டுமான கழகம் | 48 |
| 1.18. | கடந்த ஐந்து ஆண்டுகளில் சிறப்பு செயலாக்கம் | 49 |
| 1.19. | அடுத்த 5 ஆண்டுகளுக்கான தொலை நோக்கு திட்டங்கள் | 53 |
| **2. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்** | | |
| 2.1. | தொழிற்சாலைகளில் தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களின் அமலாக்கம் | 56 |
| 2.2. | பட்டாசு தொழிற்சாலை ஆய்வுகள் | 58 |
| 2.3. | நடமாடும் கண்காணிப்புக் குழு | 59 |
| 2.4. | குழந்தைத் தொழிலாளர் தடுப்பு முறை | 60 |
| 2.5. | புகார்களின் மீதான விசாரணை | 61 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 2.6. | அபாயகரமான செயல்முறைகள் உள்ள தொழிற்சாலைகள் | 62 |
| 2.7. | மனை மதிப்பீட்டு குழு | 63 |
| 2.8. | கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996 மற்றும் தமிழ்நாடு விதிகள், 2006. | 64 |
| 2.9. | கட்டடம் மற்றும் கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு | 65 |
| 2.10. | உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேம்படுத்தும் செயல்பாடுகள் | 66 |
| 2.11. | மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்கும் திட்டம் | 73 |
| 2.12. | உயர்ந்த உழைப்பாளர் விருது | 74 |
| 2.13. | தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்திற்கு பிரத்யேக வலைதளம் உருவாக்குதல் | 75 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| **3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை** | | |
| **வேலைவாய்ப்புப் பிரிவு** | | |
| 3.1. | நிர்வாக அமைப்பு | 78 |
| 3.2. | மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகள் | 80 |
| 3.3. | பதிவு மற்றும் பணியமர்த்தல் | 81 |
| 3.4. | தொழில்நெறி வழிகாட்டுதல் | 83 |
| 3.5. | பயிற்சி வகுப்புகள் (தன்னார்வ பயிலும் வட்டம்) | 84 |
| 3.6. | தனியார்துறை பணியமர்த்தல் மற்றும் பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் | 85 |
| 3.7. | வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை | 87 |
| 3.8. | மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புப் பிரிவு | 89 |
| 3.9. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் | 90 |
| 3.10. | பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் | 91 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 3.11. | தேசிய வேலைவாய்ப்பு பணியானது தேசிய தொழில் வழிகாட்டும் பணியாக மாற்றம் பெறுதல் | 92 |
| 3.12. | சிறப்பு புதுப்பித்தல் சலுகை | 94 |
| | **பயிற்சிப் பிரிவு** | |
| 3.13. | நிர்வாக அமைப்பு | 96 |
| 3.14. | கைவினைஞர் பயிற்சித் திட்டம் | 97 |
| 3.15. | மாநில தொழில் பயிற்சி குழுமம் | 115 |
| 3.16. | தொழிற்பழகுநர் பயிற்சி திட்டம் (தொழிற்பழகுநர் சட்டம், 1961) | 116 |
| 3.17. | தொழிற் பள்ளிகள் | 120 |
| 3.18. | சாதனைகள் மற்றும் முனைப்பு நடவடிக்கைகள் | 121 |
| 3.19. | அடுத்த ஐந்தாண்டுகளுக்கான தொலைநோக்கு திட்டங்கள் | 126 |
| | **தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்** | |
| 3.20. | நோக்கம் | 127 |
| 3.21. | தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் – திறன் பயிற்சி ஒருங்கிணைப்பு முகமை | 128 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 3.22. | நெறிமுறைப்படுத்துதல் மற்றும் தர உத்தரவாதம் | 129 |
| 3.23. | தேசிய திறன் தகுதி கட்டமைப்பை **(NSQF)** செயல்படுத்தும் மைய குழு **(Core Committee)** | 130 |
| 3.24. | திறன் பயிற்சிக்கான  முக்கிய துறைகள் | 131 |
| 3.25. | திறன் மேம்பாட்டில் பொது மற்றும் தனியார் துறை கூட்டமைப்பு | 132 |
| 3.26. | திறன் முகாம்கள் வாயிலாக திறன் பயிற்சிக்கு ஆள் சேர்த்தல் | 132 |
| 3.27. | இணையதளம் | 134 |
| 3.28. | திறன் பதிவு | 135 |
| 3.29. | திறன் சான்றிதழ் வழங்குதல் | 136 |
| 3.30. | அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல் **(Recognition of Prior Learning – (RPL))** | 136 |
| 3.31. | கடந்த ஐந்தாண்டு கால சாதனைகள் | 138 |
| 3.32. | அடுத்த ஐந்தாண்டுகளுக்கான தொலைநோக்கு திட்டம் | 138 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| | **4. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்** | |
| 4.1 | மூலதன அமைப்பு | 140 |
| 4.2. | பதிவு | 140 |
| 4.3. | பணியமர்த்தல் | 141 |
| 4.4. | பணியமர்த்தலில் வகைவாரியான எண்ணிக்கை | 141 |
| 4.5. | இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் | 142 |
| 4.6. | நிதி நிலைமை | 142 |
| 4.7. | சிறப்பு முனைப்பு நடவடிக்கை | 143 |
| | **5. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம்)** | |
| 5.1. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தில் சேர்வதற்கான தகுதிகள் | 144 |
| 5.2. | திட்டத்தின் நிதி ஆதாரம் | 145 |
| 5.3. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட நிர்வாக அமைப்பு | 145 |
| 5.4. | மாநிலத்தில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் | 146 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 5.5. | தொழிலாளர் ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் இயங்கும் ஆயுஷ் **(AYUSH)** பிரிவுகள் | 147 |
| 5.6. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் பயன்கள் | 149 |
| 5.7. | காப்பீட்டு பயனாளிகள் தனியார் மருத்துவமனைகளில் செய்துகொண்ட சிகிச்சைக்கான செலவினை திரும்ப வழங்கல். | 154 |
| 5.8. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட விரிவாக்கம் | 156 |
| 5.9. | மருத்துவமனை மேம்பாட்டுக் குழு | 157 |

# தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

## முன்னுரை

அமைப்புசார் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனுக்காக, கொள்கைகள் / திட்டங்கள் / செயல் திட்டங்கள் போன்றவற்றின் வாயிலாக தொழிலாளர் நலச் சட்டங்களை செம்மையாக அமல்படுத்தி, பணிச்சூழலை வரையறுத்து, தொழிலாளர்களின் பணிசார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்து, குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றி, திறன் மேம்பாட்டினை ஊக்குவித்து, வேலைவாய்ப்பினை உருவாக்கி, சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்களை வழங்கி அவர்களின் பணிச்சூழல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் பிரதான செயல்பாடுகள் ஆகும்.

தொழிலாளர் துறையானது தொழிலாளர்களின் சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாத்து, தொழிற்தாவாக்களுக்கு சமரசம் மூலம் சுமுக முடிவு ஏற்படுத்தி, தொழில் உறவு மற்றும் தொழில் அமைதியை உறுதி செய்கிறது. அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் மூலம் சமூக பாதுகாப்பு வழங்குவது தொழிலாளர் துறையின் கீழ் செயல்படும் 17 அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களின் முக்கிய கடமையாகும். குழந்தை தொழிலாளர் முறையை

முற்றிலுமாக அகற்றுவதற்காக, தேசிய குழந்தை தொழிலாளர் திட்டத்துடன் ஒருங்கிணைந்து செம்மையான அமலாக்கம் மற்றும் மீட்கப்பட்ட குழந்தைகளுக்கு முறையான மறுவாழ்வு வழங்குதல் போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் கல்வி நிறுவனமான தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், தொழிலாளர் மேலாண்மையியலில் பட்டய படிப்பு, பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்புகளை பயிற்றுவித்து வருகிறது.

பணியிட பாதுகாப்பு மற்றும் பணிசார் சுகாதார கேடுகளைக் கையாளவும், ஒவ்வொரு தொழிலாளிக்கும் பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான பணிச்சூழலை உறுதி செய்யும் நடவடிக்கைகள் குறித்த அனைத்து செயல்பாடுகளையும் முறைப்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளது. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், அனைத்து தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு தொழில் சார்ந்த பாதுகாப்பு மற்றும் பணிசார் சுகாதாரத்தினை உறுதி செய்கிறது. கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996ன் கீழான பதிவு மற்றும் உரிமம் வழங்கும் பொறுப்பும் இவ்வியக்ககத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகத்தின் இரு பிரிவுகளில் ஒன்றான வேலைவாய்ப்பு பிரிவின் முதன்மையான பணி வேலைநாடுனர்களை பதிவு செய்தலும், பதிவு செய்த நபர்களுக்கு தொழில் நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை மையம் மூலம் உதவி செய்தலும் ஆகும். இப்பிரிவு, போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளையும் தனியார் துறைகளில் பணி வாய்ப்புகள் பெறும் வகையில் வேலைவாய்ப்பு முகாம்களையும் நடத்தி வருகிறது. இந்த இயக்குநரகத்தின் மற்றொரு பிரிவான பயிற்சிப் பிரிவு இம்மாநிலத்திலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள், தொழிற் பள்ளிகள் போன்ற தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களையும், தொழிற்பழகுநர் பயிற்சி திட்டத்தினையும் நிர்வகித்து ஒருங்கிணைத்தல் பணிகளையும் மேற்கொள்கிறது.

நீடித்த தொழில் வளர்ச்சிக்கு பங்களிக்கும் திறன்மிகு மனித வளத்தினை உருவாக்கும் பொருட்டு, திறன் எய்தும் பயிற்சிகளை தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் அளித்து வருகிறது. இக்கழகம், மாநிலத்தில் திறனை மேம்படுத்தல், அரசின் பல்வேறு துறைகளால் மேற்கொள்ளப்படும் திறன் மேம்பாட்டு செயல்களை இணக்கமாக ஒருங்கிணைத்தல் ஆகிய சிறப்பு குறிக்கோள்களுடன் உருவாக்கப்பட்ட ‘மாநில ஒருங்கிணைப்பு முகமை’யாகும். தமிழ்நாடு திறன் மேம்பாட்டு

கழகமானது, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில், மாநிலத்திலுள்ள திறன் தொகுப்பை மேம்படுத்தி, தொழிற்சாலைகளின் திறன் பெற்ற தொழிலாளர்களுக்கான தேவையை பூர்த்தி செய்யும் வகையில், பல்வேறு பயிற்சிகளுக்கு ஒரே தரநிர்ணயம் செய்யும் முயற்சியை துவக்கியுள்ளது.

வேலையளிப்பவர்களையும் வேலை நாடுநர்களையும் இணைப்பதன் மூலம் படித்த, திறன் பெற்ற இளைஞர்கள் அவர்களின் தகுதிக்கேற்ற வகையில், அயல்நாட்டு வேலைவாய்ப்புகளை பெறுவதில் அவர்களுக்கு தேவையான வழிகாட்டுதலையும் ஆதரவையும் அளிப்பதை நோக்கமாகக் கொண்டு அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் உருவாக்கப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் புலம்பெயர்பவர்களின் பாதுகாவலரின் (Protector Of Emigrant) பதிவு முகவராக செயல்படும் இந்நிறுவனம் குறைந்தபட்ச சேவை கட்டணம் மட்டுமே வசூலித்து வருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்டு அயல்நாட்டில் பணியமர்த்தப்படும் நபர்களுக்கு தேவையான சேவைகளையும் செய்து வருகிறது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் (ESI) என்பது ஒவ்வொரு பங்களிப்பாளரையும் பயனளிப்போர் மற்றும் பயனாளியாகக் கொண்ட தனித்தன்மை வாய்ந்த

பன்முகத்தன்மையுடைய ஒரு சுயநிதித்திட்டமாகும். இத்திட்டம் காப்பீட்டாளர் மற்றும் அவரைச் சார்ந்தோருக்கு நோய்தாக்கம், மகப்பேறு, பணியின் போது ஏற்படும் விபத்து ஊனம் மற்றும் இறப்பு ஆகிய எதிர்பாராத நிகழ்வுகளின் போது முழுமையான மருத்துவபயன் மற்றும் பணப்பயன்களை வழங்குகிறது. இந்நோக்கத்திற்காக தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்திற்கான நிதி, மத்திய மற்றும் மாநில அரசுகளால் 7:1 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது.

## 1. தொழிலாளர் துறை

மாநிலத்தில் சாதகமான தொழிற்சூழலை ஏற்படுத்தும் வகையில் சுமுகமான மற்றும் இணக்கமான தொழில் உறவுகளை மேம்படுத்த தமிழ்நாடு அரசு பெரு முயற்சியினை மேற்கொண்டு வருகிறது. தொழில் முதலீட்டிற்கான முதன்மை மையமாகத் திகழும் தமிழ்நாடு, வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதில் எப்போதும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. நிலையான தொழில் வளர்ச்சிக்கு பங்களித்திடும் தொழிலாளர்களின் நலனை உள்ளடக்கிய சீரான தொழில் வளர்ச்சி மற்றும் முன்னேற்றமே தமிழ்நாடு அரசின் கொள்கையாகும். தொழிலாளர் நல சட்டங்களை நியாயமான முறையில் அமல்படுத்துவதன் மூலம் அதிக அளவிலான தரமான பொருட்களை உற்பத்தி செய்யும் சூழல் முறைபடுத்தப்படுகிறது. தொழிலாளர்களின் நலன் மற்றும் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் நலத்திட்டங்கள் தீவிரமாக செயல்படுத்தப்பட்டும், சமூக பாதுகாப்பு சட்டங்கள் உறுதியாக கண்காணிக்கப்பட்டும் வருகின்றன.

### 1.1 செயல்பாடுகள்

பொருளாதார வளர்ச்சி மற்றும் செழிப்பினை அடையும் நோக்கில், இணக்கமான மற்றும் அமைதியான தொழிலாளர் உறவுகளை நிலைநிறுத்திட, தொழிலாளர் துறை, தொழிலாளர்

நல சட்டங்களை அமல்படுத்தி தொழிலாளர்களின் சட்டபூர்வ உரிமைகளைப் பாதுகாத்து அவர்களின் நலனை உறுதி செய்கிறது. குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுதல், தொழிற்தகராறுகளை தீர்த்துவைத்தல், சட்டமுறை எடையளவு சட்டத்தினை அமலாக்குதல் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் சமூக பாதுகாப்பு வழங்குதல் ஆகியவை தொழிலாளர் துறையின் முக்கியமான செயல்பாடுகள் ஆகும்.

## 1.2. நிர்வாக அமைப்பு

தொழில் அமைதியினைக் காத்து, பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களை அமல்படுத்த தொழிலாளர் ஆணையரை தலைவராகக் கொண்டு பல நிலையிலான 568 அலுவலர்கள் மற்றும் 2180 பணியாளர்களுடன் தொழிலாளர் துறை செயலாற்றி வருகிறது. இத்துறையில் ஒரு கூடுதல் தொழிலாளர் ஆணையர், 12 தொழிலாளர் இணை ஆணையர்கள், 16 தொழிலாளர் துணை ஆணையர்கள், 24 தொழிலாளர் உதவி ஆணையர்கள், 100 தொழிலாளர் அலுவலர் தரத்திலான அலுவலர்கள், 70 தொழிலாளர் துணை ஆய்வர்கள், 220 தொழிலாளர் உதவி ஆய்வர்கள், 20 புள்ளி விவர ஆய்வர்கள், 101 முத்திரை ஆய்வர்கள், இரண்டு உதவி மருத்துவர்கள்

(தோட்டங்கள்), ஒரு கணக்கு அலுவலர் மற்றும் ஒரு மக்கள் தொடர்பு அலுவலர் பணியாற்றி வருகின்றனர்.

## 1.3 தொழில் உறவுகள்

உற்பத்தியின் பங்குதாரரர்களான தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினரிடையே சுமுகமான உறவுகளை பேணுவதன் மூலம் மனநிறைவு மற்றும் தன்னிறைவு கொள்ளும் தொழிலாளர்களைக் கொண்டே தொழில் வளர்ச்சி எட்டப்பட முடியும். தொழில்நுட்ப பரிமாணம் மற்றும் தொழில் விரிவாக்கத்தில் முன்னேற்றம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அதிக உற்பத்தியில் கவனம் செலுத்தும்போதே தொழிலாளர்களுக்கு நியாயமான சலுகைகள் வழங்குவது தொழில் வளர்ச்சியின் அடிப்படையாகும். சமூக நீதியின் பரந்த கொள்கை மற்றும் செயலாக்கமானது, நியாயமான இலாபம் மற்றும் சரியான ஊதியம் குறித்த கோரிக்கைகளை சட்டபூர்வமாக சமரசத்தின் மூலம் தீர்த்து, வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்புகளை தவிர்க்க வழிவகை செய்கிறது.

## 1.4 சமரசம்

தொழிற்தாவாக்கள் மீது மேற்கொள்ளப்படும் சீரிய சமரச முயற்சிகளின் மூலமாக வலுவான தொழில் உறவு சூழலை உருவாக்கிட அரசு பெருமுயற்சி மேற்கொண்டுள்ளது. நடப்பு ஆண்டில் எழுப்பப்பட்ட 6,417 தொழிற்தாவாக்களில் 5,140

வழக்குகள் தீர்த்து வைக்கப்பட்டன. அவற்றுள் 3,048 வழக்குகள் சுமுகமான முறையில் முடிக்கப்பட்டன. தொழிற்சாலைகளில் உருவாகும் பிரச்சனைகள் காரணமாக ஏற்படும் கதவடைப்பு மற்றும் வேலை நிறுத்தங்களை தீர்த்து வைப்பதற்கு சிறப்பு முயற்சிகள் எடுக்கப்பட்டு பல்வேறு தொழிற்சாலைகளில் நடைபெற்ற 14 வேலை நிறுத்தங்கள் மற்றும் ஆறு கதவடைப்புகள் சீரிய முறையில் தீர்த்து வைக்கப்பட்டன.

கடந்த ஐந்தாண்டுகளில் தீர்க்கப்பட்ட 27,807 தொழிற்தாவாக்களில் 10,268 தொழிற்தாவாக்கள் சுமுகமான முறையில் தீர்க்கப்பட்டுள்ளன. துறையின் சமரச அலுவலர்களால் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட சமரச நடவடிக்கைகளின் காரணமாக 153 வேலை நிறுத்தங்களும் 32 கதவடைப்புகளும் சீரிய முறையில் தீர்த்து வைக்கப்பட்டன.

தமிழ்நாடு போக்குவரத்து கழகம், 18 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், 108 ஆம்புலன்ஸ் சேவை, அரசு இரப்பர் கழகம், பீடி தொழில் மற்றும் இதர தொழிற்சாலைகளில் நடைபெற்ற சில முக்கிய வேலைநிறுத்தப் பிரச்சனைகள் சமரச அலுவலர்களின் தலையீட்டினால் சீரிய முறையில் தீர்த்துவைக்கப்பட்டன.

மேலும், கடந்த ஐந்தாண்டுகளில் பின்வரும் சில முக்கிய ஒப்பந்தங்களும் ஏற்படுத்தப்பட்டன:

- தோல் பதனிடும் தொழிற்சாலைகளில், ஊதிய உயர்வு கோரிக்கைகள் தொடர்பாக 30.10.2013 அன்று தொழிற்தகராறுகள் சட்டம், 1947 பிரிவு 12 (3)ன் கீழ் ஒப்பந்தம் ஏற்பட்டது.
- தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக 09.01.2014 அன்று தொழிலாளர் ஆணையர் முன்னிலையில் தொழிற்தகராறு சட்டம், 1947 பிரிவு 12(3)ன் கீழ் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி சுமார் 70,820 தொழிலாளர்கள் பயன்பெறுகிறார்கள்.
- தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக 13.02.2014 அன்று தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்னிலையில் தொழிற்தகராறுகள் சட்டம், 1947 பிரிவு 12(3)ன் கீழ் ஒப்பந்தம் ஏற்பட்டது.

- அரசு இரப்பர் கழக தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு குறித்து 11.10.2014 அன்றும் 23.02.2016 அன்றும் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இதன்மூலம் 2,000 தொழிலாளர்கள் பயன் பெறுகிறார்கள்.

- தமிழ்நாடு போக்குவரத்து தொழிலாளர்களின் 12வது ஊதிய உயர்வு குறித்து 28.12.2014 முதல் நடைபெற்ற வேலை நிறுத்தம் 31.12.2014 அன்றைய சமரச பேச்சு வார்த்தையின் மூலம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் 1.25 இலட்சம் போக்குவரத்து தொழிலாளர்கள் பயன் பெறுகிறார்கள்.

- 108 ஆம்புலன்ஸ் சேவையில் ஈடுபட்டுள்ள 3000 ஓட்டுநர்கள் பயன்பெறும் வகையில் போனஸ் மற்றும் இதர பணி நிலைமைகள் குறித்து 17.10.2014 அன்றும் 05.11.2015 அன்றும் தொழிற்தகராறுகள் சட்டம், 1947 பிரிவு 12(3)ன் கீழ் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

- 18 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ஊதிய உயர்வு குறித்து 11.12.2014 முதல் வேலை நிறுத்தத்தில் தொழிலாளர்கள் ஈடுபட்டனர். சமரச அலுவலர்களின் தலையீட்டினால், 31.12.2014 முதல் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு அனைவரும் பணிக்கு திரும்பினர்.

❖ பீடி சுற்றும் தொழிலில் 10.08.2015 அன்று ஏற்பட்ட ஊதிய உயர்வு ஒப்பந்தத்தினால் சுமார் நான்கு இலட்சம் பீடி சுற்றும் தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

## 1.5. தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழிலாளர் தீர்ப்பாயங்கள்

நீதி முறை தீர்வளிக்கும் அமைப்புகளான தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழிற் தீர்ப்பாயங்கள், தொழிலாளர் தொடர்புடைய பொருண்மைகள் மற்றும் தொழிற்தாவாக்கள் மீது தீர்வங்கள் வழங்குகின்றன. தொழிற்தாவா சட்டம், 1947–ன் பிற்சேர்க்கையான இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இனங்கள் மீது தொழிலாளர் நீதிமன்றங்கள் தீர்ப்பளிக்கின்றன.

சமரச முறையில் சுமுகமான ஒப்பந்தம் எய்தப்படாத தொழிற்தாவாக்கள் மீது நீதி முறை தீர்வளிக்க 13 தொழிலாளர் நீதிமன்றங்களும் ஒரு தொழிற் தீர்ப்பாயமும் தமிழகத்தில் செயலாற்றி வருகின்றன. சென்னையில் நான்கு தொழிலாளர் நீதிமன்றங்களும், வேலூரில் இரண்டு தொழிலாளர் நீதிமன்றங்களும், சேலம், கடலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மற்றும் கோவை ஆகிய இடங்களில் தலா ஒரு தொழிலாளர் நீதிமன்றமும் செயல்பட்டு வருகின்றன. மேலும், கோவை, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களை அதிகார

எல்லையாகக் கொண்டுள்ள கோவை தொழிலாளர் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகளை கருத்தில் கொண்டு அதன் பணிச்சுமையை குறைக்கும் நோக்கில், நூற்பாலை, சர்க்கரை ஆலை, தோட்ட நிறுவனங்கள், பொறியியல் நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களின் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் தொழிற்தாவாக்களை விரைந்து முடித்திட வழிவகை செய்யும் பொருட்டு கோவையில் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் அமைத்திட அரசு ஆணை வழங்கியுள்ளது. கடந்த நான்காண்டுகளில் 13,390 வழக்குகள் தீர்ப்பளிக்கப்பட்டு முடிக்கப்பட்டன. 2015–ஆம் ஆண்டில் தொழிலாளர் நீதிமன்றங்களில் 5,391 வழக்குகள் முடிக்கப்பட்டன.

தொழிற் தகராறுகள் சட்டம் 1947–ன் பிற்சேர்க்கையான மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களை விசாரித்து தீர்வம் வழங்க சென்னையில் ஒரு தொழிற் தீர்ப்பாயம் இயங்கி வருகிறது. கடந்த நான்காண்டுகளில், 159 வழக்குகளில் தீர்வம் வழங்கப்பட்டுள்ளது. 2015–ஆம் ஆண்டில் தொழிற் தீர்ப்பாயத்தில் 140 வழக்குகள் பெறப்பட்டு 59 வழக்குகளில் தீர்வம் வழங்கப்பட்டுள்ளது.

## 1.6. தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946

தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946, இச்சட்டத்தின் அட்டவணையில் வரையறுக்கப்பட்டுள்ள விவரங்கள் குறித்த நிலையாணைகள் வகுப்பதை ஒவ்வொரு தொழில் நிறுவனத்தின் வேலையளிப்பவருக்கு சட்டப்படியான நிபந்தனையாக விதிப்பதன் வாயிலாக, தொழிலாளர்களை ஒப்பந்த நிலையிலிருந்து பணி நிரந்தர நிலைக்கு மாற்றுவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. சான்றளிக்கும் அலுவலர், ஒவ்வொரு நிறுவனத்திற்கான பணி நிபந்தனைகளை சான்றளிக்கிறார். அவ்வாறு சான்றளிக்கப்பட்ட பணி நிபந்தனைகள் வேலையளிப்போரையும் பணியாளரையும் கட்டுப்படுத்துகின்றன.

கடந்த ஐந்தாண்டுகளில் 2,072 தொழில் நிறுவனங்களின் நிலையாணைகளை சான்றளிக்கும் அலுவலர்கள் சான்றளித்துள்ளனர். மேலும், 2015–2016–ஆம் ஆண்டில் மட்டும் 453 நிலையாணைகள் சான்றளிக்கப்பட்டன.

## 1.7. தொழிற்சங்கங்கள் சட்டம், 1926

தொழிலாளர்கள், தங்களுக்கென சங்கம் அமைப்பதற்கான உரிமையினை உறுதி செய்து தொழிற்சங்கங்களை பதிவு செய்வதற்காக தொழிற்சங்கங்கள் சட்டம், 1926 இயற்றப்பட்டது.

31.03.2016 வரையிலான காலத்தில் 12,984 தொழிற்சங்கங்கள் தொழிற்சங்கங்களின் கூடுதல் பதிவாளர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2015–2016–ஆம் நிதியாண்டில் மட்டும் 182 தொழிற்சங்கங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 1.8. பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் அமலாக்கம்

தொழிலாளர் சட்டங்களை அமலாக்கம் செய்வது தொழிலாளர் துறையின் முக்கியப் பணியாகும். பல்வேறு தொழிலாளர் சட்டங்கள் மற்றும் சட்டமுறை எடையளவு சட்டம் ஆகியவற்றின் விதிமுறைகள் கடைபிடிக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக துறையின் அமலாக்க அமைப்பு, காலமுறை ஆய்வுகளையும் சிறப்பாய்வுகளையும் மேற்கொள்கிறது. இச்சட்டங்களின் நோக்கங்களை சம்பந்தப்பட்ட பங்கேற்பாளர்கள் பின்பற்றுவதையும், தொழிலாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் உரிமைகளை பாதுகாப்பதையும் உறுதி செய்வதே அமலாக்க அலுவலர்களின் தலையாய கடமையாகும்.

### 1.9. ஒழுங்குமுறை சட்டங்களின் அமலாக்கம்

#### 1.9.1 தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947

தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க தமிழக அரசால் இயற்றப்பட்ட முக்கியமான சட்டங்களில், கடைகள், தொழில்

நிறுவனங்கள், திரையரங்குகள் மற்றும் இதர வர்த்தக நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காக இயற்றப்பட்ட தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947–ம் ஒன்றாகும். இச்சட்டம், பணி நிபந்தனைகளை முறைப்படுத்தி தொழிலாளர் நலன்களைக் காக்கும் வகையில், வேலை நேரம், வாராந்திர ஓய்வு, நிறுவனம் திறந்து மூடும் நேரம், விடுப்பு, ஊதியம் மற்றும் தன்னிச்சையான நியாயமற்ற தொழிலாளர் பணிநீக்கம், பணியிலிருந்து விடுவித்தல், பணிமுறிவு ஆகியவற்றிற்கான தீர்வினை முறைப்படுத்துகிறது.

துரித தொழில் மற்றும் வியாபார வளர்ச்சியின் காரணமாக, தற்போது மாநிலத்தில் 3,12,482 கடைகள் மற்றும் இதர நிறுவனங்கள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. கடந்த 2015–2016–ம் ஆண்டில் அமலாக்க அதிகாரிகள் 2,89,506 ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். இவ்வாய்வுகளில் 32,373 பல்வேறு முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, இணக்கக் கட்டணமாக ரூ.28.29 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், குற்றவியல் நீதிமன்றங்களால் 207 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன.

அமலாக்க அதிகாரிகளால், கடந்த ஐந்து ஆண்டுகளில் 16.19 இலட்சம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 1,58,143 பல்வேறு

முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, ரூ.130.54 இலட்சம் இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

தொழில் மற்றும் வேலைவாய்ப்பு சூழலை ஊக்குவிக்கும் வகையில் எடுக்கப்பட்ட ஒரு முன்னேற்ற நடவடிக்கையாக, சட்டப்படி பின்பற்றப்பட வேண்டிய கட்டாய விதிமுறைகளை தொழில் நிறுவனங்கள் பின்பற்றி ஒரு வருடத்தின் 365 நாட்களும் தொழில் நடத்திட ஏதுவாக, பணி நேரத்தினைத் தளர்த்தி இவ்வாண்டில் அரசு ஆணைகள் வழங்கியுள்ளது.

## 1.9.2. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958

தமிழ்நாட்டில் உணவு விடுதி மற்றும் உணவகங்கள் உட்பட பல்வேறு உணவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பணி நிலையினை முறைப்படுத்திட, தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958, ஒரு தனி சட்டமாக இயற்றப்பட்டது. 31.03.2016 வரை சுமார் 31,977 உணவு நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, ரூ.15.18 இலட்சம் பதிவு, புதுப்பித்தல் மற்றும் திருத்தல் கட்டணமாக உரிமையாளர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஓராண்டில் மேற்கொள்ளப்பட்ட 40,590 ஆய்வுகளில் 7,029 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு ரூ.7.67 இலட்சம் இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், 31 வழக்குகள் குற்றவியல் நீதிமன்றங்களால் முடிக்கப்பட்டன.

இதே போன்று, 2011 முதல் 2016 வரையிலான ஆண்டுகளில் ஆய்வாளர்கள் 2,21,104 ஆய்வுகள் மேற்கொண்டனர். 29,004 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு ரூ.31.40 இலட்சம் இணக்கக் கட்டணமாக வசூல் செய்யப்பட்டது. 252 வழக்குகள் குற்றவியல் நீதிமன்றங்களால் முடிக்கப்பட்டன.

### 1.9.3. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம், 1958

1958–ம் வருடத்திய தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம், தொழில் நிறுவனங்கள் தங்களது பணியாளர்களுக்கு ஊதியத்துடன் கூடிய தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை அளிப்பதை சட்டப்பூர்வ கடமையாக்குகிறது. 2015–2016 நிதியாண்டில் தொழிலாளர் ஆய்வாளர்களால் இச்சட்டத்தின் கீழ் 88,805 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 35,770 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, இணக்கக் கட்டணமாக ரூ.53.26 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. 2015–16–ம் நிதியாண்டில் குற்றவியல் நீதிமன்றங்களில் 64 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஐந்தாண்டுகளில், 6,08,938 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 65,979 வழக்குகளில் ரூ.147.23 இலட்சம் இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

### 1.9.4. மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம், 1961

மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம், 1961 மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்களின் நலன் மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட முழுமையான தனி சட்டமாகும். தமிழ்நாட்டில் 2,998 பதிவு பெற்ற மோட்டார் போக்குவரத்து தொழில் நிறுவனங்கள் உள்ளன. மேற்படி நிறுவனங்களில் சுமார் 1,41,608 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

2015–2016–ம் ஆண்டில் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் பதிவு, புதுப்பித்தல் மற்றும் திருத்த கட்டணமாக ரூ.56.26 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் தொழிலாளர் ஆய்வாளர்களால் 5,556 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 1,153 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு ரூ.3.04 இலட்சம் இணக்கக் கட்டணமாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

இதே போன்று, 2011–ம் ஆண்டு முதல் 2016–ம் ஆண்டு வரை பதிவு, புதுப்பித்தல் மற்றும் திருத்த கட்டணமாக ரூ.148.74 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. இவ்வைந்தாண்டுகளில் 24,261 ஆய்வுகள் தொழிலாளர் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டு,

**5,193** முரண்பாடுகள் கண்டறியப்பட்டு ரூ.**16.62** இலட்சம் இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

### 1.9.5. தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951

தோட்ட நிறுவனங்களின் தனித்தன்மையான பணி இயல்பினை கருத்திற்கொண்டு, தோட்டத் தொழிலாளர்களுக்கு நலன்களை வழங்கிடும் முதன்மை நோக்குடன் தோட்டத் தொழிலாளர் சட்டம், **1951** இயற்றப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலில் பெண் தொழிலாளர்கள் ஆண் தொழிலாளர்களை விட அதிக எண்ணிக்கையில் உள்ளனர். தோட்ட நிறுவனங்களில் பணி நிபந்தனைகளை முறைப்படுத்துவதே இச்சட்டத்தின் நோக்கமாகும். ஐந்து ஹெக்டேர் மற்றும் அதற்கு மேற்பட்ட பரப்பளவு மற்றும் **15** தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் டீ, காபி, இரப்பர், சின்கோனா அல்லது ஏலக்காய் பயிரிடப்படும் தோட்ட நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தும். சிறப்பு அம்சமாக தோட்ட நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு குடியிருப்பு வசதிகளை இச்சட்டம் வழங்குகிறது. மேலும், தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ சிகிச்சை, பாதுகாப்பு ஆடைகள், குடிநீர் வசதி, குழந்தைகள் காப்பகங்கள், கல்வி வசதி மற்றும் இதர வசதிகள் வழங்கப்படுவதை இச்சட்டம் உறுதி செய்கிறது.

தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் சார்பு சட்டங்களை அமல்படுத்துவதற்காக உதகமண்டலம், குன்னூர், கூடலூர், பந்தலூர், கோத்தகிரி, வால்பாறை, ஏற்காடு, வத்தலகுண்டு, தேனி மற்றும் நாகர்கோவில் ஆகிய 10 இடங்களில் தோட்ட நிறுவன ஆய்வாளர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள மொத்த 2,224 தோட்ட நிறுவனங்களின் மொத்த பரப்பரளவு 61,747 ஹெக்டேர் ஆகும். இதில் 683 பதிவு பெற்ற தோட்ட நிறுவனங்களின் பரப்பளவு 54,071 ஹெக்டேர் ஆகும். பதிவு பெறாத 1,541 தோட்ட நிறுவனங்களின் பரப்பளவு 7,676 ஹெக்டேர் ஆகும். தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் 59,133 மொத்த தொழிலாளர்களில் 36,043 பெண்களும் 23,090 ஆண்களும் உள்ளனர்.

2015–2016–ஆம் ஆண்டில், தோட்ட நிறுவன ஆய்வாளர்கள் 2,988 ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். 132 வழக்குகள் நீதிமன்றங்களின் மூலம் முடிக்கப்பட்டு, ரூ.3.14 இலட்சம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

2011–ம் ஆண்டு முதல் 2016–ம் ஆண்டு வரை 15,166 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 764 வழக்குகள் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு தவறிழைத்த தோட்ட நிறுவனங்களுக்கு, ரூ.14.33 இலட்சம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

### 1.9.6. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தர தகுதி வழங்கல்) சட்டம், 1981

தற்காலிக தொழிலாளர்களுக்கு எதிரான பல்வேறு முறையற்ற தொழிலாளர் நடைமுறைகளை நீக்கிடவும், நிரந்தர பணியாளர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்ற பல்வேறு சட்டம்சார் மற்றும் சட்டம்சாரா பயன்களை அவர்களுக்கு வழங்கிடவும், தமிழக அரசு சிறப்பு சட்டம் ஒன்றை இயற்றியுள்ளது. இச்சட்டம் தொழில் நிறுவனம் ஒன்றில் 24 மாதங்களில் 480 நாட்கள் தொடர் பணி புரிந்த தொழிலாளர்களுக்கு நிரந்தர பணி அந்தஸ்து வழங்குகிறது.

2015–2016–ம் ஆண்டில், தொழிலாளர் ஆய்வாளர்கள் 2,784 ஆய்வுகள் மேற்கொண்டுள்ளனர். மேலும், 249 வழக்குகளில் உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஐந்தாண்டுகளில் 12,586 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொழிலாளர்களுக்கு நிரந்தர பணி அந்தஸ்தை வழங்கி 1,044 வழக்குகளில் உத்தரவிடப்பட்டுள்ளது.

### 1.10. இதர ஒழுங்குமுறை சட்டங்கள்

அமலாக்க அலுவலர்களால் அமல்படுத்தப்பட்டு வரும் இதர தொழிலாளர் ஒழுங்குமுறை சட்டங்கள் பின்வருமாறு:

1. உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் இதர பத்திரிக்கை தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள் மற்றும் இதர பிரிவுகள்) சட்டம், 1955.

2. பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 1966.

3. ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970.

4. விற்பனை அபிவிருத்தி தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 1976.

5. மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (வேலை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டம், 1979.

### 1.11. ஊதியம் தொடர்புடைய சட்டங்கள்

வேலையளிப்போர் தங்கள் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியத்தை முறைப்படி உரிய காலத்தில் வழங்கும் பொருட்டு கீழ்காணும் ஊதியம் தொடர்புடைய சட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. சம்பளப் பட்டுவாடா சட்டம், 1936
2. குறைந்தபட்ச ஊதிய சட்டம், 1948
3. போனஸ் வழங்கல் சட்டம், 1965
4. சம ஊதியச் சட்டம், 1976

## 1.12. சமூக பாதுகாப்பு சட்டங்கள்

### 1.12.1. பணியாளர்கள் இழப்பீட்டுச் சட்டம், 1923

சமூக பாதுகாப்பு வழங்கும் சட்டங்களில் மிக முக்கியமான சட்டம் பணியாளர்கள் இழப்பீட்டு சட்டம், 1923 ஆகும். பணியில் இருக்கும் போது விபத்தின் காரணமாக ஏற்படும் மரணம் மற்றும் காயத்தினால் ஏற்படும் ஈட்டும் திறன் இழப்புக்கு ஏற்ப தொழிலாளர் மற்றும் அவரை சார்ந்தோருக்கு இழப்பீடு வழங்குவதை இச்சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இச்சட்டத்தின்படி உத்தரவிடப்படும் இழப்பீட்டுத் தொகை, வேலையளிப்பவர்களால் அல்லது காப்பீட்டு நிறுவனங்களால் வைப்பீடு செய்யப்படுகிறது. இழப்பீட்டுத் தொகை வைப்பீடு செய்யப்படாத நேர்வுகளில், வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் இழப்பீட்டுத் தொகையினை வசூலிக்க பணியாளர் இழப்பீட்டு ஆணையர்கள் நடவடிக்கை மேற்கொள்கின்றனர். 2015–2016–ஆம் ஆண்டில், 3,758 வழக்குகள் முடிக்கப்பட்டு, மனுதாரர்களுக்கு மொத்தம் ரூ.45.74 கோடி இழப்பீட்டுத் தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. கடந்த ஐந்தாண்டு காலத்தில், 14,892 வழக்குகள் முடிக்கப்பட்டு, மனுதாரர்களுக்கு மொத்தம் ரூ.263.12 கோடி இழப்பீட்டுத் தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பணியாளர் இழப்பீட்டுச் சட்டத்திற்கான ஆணையர், கட்டுமானம் மற்றும் தொழிற்சாலை ஆகிய இடங்களில் விபத்தினால் மரணம் ஏற்படும் பொழுது அது குறித்து உடனடியாக அறிந்து, பணியாளர் இழப்பீட்டுச் சட்டம், 1923ன் கீழ் சம்பந்தப்பட்ட வேலை அளிப்பவர்களுக்கு எதிராக அறிவிப்புகள் வழங்கி வழக்கு விசாரணைகள் மேற்கொள்கிறார்.

### 1.12.2. பணிக்கொடை வழங்கல் சட்டம், 1972

சமூக பாதுகாப்பு சட்டங்களில் மற்றொரு முக்கிய சட்டமான, பணிக்கொடை வழங்கல் சட்டம், 1972, ஒரு நிறுவனத்தில் தொழிலாளி தான் புரிந்த பணிகளுக்காக பணிக்கொடை பெற வகை செய்கிறது. இச்சட்டப்படி ஐந்து வருடங்களுக்கு குறைவில்லாத தொடர் பணி முடித்த தொழிலாளி, வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும்போதோ அல்லது பணியிலிருந்து விலகினாலோ, விபத்து மற்றும் நோயின் காரணமாக இறப்பு நேரிட்டாலோ அல்லது உடலுறுப்பு ஏதும் செயலிழந்தாலோ பணிக்கொடை வழங்கப்படுகிறது.

2015–2016–ஆம் ஆண்டில், 1,993 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, பணிக்கொடையாக ரூ.14.38 கோடி மனுதாரர்களுக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. 413 மேல்முறையீட்டு மனுக்கள் விசாரித்து முடிக்கப்பட்டன.

அவ்வாறே, கடந்த ஐந்தாண்டுகளில், 12,884 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, ரூ.112.24 கோடி பணிக்கொடைத் தொகை மனுதாரர்களுக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

### 1.12.3. தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981

தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981, தற்காலிக பணிநீக்க காலத்தில் ஒழுங்கு நடவடிக்கை விசாரணைகள் நிலுவையில் இருக்கும் தொழிலாளர்களுக்கு, வேலையளிப்பவர் பிழைப்பூதியம் வழங்குவதை சட்டப்பூர்வமாக்கியுள்ளது. இச்சட்டத்தின் கீழ் அதிகாரம் பெற்ற அலுவலர்களால், 2015–2016–ஆம் ஆண்டில், 102 மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, மொத்தம் ரூ.12.15 இலட்சம் பிழைப்பூதியமாக மனுதாரர்களுக்கு வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், இதே ஆண்டில் 16 மேல் முறையீட்டு மனுக்கள் விசாரித்து முடிக்கப்பட்டன.

இதே போன்று, கடந்த ஐந்தாண்டுகளில் இச்சட்டத்தின் கீழ் 1,068 மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, மொத்தம் ரூ.307.46 இலட்சம் பிழைப்பூதியமாக மனுதாரர்களுக்கு வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

## 1.13. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழித்தல்

குழந்தைகளின் வளமான முன்னேற்றம் மற்றும் மேம்பாட்டிற்காக, மாநிலத்தில் குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றிட மாநில அரசு முழுமையாக உறுதியேற்றுள்ளது. தமிழக அரசின் தீவிர முயற்சிகளால், மாநிலத்தில் குழந்தைத் தொழிலாளர்கள் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது. சமுதாயத்தின் வறிய நிலையில் உள்ள குழந்தைகள் மற்றும் குடும்பத்தினரின் சுகாதாரம், கல்வி, நல்வாழ்வு ஆகிவற்றினை மேம்படுத்திட சமுதாயத்தை அச்சுறுத்தும் குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றிட, பல்வேறு துறைகளின் கூட்டு முயற்சிகளோடு ஒருங்கிணைந்த பன்முக செயலாக்கத் திட்டத்தை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது.

### 1.13.1. குழந்தைத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986

குழந்தைத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவதை தடை செய்ய, குழந்தைத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 மற்றும் அதன் தொடர்புடைய சட்டங்களை தொழிலாளர் துறை மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரக அலுவலர்கள் அமலாக்கம் செய்து வருகின்றனர். அடிமட்ட நிலையிலிருந்து நடவடிக்கை எடுப்பதன் மூலம்

மட்டுமே குழந்தை தொழிலாளர் முறையை அகற்ற இயலும். அமலாக்க செயல்பாடுகளை கண்காணிக்கவும், வலுப்படுத்திடவும் ஒவ்வொரு மட்டத்திலும், மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் மாவட்ட அளவிலான தடுப்புக் குழு செயலாற்றி வருகிறது.

### 1.13.2. சட்ட அமலாக்கம்

குழந்தைத் தொழிலாளர்களை பணியமர்த்துவதைத் தடை செய்யும் கீழ்குறிப்பிட்ட இதர சட்டங்கள் தொழிலாளர் துறை மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் அமலாக்கம் செய்யப்படுகின்றன.

1. தொழிற்சாலைகள் சட்டம், 1948.
2. மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம், 1961.
3. பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், 1966.
4. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947.
5. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958.
6. தோட்ட தொழிலாளர் சட்டம், 1951.

2015–2016ம் ஆண்டில் பல்வேறு சட்டங்களின் கீழ் 1,78,046 தொழில் நிறுவனங்களில் ஆய்வுகள்

மேற்கொள்ளப்பட்டு, 32 குற்றவியல் வழக்குகள் வேலையளிப்பவருக்கு எதிராக தொடரப்பட்டன. 2011–ம் ஆண்டு முதல் 2016–ம் ஆண்டு வரையிலான காலத்தில், 7,01,476 தொழில் நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, காணப்பட்ட முரண்பாடுகளுக்கு 143 குற்றவியல் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

### 1.13.3. குழந்தைத் தொழிலாளர் நிலை

தமிழகத்தில், 2001–ம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 4.19 இலட்சம் என்றும், 2011-ஆம் ஆண்டில் 1.51 இலட்சம் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. அரசு மேற்கொண்ட பல்வேறு சீரிய சட்ட அமலாக்க நடவடிக்கைகள், மறுவாழ்வு மற்றும் வளர்ச்சி திட்டங்களின் காரணமாக குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து கொண்டே வருகிறது. அனைவருக்கும் கல்வி திட்டத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் படி பொருளாதார கட்டாயத்தினால் பள்ளிக்கு செல்லாமல் பணிக்கு செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை மாநிலத்தில் வேகமாக குறைந்து வருகிறது.

### 1.13.4. விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

அனைத்து அரசு விழாக்கள், மாவட்ட மற்றும் மாநில அளவிலான கண்காட்சி மற்றும் பொது நிகழ்ச்சிகளைப் பயன்படுத்தி, குழந்தை தொழிலாளர்களை அகற்றும் முறையில் தொடர்புடைய அனைவரின் ஒத்துழைப்பினை உறுதி செய்திடவும், விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், மாநில மற்றும் மாவட்ட அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான விழிப்புணர்வு பிரசாரத்திற்கு மேலும் உத்வேகம் அளித்திடும் வகையில், மாநில மற்றும் மாவட்ட அளவில் ஒவ்வொரு வருடமும் ஜுன் 12-ஆம் தேதி சர்வதேச குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. குழந்தைத் தொழிலாளர் முறையிலிருந்து மீட்டெடுக்கப்பட்டு, தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பயிற்சி மையங்களில் பயிற்றுவிக்கப்பட்டு, முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்ட குழந்தைகளில், 10–ம் மற்றும் 12–ம் வகுப்பு பொது தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும், தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல்படும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் சிறப்பாக பணியாற்றும் ஒரு ஆசிரியர், ஒரு தொழிலாளர் ஆய்வர், ஒரு தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார

இயக்கக துணை இயக்குநர், ஒரு தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட இயக்குநர் மற்றும் மாநில அளவில் இரண்டு களப் பணியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

### 1.13.5. தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம்

தமிழகத்தில், சென்னை, கோயம்புத்தூர், திண்டுக்கல், தர்மபுரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், நாமக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சி, திருவண்ணாமலை, சேலம், வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 15 மாவட்டங்களில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயிலும் குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ.150/- உதவித் தொகை, கல்வி உபகரணங்கள் மற்றும் இலவச மருத்துவ பரிசோதனை அளிக்கப்படுகிறது.

2015–16ம் ஆண்டில், தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல்படும் 15 மாவட்டங்களில் 239 சிறப்பு பயிற்சி மையங்களில் 9,224 குழந்தைகள் சேர்க்கப்பட்டு 3,620 குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் 245 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டனர். அவர்களில், 100 குழந்தைகள் சிறப்பு பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர்; 77 குழந்தைகள் குழந்தை நல குழுக்களிடம்

ஒப்படைக்கப்பட்டனர். மேலும், 68 குழந்தைகள் அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் தொழிலாளர் ஆய்வர்களால் எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சிகளாலும், சிறப்பான செயல்பாடுகளாலும், 18,415 குழந்தைகள் சிறப்பு பள்ளிகளிலிருந்து முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர். மேலும், தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் துவக்கப்பட்டதிலிருந்து 1,01,755 குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### 1.13.6. குழந்தைத் தொழிலாளர்களுக்கான பயன்கள் மற்றும் நலத்திட்டங்கள்

அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளான விலையில்லா சீருடைகள், பாட புத்தகங்கள், புத்தக பை, விளக்கப்படங்கள், பூகோள வரைபடங்கள், கணித உபகரண பெட்டி, கிரேயான்ஸ், காலணிகள், இலவசப் பேருந்து பயண அட்டை மற்றும் வாரம் ஐந்து முட்டையுடன் கூடிய மதிய உணவு ஆகியவற்றை தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பயிற்சி மையங்களில் பயிலும் மாணவர்களுக்கும் தமிழக அரசு வழங்கி வருகிறது. மேற்படிப்பு பயின்று வரும் முன்னாள் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப்பயிற்சி மைய மாணவர்கள்

அனைவருக்கும் மாதந்தோறும் தலா ரூ.500/- உதவித்தொகையாக அவர்களது கல்வி காலம் முடியும் வரை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், கடந்த நான்கு கல்வியாண்டுகளில், 3,769 மாணவர்களுக்கு ரூ.2.26 கோடி கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டது. 2015–2016-ஆம் கல்வியாண்டில் 1,026 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். தற்போது, இம்மாணவர்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பொறியியல் கல்லூரிகளிலும், நான்கு மாணவர்கள் மருத்துவ கல்லூரிகளிலும் பயின்று வருகின்றனர்.

## 1.14. தொழிலாளர் நல வாரியங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு திட்டங்கள்

### 1.14.1. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

தொழிலாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோர்களின் நலனை மேம்படுத்துவதற்காக, ஒரு நிதியத்தினை உருவாக்க வகைசெய்யும் நோக்குடன், தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972 தமிழக அரசால் இயற்றப்பட்டது. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 1975ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. அமைப்பு சார்ந்த தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை இவ்வாரியம் செயல்படுத்தி வருகிறது. தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை

செயல்படுத்துவதற்காக, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், தொழிற்சாலைகள், தோட்ட நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், கடைகள், உணவு நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்பவர்கள் ஆகியோரிடமிருந்து தொழிலாளர் நல நிதியை பெறுகிறது. மேற்படி நிறுவனங்களில் பணிபுரியும் ஒவ்வொரு தொழிலாளருக்கும், தொழிலாளரின் பங்குத் தொகையாக ரூ.10/—ம் வேலையளிப்பவரின் பங்குத் தொகையாக ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ.20/—ம் ஒவ்வொரு ஆண்டுக்கும் பெறப்படுகிறது. ஒவ்வொரு தொழிலாளிக்காகவும் ஆண்டிற்கு ரூ.10/— வீதம் அரசின் பங்காக வழங்கப்படுகிறது. இது தவிர, தொழிலாளர் நல சட்டமீறல்கள் மீது நீதிமன்றத்தால் விதிக்கப்படும் அபராதத் தொகை மற்றும் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் விதிகளை மீறியமைக்காக நிறுவனங்களிடமிருந்து தொழிலாளர் துறையின் அமலாக்க அதிகாரிகளால் வசூலிக்கப்படும் இணக்கக் கட்டணமும் வாரியத்தில் நல நிதியாகப் பெறப்படுகிறது.

வாரிய உறுப்பினர்களுக்காக, வாரியம் தனது 57 நல மையங்களின் வாயிலாக, பாலர் பள்ளி, தையல் வகுப்புகள் மற்றும் படிப்பக வசதிகளை வழங்கி வருகிறது. 2015—2016—ஆம் ஆண்டில் சுமார் 17,957 தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச்

சார்ந்தவர்கள் ரூ.1.12 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பெற்றுள்ளனர். 2011–2016 வரையிலான காலத்தில், 98,954 தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் ரூ.5.28 கோடி மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை பெற்றுள்ளனர்.

மேலும், கல்வி உதவித் தொகை, அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கான கல்வி ஊக்கத் தொகை, பாடநூல் உதவித் தொகை, அடிப்படை கணினி பயிற்சி, திருமண உதவித் தொகை, மூக்குக்கண்ணாடி, தட்டச்சு/சுருக்கெழுத்து பயிற்சி, காதுகேட்கும் கருவி, செயற்கை உறுப்பு, மூன்று சக்கர வாகனம், இயற்கை மரணம், விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கு ஆகியவைகளுக்கான உதவித்தொகைகள் வாரிய உறுப்பினர்களுக்கும் அவரைச் சார்ந்தோருக்கும் இவ்வாரியத்தால் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் அமைப்புரீதியான தொழிலாளர்கள் விபத்தினால் மரணமடைந்தால் உதவித் தொகையாக ரூ.1,00,000–மும் இயற்கை மரணம் ஏற்பட்டால் உதவித் தொகையாக ரூ.25,000–மும் வழங்குகிறது. இத்துடன், நல ஆக்க மையங்கள் மூலமாக காசநோய்க்கான சிறப்பு சிகிச்சைகள், தொழிலாளர்களுக்கென விடுமுறை இல்லங்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கென ஓய்வு இல்லங்கள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வேலையளிப்போர் மற்றும்

தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் "உழைப்பவர் உலகம்" என்ற மாதாந்திர பத்திரிக்கையும் வெளியிடப்பட்டு வருகிறது.

டி.எம்.எஸ். வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின், 37 ஆண்டுகள் பழமையான அடுக்குமாடிக் கட்டடம் ரூ.72.50 இலட்சம் செலவில் 2015–2016–ம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டது.

### 1.14.2. அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள்

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்கும் சட்டத்தை இயற்றியதன் மூலம் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1982 மற்றும் அது தொடர்பான திட்டங்கள், இச்சட்டத்தின் கீழான அட்டவணையில் குறிப்படப்பட்டுள்ள, 69 தொழில் இனங்களில் ஈடுபட்டுள்ள அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்களை வழங்கி வருகின்றன.

பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், சுகாதாரம், மகப்பேறு, இயற்கை மரணம், விபத்து மரணம், ஈமச் சடங்கு, விபத்து ஊனம், மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் ஆகிய நலத் திட்ட உதவிகள் வழங்கிட இத்திட்டங்கள் வழிவகை செய்கின்றன.

கீழ்க்கண்ட 17 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களை அரசு அமைத்துள்ளது.

| வ. எண் | **வாரியங்களின் பெயர்** |
|---|---|
| 1. | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் |
| 2. | தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் |
| 3. | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் |
| 4. | தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 5. | தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம் |
| 6. | தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 7. | தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 8. | தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 9. | தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 10. | தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் |
| 11. | தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம் |
| 12. | தமிழ்நாடு பொற்கொல்லர்கள் நல வாரியம் |
| 13. | தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 14. | தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நல வாரியம் |
| 15. | தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர்கள் நல வாரியம். |

| | |
|---|---|
| **16.** | தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் |
| **17.** | தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நல வாரியம் |

**(i) நலத்திட்ட நிர்வாகம்**

அமைப்புசாரா தொழிலாளர்களின் பதிவு, புதுப்பித்தல், கேட்பு மனு பரிசீலனை மற்றும் உதவித்தொகைகள் வழங்குதல் ஆகிய பணிகளை **32** மாவட்டங்களிலும், மாவட்ட தொழிலாளர் அலுவலர்கள் (சமூக பாதுகாப்பு திட்டம்) நிர்வகித்து வருகின்றனர்.

வாரிய உறுப்பினர்களுக்கு உரிய காலத்தில், நலத்திட்ட பயன்கள் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக, மாவட்ட அலுவலக செயல்பாடுகளை கண்காணிக்கும் பொறுப்பு, மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான மாவட்ட கண்காணிப்பு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்கள் மற்றும் நல வாரியங்களின் தலைமை அலுவலகங்களின் பணிகள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. மேலும், பதிவு மற்றும் பதிவினை புதுப்பிக்கும் நேர்வில் தொழிலாளர்களின் புகைப்படம் மற்றும் அவர்களின் விவரங்கள் இணையதள மென்பொருள் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன.

அனைத்து நலத் திட்ட உதவிகளும் பாரத ரிசர்வ் வங்கியின் மின்னணு பரிமாற்றம் மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படுகிறது.

**(ii) நிதி ஆதாரங்கள்**

கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியின் மொத்த கட்டுமான மதிப்பீட்டில் பெறப்படும் ஒரு சதவிகித பங்களிப்புத் தொகையினைப் பயன்படுத்தி தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தால் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2015–2016–ம் ஆண்டில் ரூ.355.06 கோடி நிதியாக பெறப்பட்டுள்ளது.

அதேபோன்று, சாலைகளில் பயணிகள் அல்லது பொருட்களை ஏற்றிச் செல்லும் வர்த்தக வாகனங்களின் உரிமையாளர்களிடமிருந்து, தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டம், 1974–ன்படி வசூலிக்கப்படும் ஒரு சதவிகித மோட்டார் வாகன கூடுதல் வரியினை நிதியாக தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியம் பெறுகிறது. 2015–2016–ம் ஆண்டில் ரூ.11.06 கோடி நிதியாக பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களுக்கு நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு தமிழக அரசு மானியம் வழங்குகிறது. 2015–16–ம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீட்டில் ரூ.70 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. அமைப்புசாரா நலவாரியங்கள் துவங்கப்பட்ட நாள் முதல், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியத்தில் 25.90 இலட்சம் தொழிலாளர்களும், இதர 16 நலவாரியங்களில் 40.60 இலட்சம் தொழிலாளர்களும் பதிவு செய்துள்ளனர்.

### (iii) வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள்:

பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு பின்வரும் நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

| வ. எண் | உதவித்தொகைகள் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1. | விபத்து நிவாரணத் திட்டம் | |
| | அ) விபத்து மரணம்<br>ஆ) விபத்து ஊனம் (ஊனத்தின் தன்மைக்கேற்ப)<br>இ) செயற்கை உறுப்புகள் மற்றும் சக்கர நாற்காலி<br>ஈ) பணியிடத்தில் விபத்து மரணம் (பதிவுபெற்ற மற்றும் பதிவு பெறாத கட்டுமான தொழிலாளர்கள் | 1,00,000/–<br>1,00,000/– வரை<br>மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் நிர்ணயிக்கும் தொகை<br>ரூ.5,00,000/– |
| 2. | இயற்கை மரண உதவித்தொகை | 15,000/– |
| 3. | ஈமச்சடங்கு உதவித்தொகை | 2,000/– |

| | | | |
|---|---|---|---|
| 4. | கல்வி உதவித் தொகை<br>அ) | 10ம் வகுப்பு படிப்பதற்கு<br>(பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,000/– |
| | ஆ) | 10ம் வகுப்பு தேர்ச்சி | 1,000/– |
| | இ) | 11ம் வகுப்பு படிப்பதற்கு<br>(பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,000/– |
| | ஈ) | 12ம் வகுப்பு படிப்பதற்கு<br>(பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,500/– |
| | உ) | 12ம் வகுப்பு தேர்ச்சி | 1,500/– |
| | ஊ) | முறையான பட்டப்படிப்பு<br>– வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்பவர்<br>– விடுதியில் தங்கி படிப்பவர் | <br>1,500/–<br>1,750/– |
| | எ) | முறையான பட்டமேற்படிப்பு<br>– வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்பவர்<br>– விடுதியில் தங்கி படிப்பவர் | <br>4,000/–<br>5,000/– |
| | ஏ) | முறையான தொழில் நுட்ப பட்டப்படிப்பு<br>– வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்பவர்<br>– விடுதியில் தங்கி படிப்பவர் | <br>4,000/–<br>6,000/– |
| | ஐ) | முறையான தொழில்நுட்ப<br>பட்டமேற்படிப்பு<br>– வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்பவர்<br>– விடுதியில் தங்கி படிப்பவர் | <br>6,000/–<br>8,000/– |
| | ஒ) | முறையான ஐ.டி.ஐ. அல்லது<br>பாலிடெக்னிக் படிப்பு<br>– வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்பவர்<br>– விடுதியில் தங்கி படிப்பவர் | 1,000/–<br>1,200/– |
| 5. | திருமண உதவித்தொகை<br>அ) ஆண்<br>ஆ) பெண் | | <br>3,000/–<br>5,000/– |
| 6. | மகப்பேறு உதவித்தொகை மருத்துவ<br>ரீதியிலானகருக்கலைப்பு / கருச்சிதைவு | | 6,000/–<br>3,000/– |
| 7. | கண் கண்ணாடி வாங்கிட உதவித் தொகை | | 500/–வரை |

| | | |
|---|---|---|
| 8. | ஓய்வூதியம் | 1000/–பிரதி மாதம் |
| 9. | குடும்ப ஓய்வூதியம் (கட்டுமான தொழிலாளர்களுக்கு மட்டும்) | 400/–பிரதி மாதம். |

**(iv) நல வாரியங்களின் சாதனைகள்**

17 அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியங்களின் செயல்பாடுகள் பின்வருமாறு :

| **வாரியத்தின் பெயர்** | **பதிவு (தொழிலாளர்களின் எண்ணிக்கை இலட்சத்தில்)** | |
|---|---|---|
| | **2011–2016** | **2015–2016** |
| தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியம் | 4.95 | 1.39 |
| தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் மற்றும் இதர 15 வாரியங்கள் | 10.31 | 2.06 |
| மொத்தம் | **15.26** | **3.45** |

பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட நலத்திட்ட உதவி விவரங்கள் பின்வருமாறு :

| வாரியங்கள் | 2011-2016 | | 2015-2016 | |
|---|---|---|---|---|
| | பயனாளிகள் (இலட்சத்தில்) | தொகை ரூ. (கோடியில்) | பயனாளிகள் (இலட்சத்தில்) | தொகை ரூ. (கோடியில்) |
| தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியம் | 6.87 | 216.74 | 1.66 | 61.86 |
| தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் மற்றும் இதர 15 வாரியங்கள் | 14.74 | 352.64 | 1.97 | 64.03 |
| மொத்தம் | **21.61** | **569.38** | **3.63** | **125.89** |

## 1.15. நுகர்வோர் பாதுகாப்பு

### 1.15.1 சட்டமுறை எடையளவுச் சட்டம், 2009

சட்டமுறை எடையளவுச் சட்டம், 2009 மற்றும் சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 2011, எடை மற்றும் அளவைகளின் தரத்தை உறுதி செய்வதோடு நுகர்வோர் நலனை பாதுகாக்கிறது. வணிக மற்றும் வியாபார நிறுவனங்களில் உள்ள எடைகள், அளவைகள் மற்றும் இந்நிறுவனங்களின் வாயிலாக விற்கப்படும் / பகிர்ந்தளிக்கும் பொருட்களின் எடைகள், அளவைகள் மற்றும் எண்ணிக்கைகள் முறைப்படுத்தப்படுகின்றன. நுகர்வோர் நலனை பாதுகாத்திடவும், எடையளவுகளைப் பயன்படுத்தும் வர்த்தகர்கள் மற்றும் வணிகர்கள் செய்யும் தவறுகளை தவிர்க்கவும், இருதலை உளிகளைப் பயன்படுத்தி முத்திரையிடும் முறையினை மாநில அரசு 2016ம் ஆண்டு அறிமுகப்படுத்தியுள்ளது.

சட்டமுறை எடையளவு சட்டத்தினை பலப்படுத்துதல் குறித்து, சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட மண்டல பயிற்சி பட்டறைகளில், நுகர்வோர் நலனை பாதுகாத்தல் குறித்து தயாரிக்கப்பட்ட கையேடு, அனைத்து தொடர்புடைய நபர்களுக்கும் வழங்கப்பட்டது. தலைகவச விற்பனையில் அதிகபட்ச விற்பனை விலை, விதி மீறல்களைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு முழுவதும்

சிறப்பு திடீராய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. உப்பு உற்பத்தி இடங்கள், நகைக் கடைகள், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், வணிக பெருவளாகங்கள், புனித தலங்கள் மற்றும் சுற்றுலா தலங்கள் ஆகிய இடங்களில் அதிகபட்ச விற்பனை விலையை விட கூடுதல் விலைக்கு பொருட்கள் விற்பதை தடுக்கும் வகையில் சிறப்பாய்வுகள் சட்டமுறை எடையளவு சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

2015–2016–ஆம் ஆண்டில், ரூ.2.56 இலட்சம் உரிம கட்டணமாகவும், ரூ.26.15 கோடி முத்திரைக் கட்டணமாகவும் பெறப்பட்டுள்ளது. இக்காலத்தில் 3,43,794 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 15,332 பல்வேறு முரண்பாடுகள் கண்டறியப்பட்டு ரூ.1.26 கோடி இணக்கக் கட்டணமாக விதிக்கப்பட்டது. கடந்த ஐந்தாண்டு காலத்தில், ரூ.12.30 இலட்சம் உரிம கட்டணமாகவும், ரூ.121.78 கோடி முத்திரை கட்டணமாகவும் பெறப்பட்டுள்ளது. இக்காலத்தில், 18,66,721 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 62,589 பல்வேறு முரண்பாடுகள் கண்டறியப்பட்டு ரூ.5.77 கோடி இணக்கக் கட்டணமாக விதிக்கப்பட்டது.

### 1.15.2. சட்டமுறை எடையளவு (பொட்டலப்பொருட்கள்) விதிகள், 2011

வர்த்தகப் பொருட்களை பொட்டலமிடும் ஒவ்வொருவரும், இவ்விதியின் கீழ் பதிவுச் சான்று பெறவேண்டும். 2015–2016–ஆம் ஆண்டில், பொட்டலப் பொருட்களுக்கு பதிவு சான்றிதழ்கள் வழங்குவதற்காக பதிவுக் கட்டணமாக ரூ.1.38 இலட்சம் பெறப்பட்டுள்ளது. இவ்வாண்டில் 1,44,519 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 3,668 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு ரூ.96.67 இலட்சம் இணக்கக்கட்டணமாக விதிக்கப்பட்டது.

2011–2016 ஆண்டில், பொட்டலப் பொருட்களுக்கு பதிவு சான்றிதழ்கள் வழங்குவதற்காக பதிவுக் கட்டணமாக ரூ.12.00 இலட்சம் பெறப்பட்டுள்ளது. இவ்வாண்டுகளில் 7,66,195 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 18,623 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு ரூ.4.10 கோடி இணக்கக் கட்டணமாக விதிக்கப்பட்டது.

### 1.16. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

மனிதவள மேலாண்மை துறையில், தொழில் நிறுவனங்களின் தேவைகளுக்கேற்ப, தொழில் முறை சார்ந்த திறன்மிகு மனிதவளத்தை அதிகரிக்க, 1973ம் ஆண்டில் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் உருவாக்கப்பட்டு,

1988–ம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு வருடாந்திர நிதி உதவியாக ரூ.2.17 கோடி வழங்குகிறது. இக்கல்வி நிலையம் தொழிலாளர் மேலாண்மையில் தொழிலாளர் தொடர்புடைய கல்விசார் பாட முறைகளையும் மற்றும் பல்வேறு பயிற்சிகளையும் நடத்தி வருகிறது.

சென்னை பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட இளங்கலை பட்டப்படிப்பு (தொழிலாளர் மேலாண்மை), முதுகலை பட்டப்படிப்பு (தொழிலாளர் மேலாண்மை) மற்றும் ஆராய்ச்சி படிப்புகளையும் நடத்தி வருகிறது. பணிபுரிவோருக்காக தொழிலாளர் நிர்வாகத்தில் ஓராண்டு பகுதி நேர முதுகலை பட்டயப்படிப்பும், தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும் என்ற ஓராண்டு பகுதிநேர (வார இறுதி) பட்டயப் படிப்பும் திறன்மிகு வகுப்பறைகளில் இக்கல்வி நிலையத்தால் வழங்கப்பட்டு வருகின்றன. இக்கல்வி நிலையத்தில் பயின்ற மாணவர்கள் மத்திய, மாநில அரசுகளின் தொழிலாளர் துறைகளிலும் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிலும் மனிதவள மேம்பாட்டு உயர் அலுவலர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளனர். 2015–16–ம் கல்வியாண்டில் இந்நிறுவனத்தில் 253 மாணவர்கள் கல்வி பயின்றனர். இதே ஆண்டில், இக்கல்வி நிலையம் நடத்திய ஒன்பது கருத்தரங்குகள் / பயிற்சி வகுப்புகளில் 945 நபர்கள்

பங்குபெற்றுள்ளனர். கடந்த ஐந்தாண்டுகளில், இந்நிறுவனத்தில் **1,116** மாணவர்கள் கல்வி பயின்றனர். இதே கால கட்டத்தில் இக்கல்வி நிலையம் நடத்திய **110** கருத்தரங்குகள் / பயிற்சி வகுப்புகளில் **8,813** நபர்கள் பங்கு பெற்றுள்ளனர்.

## 1.17. தமிழ்நாடு கட்டுமான கழகம்

இன்றைய சூழ்நிலையில் கட்டுமான தொழிலில் புதிய தொழில்நுட்பமும், நவீன கருவிகளும் பயன்படுத்தப்படுவதால், கட்டுமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் தொழில் திறனை மேம்படுத்துவது அவசியமாகிறது. கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் அவரைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு மின்சாரம், வர்ணம் பூசுதல், மரவேலை, கட்டுமானம், நிலஅளவை, குழாய் பொருத்துதல் ஆகிய கட்டுமான பிரிவுகளில் திறன் பெறும் வகையில் கட்டணமின்றி திறன் எய்தும் பயிற்சி அளிப்பதற்காக, தமிழ்நாடு கட்டுமான கழகம் ஏற்படுத்தப்பட்டது. குறுகியகால திறன் எய்தும் பயிற்சி திட்டத்தின் கீழ், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் வாயிலாக இப்பயிற்சி வழங்கப்படுகிறது.

### 1.18. கடந்த ஐந்து ஆண்டுகளில் சிறப்பு செயலாக்கம்

**2011-2012**

- அனைத்து நலத்திட்ட உதவித் தொகைகளும், 17 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களிலும் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு, அவர்களது வங்கி கணக்கிற்கு பாரத ரிசர்வ் வங்கியின் மின்னணு பரிவர்த்தனை மூலம் வழங்கப்பட்டு வருகிறது.
- அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் ஓய்வூதியதாரர்களின் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.500/–லிருந்து ரூ.1,000/–மாக உயர்த்தப்பட்டுள்ளது.

**2012-2013**

- அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகள் முதுநிலை கல்வி பயில்வதற்கான கல்வி உதவித் தொகை ரூ.2,000/– கூடுதலாக உயர்த்தப்பட்டது.

**2013-2014**

- தொழிலாளர்களுக்கு, கணினி மூலம் எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றும் தனிநபரின் ஏனைய விபரங்கள் இணையதள மென்பொருள் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு, புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

**2014-2015**

❖ தொழிலாளர் துறைக்கென 20 மாவட்டங்களில் ரூ.40.50 கோடி செலவில் தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்கள் உள்ளிட்ட, ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலக வளாகங்களும், திருச்சி, தூத்துக்குடி, திண்டுக்கல், ஈரோடு மற்றும் வேலூர் மாவட்டங்களில் ரூ. 3.25 கோடி செலவில் ஐந்து சட்டமுறை எடையளவு ஆய்வகங்களும் கட்ட அரசு உத்தரவிட்டுள்ளது.

❖ வெளி மாநிலங்களிலிருந்து இடம்பெயர்ந்து தமிழ்நாட்டில் கட்டுமான தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களையும் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்ய அனுமதிப்பதன் வாயிலாக, வெளி மாநில இடம் பெயர் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை நீட்டித்து வழங்குவதில் தமிழ்நாடு முன்னோடியாக திகழ்கிறது.

❖ பணியில் ஈடுபட்டு இருக்கும்போது பணியிடங்களில் விபத்து ஏற்பட்டு இறக்கும் பதிவு பெற்ற கட்டுமான தொழிலாளர்களுக்கான நிதி உதவி ரூபாய் ஒரு லட்சத்திலிருந்து ஐந்து லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

- ❖ கட்டுமான தொழிலாளர்களின் நலனுக்காக நகரும் மருத்துவமனைகள் மூலம் அவர்கள் பணியிடத்திலேயே சுகாதார வசதிகள் வழங்கப்படுகின்றன.
- ❖ கட்டுமான பணியிடங்களில் தங்கியுள்ள கட்டுமான தொழிலாளர்களின் குழந்தைகள் முறையான பள்ளிகள் / அனைவருக்கும் கல்வி திட்டப் பள்ளிகளுக்கு செல்ல, போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
- ❖ கட்டுமான தொழிலாளர்கள் கட்டுமான பணியிடங்களில் தற்காலிகமாக தங்குவதற்கு அனைத்து வசதிகளுடன் கூடிய தூங்கும் அறைகள் (Dormitories) கட்டப்பட்டு வருகின்றன.
- ❖ கட்டுமான தொழிலாளர்களது குழந்தைகளின் வளர்ச்சிக்கு தேவையான ஊட்டச்சத்தினை வழங்கிடும் வகையில், அங்கன்வாடி வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**2015 – 2016**

- ❖ அமைப்புசாரா தொழிலாளர்கள் பதிவு செய்யும் முறையை எளிமைப்படுத்தவும், நலத் திட்ட உதவிகளை விரைவாகப் பெறுவதற்கும், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு பெறப்படும் பங்களிப்புத் தொகையினை நேரடியாக செலுத்துவதற்கும் இணையதள வசதி (Online)

ரூ.1.05 கோடி செலவில் உருவாக்க அரசு ஆணையிட்டுள்ளது.

- ❖ தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர்கள் மற்றும் வெளி மாநில தொழிலாளர்கள் வசதிக்காக கட்டணமில்லா தொலைபேசி எண்ணுடன் பன்மொழி உதவி மையம் ரூ.9.95 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

- ❖ தனிநபர் விபத்து நிவாரணம் ரூ.5,00,000/– கட்டுமான பணியிடத்தில் இறக்கும் பதிவுபெறாத கட்டுமான தொழிலாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

- ❖ இந்தியாவிலேயே முதன்முறையாக எடையளவுகள் மற்றும் பொட்டலப் பொருட்கள் மீதான புகார்கள் குறித்து, நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தீர்வு காணவும் எளிய முறையிலான 'சட்டமுறை எடையளவு புகார் கண்காணிப்பு முறை செயலி'க்கான மென்பொருள், வலைதள அடிப்படையில் கைப்பேசியிலும் பயன்படுத்தும் வசதியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- ❖ நுகர்வோர் நலன் காக்கும் சட்டமுறை எடையளவுகள் சட்டம் உள்ளிட்ட பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் பதிவு, உரிமம் மற்றும் அறிக்கை தாக்கல் ஆகியவற்றை இணையதளத்தில் மேற்கொள்வதன் மூலம்,

சுலப வர்த்தக முயற்சிகள் (Ease of doing business) ஊக்குவிக்கப்படுகின்றன.

- மின் ஆளுமை (e-goverance) திட்டத்தை திறம்பட செயல்படுத்திட, மாவட்ட தொழிலாளர் துறை அலுவலகங்களுக்கு அகன்ற கற்றை வசதி (Broadband) வழங்கப்பட்டுள்ளது.

## 1.19. அடுத்த 5 ஆண்டுகளுக்கான தொலை நோக்கு திட்டங்கள்

- குழந்தை தொழிலாளர் முறை இல்லாத தமிழ்நாடு உருவாக்கும் நோக்கில் பணிகள் மேற்கொள்ளுதல்.
- சுலப வர்த்தகத்திற்காக (Ease of doing business) தொழிலாளர் நல சட்டங்களை எளிதாக்குவதோடு, தொழிலாளர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்துகொள்ளுதல்.
- மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயர்ந்து கட்டுமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை சமூகப் பாதுகாப்பு திட்டங்களின் கீழ் அதிக எண்ணிக்கையில் கொண்டு வருதல்.

- ❖ தொழிலாளர் நலச்சட்டங்களின் கீழ் தாக்கல் செய்யப்படும் வழக்குகளைக் கண்காணிக்க "இணையதள வழக்கு மேலாண்மை" முறையினை அறிமுகப்படுத்துதல்.
- ❖ தமிழ்நாடு கட்டுமான கழகத்தின் மூலம் கட்டுமான தொழிலாளர்களுக்கு மறுபயிற்சி அளித்தல், திறன் மேம்படுத்துதல் மற்றும் ஏற்கனவே அறிந்திருக்கும் திறன்களை அங்கீகரித்து சான்றிதழ் வழங்குதல்.

*****

## 2. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககமானது, தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலாளர் நல சட்டங்களை அமல்படுத்துவதில் கடைபிடிக்கும் இணக்கமான அணுகுமுறை, முதலீடு செய்வதற்கு உகந்த சூழ்நிலையினை இம்மாநிலத்தில் உருவாக்கியுள்ளதால் பன்னாட்டு நிறுவனங்கள் தங்களது பல்வேறு உற்பத்தி அலகுகளை இங்கு நிறுவுவதற்கு முன்வந்துள்ளனர். பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான பணி சூழ்நிலையை உறுதிப்படுத்துவதோடு சட்ட அமலாக்கத்தை நடைமுறைக்கேற்ற வகையில் அரசு செயல்படுத்தி வருவது விரைவான தொழில் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது. தமிழ்நாடு மாநிலமானது வாகன தயாரிப்பு, இரசாயனம், பஞ்சாலை, தோல், மின்னணு, பொறியியல், பட்டாசு மற்றும் தீப்பெட்டி போன்ற தொழிற்சாலைகள் உருவாவதற்கு முன்மாதிரியாக திகழ்ந்து வருவதோடு, வாகன தயாரிப்பில் சென்னையும், ஆயத்த ஆடையில் திருப்பூரும், பொறியியல் துறையில் கோயமுத்தூரும் உலகப் புகழ் பெற்ற மையங்களாகத் திகழ்கின்றன.

31.03.2016 அன்றுள்ளவாறு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 43,372 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டு 19,87,785 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

I. தொழிற்சாலைகள் சட்டம், **1948** மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களை தொழிற்சாலைகளில் அமலாக்குதல்.

II. உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேம்பாடு குறித்த செயல்பாடுகள்.

III. கட்டுமான பணியிடங்களில் கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணிநிலைமைகள் மற்றும் பணிமுறைப்படுத்துதல்) சட்டம், **1996** அமலாக்குதல்.

## 2.1. தொழிற்சாலைகளில் தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களின் அமலாக்கம்

தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு மற்றும் நல வசதிகளை உறுதிசெய்யும் பொருட்டு இவ்வியக்கக அலுவலர்களால் காலமுறைப்படி ஆய்வுகள் செய்யப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வியக்கக அலுவலர்களால் தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் கால அளவு கீழ்க்கண்டவாறு முறைப்படுத்தப்பட்டுள்ளது.

(அ) அபாயகரமான பணி மற்றும் இடர்தரும் செயல்முறைகள் இல்லாத, சிறு தொழில் நிறுவன சான்று பெற்ற தொழிற்சாலைகளில், தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்து புகார்கள் ஏதும் இல்லாத நிலையிலும், விபத்துக்கள் ஏதும் ஏற்படாத நிலையிலும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

(ஆ) சிறு தொழில் சான்று பெற்ற ஆனால், அபாயகரமான பணி மற்றும் இடர்தரும் செயல்முறைகளைக் கையாளும் தொழிற்சாலைகள் மற்றும் சிறு தொழில் சான்று பெறாத தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் உடல் நலம், பாதுகாப்பு மற்றும் நல வசதிகளை உறுதி செய்யும் பொருட்டு இத்தொழிற்சாலைகள் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன.

(இ) தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் நிகழக்கூடிய தீ மற்றும் வெடி விபத்துகளை குறைக்கவும் அத்தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவதை தவிர்க்கவும் இத்தொழிற்சாலைகள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன.

(ஈ) மேலும், சட்டங்களை சிறப்பாக அமல்படுத்த சிறப்பு ஆய்வுகள், விடுமுறை நாள் ஆய்வுகள் மற்றும் சோதனை ஆய்வுகள் கூடுதலாக மேற்கொள்ளப்படுகின்றன.

2015-2016 ஆம் ஆண்டில் இவ்வியக்கக அலுவலர்களால் 49,194 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

**2.2. பட்டாசு தொழிற்சாலை ஆய்வுகள்**

பட்டாசு உற்பத்தி செய்ய கையாளப்படும் இரசாயனங்கள் மிகவும் அபாயகரமானது என்பதால் அவை பாதுகாப்பாக கையாளப்படாவிட்டாலும், பாதுகாப்பான முறையில் சேமித்து வைக்கப்படாவிட்டாலும் வெடி விபத்து ஏற்பட ஏதுவாகும். அதனால், அதிக எண்ணிக்கையில் பட்டாசு தொழிற்சாலைகள் அமைந்துள்ள விருதுநகர் மாவட்டத்தில், குறிப்பாக பண்டிகைகளை ஒட்டிய காலகட்டங்களில், பாதுகாப்பான பணிநிலையையும் பாதுகாப்பான வேலைமுறையையும் கண்காணிப்பதற்கு, ஒவ்வொரு வருடமும் வருவாய், காவல் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்பு பணி ஆகிய துறை அலுவலர்களுடன் இணைந்து சிறப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இக்குழுக்களின் ஆய்வுகளின் போது, பட்டாசு தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் அபாயகரமான

பொருட்களை பாதுகாப்பாக சேமித்தல் மற்றும் கையாளுதலில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து நிர்வாகத்தினர் மற்றும் தொழிலாளர்களுக்கு எடுத்துரைக்கப்படுகிறது. மேலும் விதி மீறல்கள் காணப்படும் நிகழ்வுகளில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கடந்த ஐந்தாண்டுகளில், பண்டிகை காலங்களில் 4,863 குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக விபத்துக்கள் பெருமளவில் குறைந்துள்ளன.

### 2.3. நடமாடும் கண்காணிப்புக் குழு

பட்டாசு தொழிற்சாலைகள் அபாயகரமானது மட்டுமின்றி அதிகப்படியான தொழிலாளர்களைக் கொண்டதுமாகும். விருதுநகர் மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் பட்டாசு தொழிற்சாலைகள் உள்ளதால், அத்தொழிற்சாலைகளில் பாதுகாப்பு வழிமுறைகளை கூடுதல் முனைப்புடன் அமலாக்கம் செய்யவும் பாதுகாப்பான பணி நிலையை உறுதி செய்யவும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் தலைமையில், பட்டாசு தொழிற்சாலைகளுக்கு பிரத்யேகமாக ஒரு நடமாடும் கண்காணிப்புக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழு பட்டாசு தொழிற்சாலைகளில் திடீர் ஆய்வுகள் செய்து, அங்குள்ள தொழிலாளர்களது பணி பாதுகாப்பை தொடர்ந்து கண்காணிக்கிறது. மேலும் இக்குழு பட்டாசு

தொழிற்சாலைகளில் விபத்துக்கள் ஏற்படாவண்ணம், பணியிடத்தில் பாதுகாப்பு வழிமுறைகளை கடைபிடிப்பது குறித்து தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினருக்கு எடுத்துரைத்து விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

கடந்த மூன்றாண்டுகளில் 1501 குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடமாடும் கண்காணிப்புக் குழுவின் சிறப்புமிக்க செயல்பாடுகளால் தொழிற்சாலைகளில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு விதிமுறைகளை நிர்வாகத்தினர் நன்கு அறிந்துள்ளனர். விதிமீறல்கள் காணப்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 2.4. குழந்தைத் தொழிலாளர் தடுப்பு முறை

தொழிற்சாலைகள் சட்டம், 1948ன் பிரிவு 67ல் வரையறுக்கப்பட்டவாறு தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர் பணிமுறையை அகற்றுதல் தொடர்பாக செம்மையான முறையில் சட்ட அமலாக்கம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், அபாயகரமான தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவதை தவிர்க்கும் வகையில் ஒவ்வொரு மாதமும் வருவாய் துறை, காவல் துறை மற்றும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட குழு அலுவலர்களுடன் இணைந்து குழு ஆய்வுகளும்

மேற்கொள்ளப்படுகின்றன. 2015-2016 ஆம் ஆண்டில் 1,027 குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆய்வுகளின் போது காணப்பட்ட முரண்பாடுகள் தொடர்பாக தொழிற்சாலைகள் நிர்வாகத்தினர் மீது ஐந்து வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு ரூ.60,000/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் 6,273 குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, குழந்தைத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவதால் ஏற்படும் மோசமான விளைவுகள் குறித்து நிர்வாகம், ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**2.5. புகார்களின் மீதான விசாரணை**

தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்களுக்கு தலையாய முன்னுரிமை அளிக்கப்பட்டு, உடனுக்குடன் விசாரிக்கப்பட்டு குறைகளுக்கு தீர்வு காண உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2015-2016 ஆம் ஆண்டில் 615 புகார்கள் விசாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டன.

### 2.6. அபாயகரமான செயல்முறைகள் உள்ள தொழிற்சாலைகள்

தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் அபாயகரமான மூலப்பொருட்கள் அல்லது இரசாயனங்களால் தொழிலாளர்களுக்கு விபத்துகள் அல்லது அவர்களது உடல்நலத்திற்கு ஊறு விளைவிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ அல்லது சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய நிலை ஏற்பட்டாலோ அத்தொழிற்சாலைகள் பெரும் விபத்து மற்றும் பேரபாய தொழிற்சாலைகள் என வகைபடுத்தப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 29 தொழில் செயல்முறைகள் அபாயகரமான தொழில் செயல்முறைகளாக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. 31.03.2016 அன்றைய நிலையில் நமது மாநிலத்தில் 145 தொழிற்சாலைகள் பெரும் விபத்து மற்றும் பேரபாய தொழிற்சாலைகள் என வகைபடுத்தப்பட்டுள்ளன.

பெரும் விபத்து மற்றும் பேரபாய தொழிற்சாலைகளிலிருந்து 31.03.2016 வரை 87 உள்வளாக அவசரகால ஆயத்த நிலை திட்டங்கள் பெறப்பட்டு அவைகளில் 54 திட்டங்களுக்கு சில நிபந்தனைகளுடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் அவசர காலகட்டத்தில் ஏற்படக்

கூடிய பிரச்சினைகளை சரியாக அளவீடு செய்து அதற்கான ஏற்பாடுகள் போதுமானதாக உள்ளதா என்பதை உறுதி செய்வதற்கு தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களின் மேற்பார்வையில் மாதிரி ஒத்திகைகள் காலமுறைப்படி நடத்தப்படுகின்றன. 2015-2016 ஆம் ஆண்டில் 140 மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன.

**2.7. மனை மதிப்பீட்டு குழு**

அபாயகரமான செயல்முறைகளைக் கொண்ட தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கும் அல்லது விரிவாக்கம் செய்வதற்கும், தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினரால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை ஆராய்ந்து முடிவெடுப்பதில் அரசுக்கு ஆலோசனை வழங்க, தொழிற்சாலைகள் சட்டம், **1948–**ன்கீழ் வரையறுக்கப்பட்டவாறு "மனை மதிப்பீட்டுக் குழு" அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது பெறப்பட்ட விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும்போது, துவக்க நிலையிலேயே அத்தொழிற்சாலைகள் பாதுகாப்பான சூழ்நிலை மற்றும் பாதுகாப்பான பணி செயல்முறைகளுடன் இயங்குவதற்கு உரிய வழிமுறைகளை ஆய்ந்து அறிவுரை வழங்குகிறது. 2015-2016 ஆம் ஆண்டில் 41 விண்ணப்பங்கள் மனை மதிப்பீட்டுக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன.

## 2.8. கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996 மற்றும் தமிழ்நாடு விதிகள், 2006.

கட்டுமான பணியிடங்களில், கட்டுமான தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு மற்றும் நல வசதிகளை உறுதி செய்திடும் வகையில், கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996 மற்றும் தமிழ்நாடு கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகள், 2006 இவ்வியக்கக அலுவலர்களால் 2010 ஆம் ஆண்டு முதல் அமலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

அமலாக்கப் பணிகளோடு கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழில்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சியையும் அளிக்க பிரத்யேகமாக இவ்வியக்ககத்தில் கூடுதல் சட்ட அமலாக்க பிரிவு 2013 ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்களுக்கான தனி பிரிவு உருவாக்கப்படுவதற்கு முன்னதாக, கட்டுமான நிறுவனங்களை இச்சட்டத்திற்கு உட்படுத்த இயலாத நிலை

இருந்தது. இச்சட்டத்தின் கீழ் தனிப்பிரிவு உருவாக்கப்பட்டவுடன், 6,487 கட்டுமான நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, கட்டுமான தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

2015-2016 ஆம் ஆண்டில், 1,358 கட்டுமான நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், 301 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ரூ.5,39,000/- அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

## 2.9. கட்டடம் மற்றும் கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு

கட்டுமான நிறுவனங்கள் அதிகப்படியான தொழிலாளர்கள் செரிந்துள்ளவையாக இருப்பதோடு அதிக எண்ணிக்கையிலான விபத்துக்கள் நிகழ வாய்ப்புள்ள இடங்களாகவும் உள்ளன. மாநிலம் விட்டு மாநிலம் இடம்பெயர்ந்து பணிபுரியும் தொழிலாளர்கள் போதிய கல்வியறிவு இல்லாததாலும், பாதுகாப்பான பணி முறைகளை அறிந்துகொள்ளாமல் இருப்பதாலும் தங்கள் விலைமதிப்பற்ற உயிர்களைக் காத்துக்கொள்ளும் பொருட்டு அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டி அவர்களது தாய்மொழியிலேயே பாதுகாப்பு பயிற்சி அளிக்கும் முறை ஆரம்பிக்கப்பட்டது. கட்டுமான பணிகளில் ஈடுபட்டுள்ள

தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இவ்வியக்கக கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள்(பணி முறைப்படுத்தல் மற்றும் பணி நிலமைகள்) சட்ட அமலாக்க துணை இயக்குநர்களால் ஒவ்வொரு மாதமும் இரண்டு பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

கடந்த ஐந்து ஆண்டுகளில், **19,490** தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் **184** பாதுகாப்பு பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக அதிக அளவு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, விபத்துகள் குறைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினை பயன்படுத்தி **2015–2016–**ஆம் ஆண்டில் 41 பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 5,904 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## 2.10. உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேம்படுத்தும் செயல்பாடுகள்

### 2.10.1. உடல்நல மேம்பாட்டு செயல்பாடுகள்

இவ்வியக்ககத்தில் ஒரு தலைமை மருத்துவ அலுவலர் மற்றும் எட்டு மருத்துவ அலுவலர்களுடன் மருத்துவ பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. இவ்வலுவலர்கள் ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைகளில் பணிபுரியும்

தொழிலாளர்கள் மற்றும் உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு காலமுறைப்படி, மருத்துவ பரிசோதனைகள் செய்து, உடல்நல மேம்பாடு குறித்து தக்க தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு மருத்துவ அறிவுரைகளையும் வழங்கி வருகின்றனர். அத்துடன் தொழிற்சாலைகளில் பணிபுரியும் வளரிளம் பருவத்தினருக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு தகுதிச்சான்றுகளும் வழங்கப்படுகின்றன. குழந்தைத் தொழிலாளர்களின் வயதினை உறுதி செய்திடும் பொருட்டு குழந்தைத் தொழிலாளர் குழு ஆய்வுகளின்போதும் இம்மருத்துவ அலுவலர்கள் உடன் செல்கின்றனர். 2015-2016 ஆம் ஆண்டில் மருத்துவ அலுவலர்கள் அபாயகரமான செயல்முறைகளில் ஈடுபடும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் 34,646 தொழிலாளர்களுக்கும், தொழிற்சாலைகளில் உள்ள உணவகங்களில் பணிபுரியும் 8,026 தொழிலாளர்களுக்கும் மருத்துவ சான்றிதழ்களும், 32,704 வளரிளம் பருவத்தினருக்கு தகுதிச் சான்றிதழ்களும் வழங்கியுள்ளனர்.

**2.10.2. இரைச்சலின் அளவினை கண்காணித்தல்**

இவ்வியக்ககம், தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அதிகப்படியான இரைச்சலால் ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்க சீரிய முயற்சிகளை மேற்கொண்டு

வருகிறது. அதிகப்படியான இரைச்சலை ஒலி அளப்பான் கருவிகள் மூலம் அளவிட்டு, தொழிலாளர்களை அதன் பாதிப்பிலிருந்து பாதுகாத்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆய்வுகளின் போது இது சம்பந்தமாக தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்படுவதுடன், தேவைப்படும் நிகழ்வுகளில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

### 2.10.3. பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு

விபத்து நிகழ்வுகளைக் குறைக்கும் வகையில் இவ்வியக்கக களப்பணி அலுவலர்கள், பாதுகாப்பு மேம்பாட்டு பணிகளான பயிற்சி வகுப்புகள், பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரங்கள், பாதுகாப்பு ஒத்திகைகள் போன்றவற்றை அயராத முனைப்புடன் மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்காக, மூன்று பாதுகாப்பு பிரச்சார குழுக்கள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மண்டலங்களில் இவ்வியக்ககத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுக்கள் காலமுறைதோறும் இரசாயனம், பட்டாசு, தோல்பதனிடும் தொழிற்சாலை, வெளுத்தல் மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்கு சென்று அத்தொழிற்சாலைகளின் பாதுகாப்பு வழிமுறைகளை பரிசீலனை செய்கின்றனர். இக்குழுக்கள் தொழிற்சாலையில் விபத்துகளை

தடுப்பதற்கு பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நிர்வாகத்தினர் மற்றும் தொழிலாளர்களுக்கு எடுத்துரைக்கின்றன. இக்குழுக்கள் 72 பாதுகாப்பு பிரச்சாரங்களை 2,895 நபர்கள் பயனடையும் வகையில் 2015 - 2016 ஆம் ஆண்டில் நடத்தியுள்ளன.

இவ்வியக்கக அலுவலர்களால் காலமுறைப்படி தொழிற்சாலை வளாகத்திலேயே, பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

2015-2016 ஆம் ஆண்டில் 20,118 தொழிலாளர்கள் பயனடையும் வகையில் 433 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், தொழிலக பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தேசிய பாதுகாப்புக் குழுமம் போன்ற அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து தொழிற்சாலை நிர்வாகனத்தினரும், நேரடி தொழிலாளர்களும், ஒப்பந்தத் தொழிலாளர்களும் பாதுகாப்பு விழிப்புணர்வு பெறும் வண்ணம் கருத்தரங்குகள் நடத்தி வருகிறது. **2015–2016** ஆம் ஆண்டில் 638 தொழிலாளர்கள் பயனடையும் வகையில் நான்கு கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

**2.10.4. அழுத்தக் கலன் பாதுகாப்பினை உறுதி செய்தல்**

தொழிலாளர் நல சட்டங்களை அமல்படுத்துவதோடு மட்டுமல்லாமல் தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள அழுத்தக்கலன்கள் பாதுகாப்புடன் செயல்படும் வழிமுறைகளும் இவ்வியக்கக அலுவலர்களால் உறுதி செய்யப்படுகின்றன. இந்திய கொதிகலன்கள் சட்டத்தின் கீழ்வரும் நீராவி கொதிகலன்களைத் தவிர்த்து வாயு மண்டல காற்று அழுத்தத்திற்கு மேல் (above atmospheric pressure) செயல்படும் அனைத்து அழுத்தக் கலன்களும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வெளிப்புறச் சோதனையும், ஆண்டுக்கு ஒரு முறை உட்புறச் சோதனையும் அல்லது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நீரழுத்தச் சோதனையும் அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நுண்ணொலிச் சோதனையும் அமலாக்க அதிகாரிகளால் செய்யப்படுகின்றன. 2015-2016 ஆம் ஆண்டில் 1,08,854 வெளிப்புற; 2,112 உட்புற; 14,458 நீர் அழுத்த மற்றும் 6,217 நுண்ணொலி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2.10.5. பட்டாசு தொழிற்சாலைகளுக்கு பயிற்சி மையம்**

அபாயகரமான தொழிற்சாலைகளான பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் படிப்பறிவு இல்லாதவர்களாகவும், தாங்கள் கையாளும் இரசாயனங்களை

பாதுகாப்பாகக் கையாளுவது குறித்து போதிய விழிப்புணர்வு இல்லாதவர்களாகவும் உள்ளனர். இதன் காரணமாக பட்டாசு தொழிற்சாலைகளில் அதிக அளவில் விபத்துக்கள் ஏற்பட்டு உயிர்சேதங்கள் ஏற்படுகின்றன. எனவே பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஃபோர்மேன்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிவகாசியில் ஒரு பாதுகாப்பு பயிற்சி மையம் துவங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி மையத்தில் கீழ்கண்டவை குறித்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

- இரசாயனங்களின் பண்புகள்
- இரசாயனங்களைக் கையாளுதல்
- இரசாயனங்களின் கலவை
- இரசாயனங்களின் வேதி வினை
- பாதுகாப்பு வழிமுறைகள்

இப்பயிற்சி மையத்தில் 22 குழுக்களுக்கு வகுப்புகள் நடத்தப்பட்டு அதில் **686** ஃபோர்மேன்கள் பாதுகாப்பு பயிற்சி பெற்று பயனடைந்துள்ளனர். மேலும் பட்டாசு தொழிற்சாலைகளில் பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து தொழிலாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

பயிற்சிமையத்தின் திறமையான செயல்பாடுகளால் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துக்கள் மற்றும் விபத்துக்களினால் ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

### 2.10.6. தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களுக்கும் தமிழக அரசால் புதிய தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம் உச்சநீதிமன்ற ஆணையின்படி உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு மரணவிபத்து ஏற்படும் நேர்வில் அத்தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ.50,000/- நிவாரணம் பெற்று வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்திற்கான பிரிமியத் தொகை பல்வேறு காப்பீட்டு நிறுவனங்கள், பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் ஆகியோருடன் கலந்து ஆலோசித்து நிர்ணயம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு தொழிற்சாலையிலும் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்படவேண்டிய தொழிலாளர்களின் எண்ணிக்கையானது, நடப்பு ஆண்டில் யாதொரு நாளில் பணிபுரிந்துள்ள அதிகபட்ச தொழிலாளர்களின் எண்ணிக்கையுடன் கூடுதலாக 10%

தொழிலாளர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு தொழிலாளிக்கும் பிரிமியம் செலுத்த வேண்டியது நிர்வாகத்தின் பொறுப்பாகும் என்பது சட்டமாக்கப்பட்டுள்ளது. தற்போது, தி ஓரியண்டல் இன்ஷூரன்ஸ் கம்பெனி, சிவகாசி என்ற காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் காப்பீடு புதுப்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிவாரணமானது இ.எஸ்.ஐ. மற்றும் பணியாளர் இழப்பீட்டு சட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரணங்கள் அல்லாது கூடுதலாக வழங்கப்படுவதாகும்.

## 2.11. மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்கும் திட்டம்

தொழிற்சாலைகளில் சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிர்வாகத்தினரை ஊக்குவிக்கும் பொருட்டு விபத்து நிகழ்வுகளைக் குறைக்கும் நிர்வாகத்தினருக்கு ஒவ்வொரு ஆண்டும் மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளாக ஒவ்வொன்றிலும் 90 பரிசுகள் வெவ்வேறு வகையான தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகின்றன.

தொழிற்சாலைகளில் பாதுகாப்பு விழிப்புணர்வினை மேம்படுத்தவும் அதிக எண்ணிக்கையில் தொழிற்சாலைகள் நிர்வாகத்தினர் பங்கேற்பதை ஊக்குவிக்கவும், இவ்விருதுகளின் மதிப்பு உயர்த்தப்பட்டுள்ளது. நிர்வாகத்தினருக்கு வழங்கப்படும்

முதல் பரிசுக்கான வெள்ளிக் கேடயத்தின் மதிப்பு ரூ.2500/லிருந்து ரூ.5000/-ஆகவும், இரண்டாம் பரிசுக்கான வெள்ளிக் கேடயத்தின் மதிப்பு ரூ.1500/-லிருந்து ரூ.4000/-ஆகவும் 2011–ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

**2.12. உயர்ந்த உழைப்பாளர் விருது**

விபத்து தடுப்பு நடவடிக்கை மற்றும் உற்பத்தி திறன் அதிகரிப்பில் சிறந்த ஆலோசனைகளை வழங்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம் தொழிற்சாலைகளில் உற்பத்தித் திறனை உயர்த்துதல், பணி சூழ்நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு தரத்தை உயர்த்துதல் ஆகியவை குறித்து பயன்மிக்க கருத்துக்கள் தரும் தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் ‘‘தமிழக அரசின் உயர்ந்த உழைப்பாளர் விருது’’ வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களை பங்கேற்கச் செய்யவும், அவர்களை ஊக்குவிக்கவும் தமிழக அரசின் உயர்ந்த உழைப்பாளர் விருது பெறுபவர்களின் எண்ணிக்கை 2012–ஆம் ஆண்டு முதல் 24-லிருந்து 43-ஆக அதிகரித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

## 2.13. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்திற்கு பிரத்யேக வலைதளம் உருவாக்குதல்

2014–2015-ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்திற்கென பிரத்யேக வலைதளம் உருவாக்கப்பட்டு தற்போது நிறைவடையும் நிலையில் உள்ளது. இவ்வலைதளமானது இயக்ககத்தின் செயல்பாடுகளை முறைப்படுத்துவதோடு தொழில் முனைவோருக்கு சுலபமாக தொழில் தொடங்கும் வசதிகளை வழங்குவதாகவும் இருக்கும்.

இந்த வலைதளத்தின் மூலம் இவ்வியக்ககத்தின் கீழ்கண்ட சேவைகளை அந்தந்த நேர்விற்கேற்ப இணையதளம் வழியாகவே கட்டணம் செலுத்தி பெற இயலும்.

- ❖ தொழிற்சாலைகள் சட்டம், 1948–ன் கீழ் உரிமம் வழங்குதல்
- ❖ தொழிற்சாலைகள் சட்டம், 1948–ன் கீழ் வரைபடங்கள் ஒப்புதல் அளித்தல்.
- ❖ கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996 – ன் கீழ் கட்டுமான நிறுவனங்களைப் பதிவு செய்தல்.
- ❖ ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970 – ன் கீழ் பதிவு செய்தல் மற்றும் உரிமம் வழங்குதல்.

- ❖ மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979 –ன் கீழ் பதிவு செய்தல் மற்றும் உரிமம் வழங்குதல்.
- ❖ பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழான விவர அறிக்கைகள் தாக்கல் செய்தல்.
- ❖ அழுத்தக் கலன்களுக்கான சோதனைச் சான்றிதழ் வழங்குதல்.

அனைத்து ஒப்புதல்களும் இவ்வியக்ககத்தின் அலுவலர்களின் டிஜிட்டல் கையொப்பத்துடன் விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து 30 தினங்களுக்குள் வலைதளம் மூலம் வழங்கப்படும்.

வலைதளத்தின் நிலையான பதிவுகளின் மூலம் பலதரப்பட்ட உற்பத்தி பணிகள் குறித்த பாதுகாப்பு தரக்கட்டுப்பாடுகள், சர்வதேச மற்றும் தேசிய பாதுகாப்பு தரக்கட்டுப்பாடுகள், இயக்ககத்தின் கட்டமைப்பு மற்றும் பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் சுருக்கம் போன்றவை அளிக்க வகை செய்யப்பட்டுள்ளன. தொழிலாளர்கள், நிர்வாகத்தினர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த வலைதள தகவல் பக்கங்கள் மிகவும் பயனுள்ளவையாக இருக்கும். இந்த வலைதளத்தில் தொழிலாளர்கள் தங்களது குறைகளைப் பதிவு செய்யவும், உடனடி தீர்வு காணவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

### வேலைவாய்ப்பு பிரிவு

வேலைநாடுநர்களை பதிவு செய்வதும், பதிவு செய்தவர்களை பல்வேறு வேலை அளிப்போர்க்கு பரிந்துரை செய்வதும், வேலை நிலவர தகவல்களை சேகரித்தல், ஒருங்கிணைத்து தொகுத்தல் மற்றும் தொழில்நெறி வழிகாட்டுதல் ஆகியவை வேலைவாய்ப்பு அலுவலகத்தின் முதன்மைப் பணியாகும். தேசிய வேலைவாய்ப்பு பணியானது தற்போது தேசிய தொழில்நெறி வழிகாட்டிப் பணியாக மாற்றப்பட்டுள்ள நிலையில், வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இளைஞர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளை வழங்கி, அவர்கள் சரியான தொழிலை தேர்வு செய்வதில் முழு கவனத்தை செலுத்தி வருகின்றன. வேலைகளுக்கான வாய்ப்புகள், வேலைவாய்ப்பைப் பெருக்கிக் கொள்ள வழிவகுக்கும் தொழில் திறன் பயிற்சிகள், சரியான வாழ்க்கைத் தொழிலைத் தெரிவு செய்து கொள்ள ஆலோசனைகளை வழங்கி, தனியார் துறை வேலைவாய்ப்புகள் மற்றும் பல்வகையான போட்டித் தேர்வுகளுக்கு வேலைநாடும் இளைஞர்களை தயார்படுத்திக் கொள்ளும் வகையில் அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களும் படிப்படியாக தொழில்நெறி வழிகாட்டும் மையங்களாக மாற்றப்பட உள்ளன. படித்த

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சிறந்த சேவை அளிக்கும் வண்ணம் வேலைவாய்ப்பு அலுவலக செயல்பாடுகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு, இணையதளத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.1. நிர்வாக அமைப்பு

ஒவ்வொரு மாவட்டத்திலும் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் முதல் பட்டப்படிப்பு தகுதியுள்ளவர்கள் வரை பதிவு செய்து கொள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் செயல்பட்டு வருகிறது. சென்னை மாவட்டத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்துடன் கூடுதலாக தொழில் நுட்பத்திற்கென ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், தொழில்திறனற்றோர்க்கென ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் என இரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களும் இயங்கி வருகின்றன. இது தவிர தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் சென்னை மற்றும் மதுரை ஆகிய இரு இடங்களில் இயங்கி வருகின்றன. மாற்றுத்திறனாளிகளுக்கான ஒரு சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் சென்னையில் இயங்கிவருகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி

மற்றும் வேலூர் ஆகிய ஐந்து இடங்களில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்பட்டு வருகின்றன. பழங்குடியின மக்களின் சிறப்புத் தேவைகளுக்காக, சிறப்பு தொழில்நெறி வழிகாட்டி மையம் ஒன்று உதகமண்டலத்தில் இயங்கிவருகிறது. ஆகமொத்தம், 37 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தவர்களுக்கான ஐந்து பயிற்றுவிப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் மற்றும் பழங்குடி இனத்தவருக்கான ஒரு சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் பயிற்சி மையம் ஆகியவை இயங்கி வருகின்றன.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைக்கு இயக்குநர் அவர்கள் தலைவராகவும், அவருக்கு உதவியாக வேலைவாய்ப்பு பிரிவில் இரண்டு இணை இயக்குநர்கள், நான்கு துணை இயக்குநர்கள் மற்றும் இதர அலுவலர்கள் இயக்ககத்தில் உள்ளனர். வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மற்றும் சிறப்பு அலுவலகங்களின் பணிகள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள மண்டல இணை இயக்குநர்களால் கண்காணிக்கப்படுகின்றன.

## 3.2 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகள்

வேலைவாய்ப்பு அலுவலகங்களின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:–

- மனுதாரர்களை பதிவு செய்தல்
- பதிவினை புதுப்பித்தல்.
- மனுதாரர்களின் விவரங்களை முழுமைப்படுத்துதல்.
- வேலைநாடும் இளைஞர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.
- தனியார் துறையில் பணியமர்த்தம் செய்வதற்கு வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல்
- வேலைநாடும் இளைஞர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டுதல்
- வேலைநாடுநர்களுக்கு உதவித்தொகை வழங்குதல்
- நலிந்த பிரிவினருக்கு தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்குதல்
- மாற்றுத்திறனாளிகளுக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெற வழிவகை செய்தல்

- அரசு மற்றும் தனியார் துறைகளுக்கு மனுதாரர்களை பரிந்துரைத்தல்.

- வேலைவாய்ப்பு சந்தை நிலவரம் தொடர்பான தகவல்களை சேகரித்தல்.

**3.3. பதிவு மற்றும் பணியமர்த்தல்**

2011–2012 ஆம் ஆண்டு ஆன்லைன் பதிவு நடைமுறைக்கு வருவதற்கு முன், 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியான பின்னர் ஏராளமான மாணவர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அவர்களின் கல்வித்தகுதியினை வேலைவாய்ப்பு அலுவலக பணியாளர்கள் மூலம் பதிவு செய்வதற்காக பல மணி நேரம் நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டியிருந்தது. 10 இலட்சத்திற்கும் மேலான நபர்களை பதிவு செய்ய வேண்டியிருந்ததால் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ஏற்படும் கூட்ட நெரிசலை தடுக்கவும், மாணவர்களின் கல்வித் தகுதியினை பதிவு செய்வதை எளிமையாக்குவதற்கும் 2011–ஆம் வருடத்தில் மாணவர்கள் தங்களின் தகுதியினை வேலைவாய்ப்புத் துறையின் www.tnvelaivaaippu.gov.in என்ற இணைய தளத்தில் ஆன்லைன் வசதியினைப் பயன்படுத்தி அவர்களின் பள்ளி வளாகத்திலேயே பதிவு செய்து கொள்வதற்கு இந்த அரசால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் **31.03.2016** நிலவரப்படி **83,33,864** பதிவர்கள் வேலைக்காக காத்திருக்கின்றனர். கடந்த ஐந்து வருடங்களில் மட்டும் **72,00,685** மனுதாரர்கள் பதிவு செய்துள்ளனர், இதில் **60,51,582** மாணவர்கள் தங்களின் **10–**ஆம் வகுப்பு மற்றும் **12–**ஆம் வகுப்பு கல்வித்தகுதியினை இணையதளம் வாயிலாக ஆன்லைனில் அவர்கள் படித்த பள்ளிகளிலேயே பதிவு செய்துள்ளனர். கடந்த **2015–2016–**ஆம் வருடத்தில், **15,98,460** மனுதாரர்கள் அவர்களின் கல்வித் தகுதியினை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர். இதில் **12,05,780** பேர் **10–**ஆம் வகுப்பு மற்றும் **12–**ஆம் வகுப்பு கல்வித் தகுதியினை அவர்களது பள்ளியிலேயே ஆன்லைன் வாயிலாக பதிவு செய்துள்ள மாணவ மாணவிகளாவர்.

கடந்த ஐந்து வருடங்களில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் **77,696** நபர்கள் அரசுத் துறையிலும், **1,42,114** நபர்கள் தனியார் துறையிலும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். **2015–2016**ஆம் வருடத்தில் மட்டும் அரசுத்துறையில் **9,176** நபர்களும், தனியார் துறையில் **61,752** நபர்களும் பணியமர்த்தம் செய்யப் பட்டுள்ளனர்.

### 3.4. தொழில்நெறி வழிகாட்டுதல்

வேலைவாய்ப்புத்துறை தொடங்கப்பட்ட காலம் முதல் தொழில்நெறி வழிகாட்டுதல் இத்துறையின் முக்கிய பணியாக விளங்கிவருகிறது. தொழில்நெறி வழிகாட்டும் பணிகளை வலுப்படுத்துவதற்காக மாநிலத்தில் 17 தொழில்நெறி வழிகாட்டும் பிரிவுகள் சென்னை, காஞ்சிபுரம், கோயம்புத்தூர், மதுரை, ஈரோடு, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், நாகர்கோவில், இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்பட்டு வருகின்றன.

தொழில் நெறி வழிகாட்டும் பிரிவுகளின் முக்கிய பணிகளாவன:–

- தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கு ஆலோசனை மற்றும் தொழில்நெறி வழிகாட்டுதல்.
- தனியார்துறை வேலையளிப்பவர் மற்றும் திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் நல்ல தொடர்பினை ஏற்படுத்துதல்.
- தொழில்நெறி வழிகாட்டும் சொற்பொழிவுகள் ஆற்றுதல் மற்றும் கண்காட்சிகள் ஏற்பாடு செய்தல்.

- தொழில்நெறி வழிகாட்டும் பணியினை மேம்படுத்தி திறம்பட செயல்படுத்த ஏதுவாக உரிய கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் உருவாக்குதல்.
- போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்துதல்

இளைஞர்கள் தங்களுக்கு உகந்த உயர்கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் போட்டித்தேர்வுகள் தொடர்பான முடிவுகள் எடுப்பதற்காக ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகமும் ஆண்டிற்கு ஒரு தொழில்நெறி கண்காட்சியினை கல்லூரிகளில் நடத்துவதற்கு அரசு ரூ.10,000 வழங்குகிறது. 2015–2016ஆம் ஆண்டில் 4,339 நபர்கள் தொழில் பழகுநர் பயிற்சிக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். 358 தொழில்நெறி வழிகாட்டும் சொற்பொழிவுகளும் 32 தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சிகளும் நடத்தப்பட்டுள்ளதோடு, 926 நபர்கள் சுய தொழில் தொடங்க வழிகாட்டப்பட்டுள்ளன.

### 3.5. பயிற்சி வகுப்புகள் (தன்னார்வ பயிலும் வட்டம்)

வேலைநாடும் இளைஞர்களிடையே போட்டித் திறனை அதிகரிக்கச்செய்யும் வகையில் 32 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தன்னார்வ பயிலும் வட்டங்கள் இயங்கி வருகின்றன. பணியாளர் தேர்வாணையங்கள் மற்றும் பிற ஆள் சேர்ப்பு முகமைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் வேலைநாடும்

இளைஞர்கள் பங்கு பெறுவதை ஊக்கப்படுத்தி அவர்களை அப்போட்டித் தேர்வுகளுக்கு தயார்படுத்தும் வகையில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இம்மையங்களில் பல்வேறு தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுவதுடன், வேலைவாய்ப்பு அலுவலகங்களால் பராமரிக்கப்படும் நூலகங்களில் வைக்கப்பட்டுள்ள பல்வேறு தேர்வுகளுக்காக அண்மையில் வெளியிடப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், தினசரி செய்தித்தாள்கள் மற்றும் படிப்புக்குறிப்புகளை வேலைநாடுநர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அவர்களுக்கு மாதிரி வினாத்தாள்களும் முந்தைய தேர்வுகளின் வினாத்தாள்களும் வழங்கப்படுகின்றன. மேலும், அவர்களின் அறிவுத்திறனை சோதிக்கும் விதத்தில் மாதிரி தேர்வுகள் தொடர்ச்சியாக நடத்தப்படுகின்றன.

### 3.6. தனியார்துறை பணியமர்த்தல் மற்றும் பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள்

தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியின் காரணமாக அரசு துறையை விட தனியார் துறையில் வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. தனியார்துறையின் மனித வள தேவையைப் பூர்த்தி செய்யவும், வேலைநாடும் இளைஞர்கள் தனியார் துறையில் பணி நியமனம் பெற உதவவும் 37 வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தலா ஒரு மாவட்ட தனியார்

துறை பணியமர்த்தும் பிரிவு 2012–ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவுகள் வேலையளிப்பவர் – வேலை பெறுபவருடனான நேருக்குநேர் சந்திப்புகளை உருவாக்க வசதி ஏற்படுத்தித் தரும் அமைப்பாக செயல்பட்டு, அதன் மூலம் திறன் இடைவெளிகளைக் கண்டறிய உதவுவதுடன் அவர்களுக்கு தேவைப்படும் திறன் பயிற்சியை அளித்து வேலை நாடுநர்கள் வேலைபெறும் வாய்ப்பினை அதிகப்படுத்தவும் உதவுகின்றன. மேலும், சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நடத்தப்படுகின்றன.

## சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள்

| வ. எண் | மாவட்டம் | நாள் | கலந்து கொண்ட வேலைநாடுநர்கள் | கலந்து கொண்ட வேலையளிப்போர் | பணி நியமனம் பெற்றோர் |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை (ஆர்.கே.நகர்) | 17.10.15 | 58835 | 358 | 6453 |
| 2 | சென்னை (ஒக்கியம் துரைப்பாக்கம்) | 06.02.16 | 6022 | 201 | 558 |
| 3 | கோயம்பத்தூர் | 10.01.16 | 77800 | 461 | 5127 |
| 4 | தர்மபுரி | 12.09.15 | 54476 | 296 | 5463 |
| 5 | திண்டுக்கல் | 27.02.16 | 54780 | 287 | 2816 |
| 6 | மதுரை | 09.01.15 | 17598 | 146 | 2473 |
| 7 | நாமக்கல் | 28.11.15 | 35280 | 333 | 6289 |
| 8 | சேலம் | 26.09.15 | 44550 | 275 | 5884 |
| 9 | தஞ்சாவூர் | 28.02.15 | 22605 | 231 | 4878 |

| வ. எண் | மாவட்டம் | நாள் | கலந்து கொண்ட வேலைநாடு நர்கள் | கலந்து கொண்ட வேலையளிப் போர் | பணி நியமனம் பெற்றோர் |
|---|---|---|---|---|---|
| 10 | திருச்சிராப்பள்ளி (ஸ்ரீ ரங்கம்) | 08.09.13 | 23904 | 128 | 5054 |
| 11 | திருவாரூர் | 14.02.16 | 57315 | 257 | 4825 |
| 12 | தூத்துக்குடி | 03.01.15 | 19654 | 343 | 2210 |
| 13 | வேலூர் | 31.01.15 | 10478 | 94 | 2573 |
| 14 | விழுப்புரம் (சங்கராபுரம்) | 23.08.14 | 9874 | 97 | 2348 |
| 15 | விழுப்புரம் (சின்னசேலம்) | 21.02.15 | 9105 | 110 | 2281 |
| மொத்தம் | | | 447496 | 3330 | 59232 |

### 3.7. வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பதிவு செய்து வேலைவாய்ப்பின்றி காத்திருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பற்ற இளைஞர் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த உதவித் தொகை வயது மற்றும் ஆண்டு வருமானம் தொடர்பான தகுதிகளுக்கு உட்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன்பெற பொதுப்பிரிவினர் 40 வயதுக்கு மிகாதவர்களாகவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 45 வயதுக்கு மிகாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். அவர்களது குடும்ப ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும். மாதம் ஒன்றிற்கு 10–ஆம் வகுப்பு தேர்ச்சி

பெறாதவர்களுக்கு 100 ரூபாயும், 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு 150 ரூபாயும், 12–ஆம் வகுப்பு முடித்தவர்களுக்கு 200 ரூபாயும், பட்ட படிப்பு முடித்தவர்களுக்கு 300 ரூபாயும் பயனாளிகளின் வங்கிக்கணக்கின் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் 4,67,696 பயனாளிகளுக்கு ரூ.111.61 கோடி வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2015–2016 ஆம் ஆண்டில் 63,946 பயனாளிகளுக்கு ரூ.16.91 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து குறைந்தபட்சம் ஒரு ஆண்டுக்கு மேல் காத்திருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை 10 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. பெற்றோரின் ஆண்டு வருமானத்தை கணக்கில் கொள்ளாமல் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. 10 ஆம் வகுப்பு வரை கல்வித்தகுதி பெற்றவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 600 ரூபாயும், 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 750 ரூபாயும், பட்ட படிப்பு முடித்தவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 1000 ரூபாயும் 1.4.2015 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் **1,13,998** மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.**59.54** கோடி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. **2015–2016** ஆம் ஆண்டில் **23,238** பயனாளிகளுக்கு ரூ.**20.87** கோடி வழங்கப்பட்டுள்ளது.

**3.8. மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புப் பிரிவு**

மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், கிண்டி, சென்னை–**32**ல் இயங்கி வருகிறது. தமிழகத்தில் கோயம்புத்தூர், ஈரோடு, கடலூர், மதுரை, நாகர்கோவில், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, சேலம், தூத்துக்குடி, தஞ்சாவூர், உதகமண்டலம், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய **13** மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள் செயல்படுகின்றன. இப்பிரிவுகளின் நோக்கம் பதிவு தாரர்களின் திறமைகள், திறனறிதல் மற்றும் கல்வித் தகுதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற பணிகளைக் கண்டறிந்து அவர்களை குறிப்பிட்ட பணிகளில் பணியமர்த்தம் செய்யும் உத்திகளைக் கையாள்வதாகும். இன்றைய நிலவரப்படி **1,15,967** மாற்றுத்திறனாளிகள் உயிர்ப்பதிவேட்டில் உள்ளனர். அவர்களில் **89,945** உறுப்புநலன் குன்றிய மாற்றுத்திறனாளிகள், **13,642** விழிப்புலன் குன்றிய மாற்றுத்திறனாளிகள், **12,380** செவித்திறன் குன்றிய மாற்றுத்திறனாளிகள் ஆவர். கடந்த ஐந்து

ஆண்டுகளில் **3,255** மாற்றுத்திறனாளிகள் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர். **2015–2016**ஆம் ஆண்டில் **144** மாற்றுத்திறனாளிகள் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

### 3.9. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தொழில்நெறி வழிகாட்டவும் அவர்களது தன்னம்பிக்கையை உயர்த்தவும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பிரத்தியேக பயிற்றுவிப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் திருச்சிராப்பள்ளி, கடலூர், கோயம்புத்தூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்படுகின்றன. தொழில் நெறி வழிகாட்டுதல் தேவைப்படும் இளைஞர்களை தங்களால் பராமரிக்கப்படும் விவரங்கள் மற்றும் அருகாமையிலுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களின் தொகுப்பு விவரங்களிலிருந்து கண்டறிந்து இம்மையங்கள் தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகள், போட்டித் தேர்விற்கான பயிற்சி வகுப்புகள் நடத்துவதுடன், தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்குகளை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான நலப்பள்ளிகளில் நடத்தி வருகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிக அளவில் வசிக்கும்

தொலைதூர இடங்களுக்கே சென்று வேலைவாய்ப்பு பதிவு முகாம்களை நடத்துகின்றனர். வேலூர் (ஏலகிரி, புதூர்நாடு), திருவண்ணாமலை (ஜமுனாமரத்தூர்), திருச்சிராப்பள்ளி (பச்சைமலை), விழுப்புரம் (கல்வராயன் மலை), சேலம் (ஏற்காடு), நாமக்கல் (கொல்லிமலை) மற்றும் ஈரோடு (தாளவாடி) ஆகிய இடங்களில் சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகளும் சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்பட்டன.

இம்மையங்கள் வாயிலாக **2015–16ல் 290** தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகளும், **273** தொழில்நெறி வழிகாட்டும் சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பட்டன. சுய தொழில் தொடங்குவதற்காக பெறப்பட்ட **175** விண்ணப்பங்கள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

### 3.10. பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம்

உதகமண்டலத்தில் பழங்குடியின மக்களுக்கான ஒரு சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் பழங்குடியினர் துணை திட்டத்தின் நிதி உதவியுடன் இயங்கி வருகிறது. இம்மையம் பழங்குடியின மக்கள் வசிக்கும் தொலைதூர இடங்களில் வேலைவாய்ப்பு பதிவு முகாம்கள் நடத்துவதுடன் பழங்குடியின இளைஞர்கள் பயன்பெறும் வகையில் பயிற்சி வசதிகள் குறித்த

தொழில் தகவல்களை சேகரித்து, அதனை சிறு கையேடுகளாக வெளியிடுகிறது. தொழில்நெறி வழிகாட்டும் அலுவலர் கல்வி நிறுவனங்கள் மற்றும் விடுதிகளுக்கே சென்று பழங்குடியின மாணவர் பயன்பெறத் தக்க வகையில் தொழில்நெறி வழிகாட்டும் சொற்பொழிவுகள் ஆற்றி உயர்கல்வி, பயிற்சி வசதிகள், உதவித்தொகைகள் மற்றும் வேலைக்கான வாய்ப்புகள் குறித்த விவரங்களை பழங்குடியின மாணவர்களுக்கு வழங்குகிறார்.

2015–16–ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு வேண்டி **966** பழங்குடியின மனுதாரர்கள் பதிவு செய்துள்ளனர். **1,366** பழங்குடியின இளைஞர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டுதலும், **3,754** நபர்களுக்கு தனிநபர் தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன. தொழில்நெறி வழிகாட்டும் அலுவலரால் கல்வி நிறுவனங்கள் மற்றும் மாணவர் விடுதிகளில் மொத்தம் **66** தொழில்நெறி வழிகாட்டும் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டுள்ளன.

### 3.11. தேசிய வேலைவாய்ப்பு பணியானது தேசிய தொழில் வழிகாட்டும் பணியாக மாற்றம் பெறுதல்

அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களையும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களாக மாற்றுவதே இத்துறையின் செயல்திட்டமாக உள்ளது. இதில் முதல் கட்டமாக, வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை நவீன வசதிகளுடன் **மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையமாக**

அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அடுத்தகட்டமாக, கோயம்புத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் தொழில்நெறி வழிகாட்டும் மையமாக மாற்றி அமைக்கப்படும். மாணவர்களுக்கும், வேலைநாடும் இளைஞர்களுக்கும் தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்கும் வகையில், அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும்.

தேசிய தொழில்நெறி பணியின் (National Career Service) ஓர் அங்கமாக மத்திய அரசால் தொடங்கப்பட்ட தேசிய தொழில்நெறி இணையதளமானது மாநில வேலைவாய்ப்பு இணையதளத்துடன் இணைந்து செயல்பட உள்ளது. தேசிய தொழில்நெறி இணையதளம் வேலைநாடுநர்களுக்கு வேலை காலியிட தகவல்களை பரிமாறிக் கொள்ள வழிவகை செய்கிறது. இணையதளம் மூலமாக வேலைநாடுநர்கள், வேலை அளிப்பவர்கள், திறன் பயிற்சி அளிப்பவர்கள், பணி காலியிடங்கள் தொடர்பான விவரங்களை பதிவு செய்வதன் மூலம் தேசிய அளவில் வேலைநாடுநர்கள் தங்களுக்கு பொருத்தமான பணிகளைக் கண்டறிய உதவுகிறது. இத்துறையின் இணையதளமான www.tnvelaivaaippu.gov.inல் பொது மற்றும் தனியார் வேலையளிப்பவர்களின் விவரங்களை பதிவு செய்வதுடன் பணி காலியிடங்களையும் வெளியிட்டு

அதன் மூலம் வேலைநாடுநர்களை தேர்ந்தெடுத்துக் கொள்ள கூடுதல் வசதி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விளம்பரப்படுத்தப்படும் பணிகாலியிட விவரங்களை வெளியிடுவது மற்றும் தொழில் தொடர்பான சந்தேகங்களை நிவர்த்தி செய்வதன் மூலம் இத்துறையின் இணையதள முகப்பு பக்கம் வேலைநாடுநர்களின் தேவைகளின் மீது கவனத்தையும் முக்கியத்துவத்தையும் ஏற்படுத்தும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. வேலைநாடுநர்களையும் அதிக அளவில் வேலையளிப்போரையும் வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் இணையதளம் வாயிலாக இணைத்தல், வேலைவாய்ப்பு அலுவலகங்களை அணுகும் இளைஞர்களுக்கு அவ்வலுவலகங்களிலும், பிறருக்கு அவர்கள் பயிலும் கல்வி நிலையங்களிலும் வழிகாட்டு நிகழ்ச்சிகள் நடத்துதல் ஆகியவற்றில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் கவனம் செலுத்தும்.

**3.12. சிறப்பு புதுப்பித்தல் சலுகை**

பதிவை புதுப்பிக்கத் தவறும் வேலைநாடுநர்கள் பதிவு மூப்பை இழக்க வேண்டி வரும். இவர்களுக்கு உதவி செய்யும் வகையில் காலதாமதத்தைப் பொறுத்துக் கொண்டு அவர்கள் தங்களது பதிவு மூப்பை தொடர்ந்து கொள்ளும் வகையில் அரசால் சிறப்பு புதுப்பித்தல் சலுகை அறிவிக்கப்பட்டது. கடந்த

2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட புதுப்பித்தல் சலுகைகளைப் பயன்படுத்தி 2,38,389 பதிவுதாரர்கள் தங்களது பழைய பதிவு மூப்பினைப் பெற்றனர்.

## பயிற்சிப் பிரிவு

தமிழ்நாட்டில் அதி வேகமாக வளர்ந்து வரும் தொழில் துறையின் முன்னேற்றம் காரணமாக தொழிற்சாலைகளின் அதிகரித்துள்ள திறன் வாய்ந்த மனித வளத் தேவையை பூர்த்தி செய்ய வளரினம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களுக்கு தொழில் திறன் பயிற்சிகளை வழங்குவது அவசியமாகிறது. குறிப்பிட்ட தொழில் துறைகளில் உள்ள வேலை வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள, தொழிற் நுட்ப பயிற்சி மற்றும் திறன் பயிற்சி பெறுவது இன்றியமையாதது. இது தகுதியான வேலைவாய்ப்பும் நியாயமான சம்பளமும் பெற வழிவகை செய்கிறது. திறமையும் ஆர்வமும் கொண்டு முறையான தொழில் நுட்ப பயிற்சியும் பெற்ற இளைஞர்கள், தொழிற்சாலைகளுக்கு தேவையான தொழிலாளர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் தங்களது வேலைவாய்ப்புகளை பெருக்கிக் கொள்ளலாம் அல்லது சுய தொழிலில் ஈடுபடலாம்.

தொழிற் பயிற்சி என்பது மத்திய மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் பொதுப்பட்டியலில் உள்ள ஓர் இனமாகும். தொழிற் பயிற்சியை நடைமுறைபடுத்துவதற்கான

செயல்திட்டங்கள், நெறிமுறைகள் மற்றும் தேர்வுகள் நடத்தும் பணிகள் மத்திய அரசின் பொறுப்பில் உள்ளன. மாநில அரசு இத்திட்டங்களை செயல்படுத்துவதோடு தொழிற் பயிற்சி நிலையங்களின் அன்றாட நடவடிக்கைகளை கண்காணிக்கிறது. இத்துறையின் பயிற்சிப் பிரிவு, மாநிலம் முழுமையும் வியாபித்துள்ள அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் வேலைவாய்ப்புகளை வழங்கும் பல்வேறு திறன் பயிற்சிகளை வழங்கிவருகிறது. தொழிற் பயிற்சி நிலையங்கள் முறையான பயிற்சிகள் மூலம் பல்வேறு தொழிற் பிரிவுகளில் திறன்மிக்க மனித வளத்தை தொழில் நிறுவனங்களுக்கு தொடர்ந்து கிடைக்கச் செய்திடவும், பயிற்சியாளர்களிடையே தொழில் முனைவோர் திறன்களை தூண்டும் பணியினையும் மேற்கொண்டு வருகிறது.

### 3.13. நிர்வாக அமைப்பு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் துறைத் தலைவராவார். இவரது நிர்வாகத்தின்கீழ் மாநில இயக்குநரகத்தில் இரண்டு இணை இயக்குநர்கள் உள்ளனர். மாநிலத்தில் சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி என ஐந்து மண்டல பயிற்சி இணை இயக்குநர்கள் உள்ளனர். ஒவ்வொரு மண்டலத்திலும் அரசு,

தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள், தொழிற்பழகுநர் திட்டத்தினை அமல்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் தொழிற்பள்ளிகளின் செயல்பாடுகளை மண்டல பயிற்சி இணை இயக்குநர்கள் கண்காணிக்கின்றனர். தொழிற் பயிற்சி நிலையத்தில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப துணை இயக்குநர்/ உதவி இயக்குநர் / பயிற்சி அலுவலர் நிலையிலான முதல்வர்கள் தலைமையில் தொழிற் பயிற்சி நிலையங்கள் இயங்குகின்றன.

பயிற்சி பிரிவின் மூலம் செயல்படுத்தப்படுகின்ற முக்கிய மூன்று திறன்மேம்பாட்டு பயிற்சித் திட்டங்கள்

1. கைவினைஞர் பயிற்சித் திட்டம்
2. தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம்
3. தொழிற் பள்ளிகள் பயிற்சித் திட்டம்

**3.14. கைவினைஞர் பயிற்சித் திட்டம்**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொழிற் பயிற்சி நிலையங்களும் இத்திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்குவதன் நோக்கம் தொழில் திறன் பெற்ற மனிதவளத்தை தொடர்ந்து தொழிற்சாலைகளுக்கு வழங்குவதாகும். இந்நிலையங்களில் பயிற்சியாளர்களுக்கு தொழில் நிறுவனங்களில் இயந்திரங்களை

இயக்குபவர் அல்லது கைவினைஞராக பணியாற்ற தேவையான அடிப்படைத் திறன்களில் பயிற்சி வழங்கப்படுகிறது. தொழிற் பயிற்சி நிலையங்களின் பயிற்சித் திட்டங்கள் அந்தந்த தொழிற் பிரிவிற்கு தேவையான அடிப்படைத் திறன் பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**3.14.1. தொழிற் பயிற்சி நிலையங்கள்**

பல்வேறு தொழிற் பிரிவுகளில் திறன் பெற்ற மனிதவளத்தை உருவாக்கும் வகையில் பயிற்சி அளிப்பதன் மூலம் தொழிற் பயிற்சி நிலையங்கள் நாட்டின் பொருளாதாரத்தை தீர்மானிப்பதில் முக்கிய காரணியாக விளங்குகின்றன. தற்போது தமிழ்நாட்டில் **568** (அரசு **85** + தனியார் **483)** தொழிற் பயிற்சி நிலையங்கள் செயல்படுகின்றன. இத்தொழிற் பயிற்சி நிலையங்களில் **71** தொழிற் பிரிவுகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

**(i) அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள்**

தமிழ்நாடு முழுவதும் **85** அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் மகளிருக்கென 12, ஆதிதிராவிட வகுப்பினருக்கென இரண்டு, சிறைவாசிகளுக்கென ஒன்று மற்றும் பழங்குடியினருக்கென ஆறு ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களும் அடங்கும். **2015–16**ஆம் ஆண்டில் **29,874** பயிற்சியாளர்கள் (முதல் மற்றும்

இரண்டாம் ஆண்டு) பயிற்சி பெற்று வருகின்றனர். அனைத்து அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலும் ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் பிட்டர், டர்னர் போன்ற 51 பொறியியல் தொழிற் பிரிவுகளிலும், கணினி இயக்குபவர், துணி வெட்டுதல் மற்றும் தைத்தல் போன்ற 20 பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளிலும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

பயிற்சிக் காலம் தொழிற் பிரிவுக்கேற்ப ஒரு ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகள் வரை உள்ளது. 14 முதல் 40 வயதிற்குட்பட்ட மாணவர்கள் பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள், அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் சேரும் பெண்களுக்கு உச்ச வயது வரம்பு இல்லை. பயிற்சியில் சேருவதற்கான குறைந்தபட்ச கல்வித்தகுதியானது தொழிற் பிரிவினைப் பொறுத்து 8வது தேர்ச்சி / 10வது தேர்ச்சி ஆகும்.

**(ii) மாவட்ட கலந்தாய்வு மூலம் மாணவர் சேர்க்கை**

ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் மாவட்ட கலந்தாய்வு மூலம் மதிப்பெண் மற்றும் இன சுழற்சி அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கை செய்யப்படுகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு தொழிற் பயிற்சி நிலையத்தால் இதற்கென உருவாக்கப்பட்ட மென்பொருள் உதவியுடன் கலந்தாய்வு நடத்தப்படுகிறது.

தரவரிசையின் அடிப்படையில் மாணவர்கள் விருப்பப்படி தங்களது தொழிற் பயிற்சி நிலையத்தையும் தொழிற் பிரிவையும் தேர்வு செய்து கொள்ளலாம். சேர்க்கை ஆணை உடனடியாக ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கப்படுகிறது.

2016 ஆம் ஆண்டில், தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கைக்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கும் நடைமுறை மற்றும் மாவட்ட கலந்தாய்வு முதன் முறையாக துவக்கப்பட்டுள்ளது. இதனால் மாணவர் சேர்க்கை எளிமையாகவும், வெளிப்படையாகவும் இருக்கும். இதன் மூலம் தேவைப்படும் அனைத்து விவரங்களும் ஒரே இடத்தில் கிடைப்பதால் காலதாமதம் தவிர்க்கப்படுவதோடு தேவையான அறிக்கைகள் தயாரிப்பது எளிதாகிறது. மாணவர்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் உள்ள அரசு / தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர்ந்திட www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

இவ்விணையதளம் தேசிய பயிற்சிக் குழுமம் (NCVT) மற்றும் தொழிற்பள்ளிகள் திட்டத்தின் கீழ் செயல்படும் அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அந்நிலையங்களில் பயிற்றுவிக்கப்படும் தொழிற்பிரிவுகள் குறித்த அனைத்து விவரங்களும் ஒரே இடத்தில் கிடைத்திட

வழிவகை செய்கிறது. தேவையான விவரங்களை விரைவாக பதிவேற்றம் மற்றும் பதிவிறக்கம் செய்ய இயலும் வகையில் இத்தகவல் தொகுப்பு இணையதளம் மத்திய தகவல் தொகுப்பு இணையதளத்துடன் இணைக்கப்படும்.

### (iii) தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு பயனளிக்கும் அரசு திட்டங்கள்

அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கையை ஊக்கப்படுத்தவும், திறன் பயிற்சியில் ஈடுபாட்டுடன் பங்கேற்கும் வகையிலும், வறிய சமூக பொருளாதார நிலைசார்ந்த இளைஞர்களுக்கு உதவிடவும், பயிற்சிக் கட்டணத்தை தள்ளுபடி செய்து கட்டணமில்லா பயிற்சியை மாணவர்களுக்கு அரசு வழங்கி வருகிறது. மேலும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு பின்வரும் சலுகைகளையும் அரசு வழங்கி வருகிறது.

1. மாணவர்கள் வீட்டிலிருந்து பயிற்சி நிலையம் சென்றுவர வருடம் முழுவதும் பேருந்து பயணச் சலுகை
2. வருடத்திற்கு இரண்டு இணை சீருடைகள்
3. வருடத்திற்கு ஒரு இணை காலணி
4. மிதிவண்டி

5. அனைத்து பயிற்சியாளர்களுக்கும் மாதாந்திர உதவித் தொகை ரூ.500/– வீதம்.
6. மடிக் கணினி
7. பாடப்புத்தகங்கள் மற்றும் வரைபடக் கருவிகள்

**3.14.2. தொழிற்தேர்வு மற்றும் சான்று வழங்குதல்**

**(i) தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்கள்**

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கும் தேசிய அளவிலான பொது தேர்வு கால அட்டவணைப்படி தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தால் அகில இந்திய தொழிற் தேர்வு ஒவ்வொரு பருவத்தின் இறுதியிலும் நடத்தப்படுகிறது. விடைத்தாட்களை மதிப்பீடு செய்தல், தேர்வு முடிவுகள் வெளியிடுதல் போன்றவை புதுதில்லியில் உள்ள மத்திய அரசு பயிற்சி இயக்குநரகத்தால் மேற்கொள்ளப்படுகிறது. தேர்ச்சி பெற்றவர்களுக்கு தேசிய தொழிற் சான்றிதழ் (NTC) தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தால் (NCVT) வழங்கப்படுகிறது.

கிராமப்புற மாணவர்கள் ஆங்கிலம் மற்றும் இந்தியில் வழங்கப்படும் வினாத்தாட்களை புரிந்து கொள்வது மிகவும் கடினம். தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் எதிர்கொள்ளும் இச்சிரமத்தை அறிந்து, இந்த அரசு

மேற்கொண்ட சீரிய முயற்சிகளின் காரணமாக கடந்த ஜுலை 2012 முதல் புது தில்லி தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தால் வினாத்தாட்கள் தமிழ் மொழியில் வழங்கப்பட்டு வருகின்றன.

**(ii) தனித்தேர்வாளர்கள்**

கைவினைஞர் பயிற்சித்திட்டத்தில் குறிப்பிட்டுள்ள தொழிற் பிரிவிற்கான குறைந்தபட்ச கல்வித் தகுதி பெற்ற மாணவர்கள் தொழிற் பழகுநர் பயிற்சி திட்டம் செயல்படுத்தும் நிறுவனங்கள் / தொழிற்சாலை சட்டத்தின்கீழ் வரும் நிறுவனங்கள் அல்லது அரசு பதிவு பெற்ற நிறுவனங்கள் / உள்ளூர் நிறுவனங்களில் சம்பந்தப்பட்ட தொழிற் பிரிவுகளில் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்களாக இருப்பின் தனித்தேர்வராக அகில இந்திய தொழிற் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். அகில இந்திய தொழிற் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தால் தேசிய தொழில் சான்று (National Trade Certificate) வழங்கப்படுகிறது. அகில இந்திய தொழில் தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களை தேர்வு செய்ய ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தில் இத்துறையால் தகுதி தேர்வு நடத்தப்படுகிறது.

### (iii) கம்பியாள் உதவியாளர் தகுதி தேர்வு

வீட்டு ஒயரிங் தொழிலில், அனுபவம் பெற்றவர்களுக்கு, அவர்கள் அனுபவம் மூலம் பெற்றுள்ள திறனை சோதனை செய்து சான்றிதழ் வழங்குவதற்காக மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கம்பியாள் உதவியாளர் தகுதி தேர்வு இத்துறையால் நடத்தப்படுகிறது. குறைந்தது ஐந்து வருட பணி அனுபவம் மற்றும் 21 வயது பூர்த்தி அடைந்தவர்கள் இத்தேர்விற்கு தகுதியுடையவர்கள் ஆவர்.

### 3.14.3. திறனாய்வு போட்டி

தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்களிடையே ஆரோக்கியமாக போட்டியிடும் திறமையை வளர்க்கும் வகையில், ஆண்டுதோறும் மாநில அளவில் **18** தொழிற் பிரிவுகளில் திறனாய்வு போட்டி நடத்தப்படுகிறது. ஒவ்வொரு தொழிற் பிரிவிலும் மாநில அளவில் முதலிடம் பெறும் சிறந்த பயிற்சியாளருக்கு ரூ.25,000/- ரொக்கப் பரிசும், நற்சான்றிதழும் வழங்கப்படுகிறது. ரொக்கப்பரிசினை ரூ.5,000/– லிருந்து ரூ.25,000/–ஆக 2011-12 முதல் இந்த அரசு உயர்த்தி உள்ளது.

அகில இந்திய திறனாய்வு போட்டிகள் மத்திய அரசால் ஒவ்வொரு ஆண்டும் 15 தொழிற் பிரிவுகளில் நடத்தப்படுகின்றன. அனைத்து மாநிலங்களிலும் இந்த

15 தொழிற் பிரிவுகளில் முதலாவதாக வரும் சிறந்த பயிற்சியாளர்கள் அகில இந்திய திறனாய்வு போட்டிகளில் பங்கு பெற அனுமதிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு தொழிற் பிரிவிலும் அகில இந்திய அளவில் முதலாவதாக வெற்றி பெறும் பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் ரூ.50,000/- ரொக்கப் பரிசும், நற்சான்றிதழும் இந்திய அரசால் வழங்கப்படுகிறது. இது வரை தமிழகத்திலிருந்து 38 பயிற்சியாளர்கள் இப்போட்டிகளில் வெற்றி பெற்று பரிசுகள் வென்றுள்ளனர். இதுவரை நடைபெற்றுள்ள 51 அகில இந்திய திறனாய்வு போட்டிகளில், தமிழ்நாடு 22 முறை ''சிறந்த மாநிலம்'' என்ற விருதினைப் பெற்றுள்ளது.

### 3.14.4. ஆதி திராவிட / பழங்குடி இனத்தவர்களுக்கான அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்

ஆதிதிராவிட இனத்தவருக்கென கடலூர் மாவட்டம் சிதம்பரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், வடகரை ஆகிய இரண்டு இடங்களில் அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் 400 இருக்கைகளுடன் இயங்கிவருகின்றன.

பழங்குடியினருக்கென விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரத்தில் ஆறு தொழிற் பிரிவுகள் 220 இருக்கைகளுடனும், கோவை மாவட்டம் ஆனைக்கட்டி, சேலம் மாவட்டம் கருமந்துறை, திருவண்ணாமலை மாவட்டம்

ஜமுனாமரத்தூர், நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை மற்றும் நீலகிரி மாவட்டம் கூடலூார் ஆகிய இடங்களில் அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் தலா ஐந்து தொழிற்பிரிவுகள் தலா 199 இருக்கைகளுடனும் இயங்கி வருகின்றன. ஆறு தொழிற் பயிற்சி நிலைங்களில் பழங்குடியினருக்காக மட்டும் மொத்தம் 1215 இருக்கைகள் உள்ளன.

### 3.14.5. மகளிருக்கான அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள்

பெண்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக மாநில அரசு சிறப்பு கவனத்தை செலுத்தி வருகிறது. கிண்டி, அம்பத்தூர், கடலூர், கரூர், புள்ளம்பாடி, கோயம்புத்தூர், சேலம், நாமக்கல், ஆண்டிப்பட்டி, திண்டுக்கல், மதுரை, மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் மொத்தம் 3058 இருக்கைகளுடன் 12 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் கைவினைஞர் பயிற்சி திட்டத்தின்கீழ் திறன்மேம்பாட்டு பயிற்சிகள் மகளிருக்கென பிரத்யேகமாக வழங்கப்படுகின்றன. மேலும், தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் ஓசூர் ஆகிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் 356 இருக்கைகளுடன் மகளிருக்கென தனிப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதைத்தவிர, அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் சேர்க்கையில் மகளிருக்கென 30 விழுக்காடு இட ஒதுக்கீடும் வழங்கப்படுகிறது.

### 3.14.6. அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்கள்

மாநிலத்தில் திறன்மிக்க மனித வளத்தை உருவாக்கும் முயற்சியில் தனியார் பங்களிப்பை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு சில தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு பராமரிப்பு மானியம் வழங்குகிறது. தற்போது இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் ஆசிரியர்களின் மொத்த சம்பளத்தில் 75% வரை தமிழ்நாடு அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 22 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு அரசின் மானியம் வழங்கப்படுகிறது. இந்த தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் தேசிய தொழில் பயிற்சிக் குழுமத்தால் (National Council for Vocational Training) அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 2015–16ஆம் ஆண்டில், 1700 பயிற்சியாளர்களை சேர்த்துள்ள இத்தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு மானியம் வழங்குவதற்காக ரூ.2.80 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### 3.14.7. தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் (சுயநிதி)

தொழில் நிறுவனங்களுக்கு தேவைப்படும் திறன் பெற்ற மனித வளத்தை அதிகரிக்கும் நோக்கில் திறன் பயிற்சி வழங்குவதில் அரசால் எடுக்கப்படும் முயற்சிகளோடு தனியார் பங்களிப்பும் ஊக்கப்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில், அரசு உதவி பெறும் தொழிற் பயிற்சி நிலையங்கள் உட்பட

483 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் 67,075 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன.

இந்த அரசு தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சி கட்டணம் திரும்ப வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஒப்பளிக்கப்பட்ட மொத்த இருக்கைகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் உள்ள 50 சதவீத இருக்கைகள் அரசுக்கு ஒப்புவிக்கப்பட்டு அரசு சேர்க்கை முறைகளின்படி மாவட்ட கலந்தாய்வு முறையில் நிரப்பப்படுகிறது. மாணவர்கள் சார்பாக பயிற்சிக்கான கட்டணத்தை தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு அரசே திரும்ப வழங்குகிறது. கிராமப்புறங்களில் பயிற்சி பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் ரூ.10,000/– எனவும் நகர்ப்புறங்களில் பயிற்சி பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் ரூ.12,000/– எனவும் இத்திட்டத்தின் கீழ் பயிற்சிக் கட்டணம் வழங்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில் 75 சதவீதம் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு சேர்க்கைக்கேற்ப பயிற்சியின் தொடக்கத்தில் வழங்கப்படுகிறது. எஞ்சிய 25 சதவீதம் பயிற்சி முடித்து தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்கள் எண்ணிக்கைக்கேற்ப கணக்கிடப்பட்டு வழங்கப்படுகிறது. 2015–16ல் இத்திட்டத்தின் கீழ் மாவட்ட

கலந்தாய்வு மூலம் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் 7726 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**3.14.8. பயிற்றுநர் பயிற்சித் திட்டம்**

தொழிற் பயிற்சி நிலைய பயிற்றுநர்கள் உயர் தொழில்நுட்பம் மற்றும் திறன் மேம்படுத்தும் பயிற்சிக்காக மத்திய அரசின் கீழ் செயல்படும் சென்னையில் உள்ள மத்திய பயிற்சி நிலையம், மேம்படுத்தப்பட்ட பயிற்சி நிலையம் மற்றும் பெங்களூரில் உள்ள உயர்தர தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் ஆகிய நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். இந்த பயிற்சியானது, புதிய தொழில் நுட்பம், பயிற்றுவிப்பு நுணுக்கங்கள், பயிற்றுவிப்பில் ஒளி, ஒலி சாதனங்களைப் பயன்படுத்துதல், வகுப்பறை மேலாண்மை போன்றவைகளில் திறன் பெறும் வகையில் பயிற்றுநர்களைத் தயார்படுத்துகிறது. 2015–2016ல், 211 பயிற்றுநர்கள் இப்பயிற்சி திட்டத்தால் பயன் அடைந்துள்ளனர்.

**3.14.9. டாக்டர் ராதா கிருஷ்ணன் விருது**

ஒவ்வொரு ஆண்டும், அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சியளிப்பதில் சிறந்து விளங்கும் முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் இரண்டு முதல்வர்கள், இரண்டு பயிற்சி அலுவலர்கள், நான்கு உதவி பயிற்சி அலுவலர்கள் மற்றும் நான்கு இளநிலை பயிற்சி

அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சிறந்த பயிற்றுநர்களுக்கு டாக்டர் ராதாகிருஷ்ணன் பெயரில் நல்லாசிரியர் விருது வழங்கப்படுகிறது. இவ்விருது ரூ.10,000/- ரொக்கப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் உள்ளடக்கியது. கடந்த நான்கு ஆண்டுகளில், 26 முதல்வர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்கு ரூ.2.60 இலட்சம் செலவில் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 3.14.10. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை திறன்மிகு மையங்களாக தரம் உயர்த்துதல்

வேலைவாய்ப்பு சந்தையின் தேவை மற்றும் தர நிர்ணயங்களுக்கு ஏற்றவாறு பல்திறன் பெற்ற தொழிலாளர்களை உருவாக்கிட முதற்கட்டமாக ஏற்கனவே செயல்பட்டு வரும் ஐந்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை (அம்பத்தூர், திருச்சி, கோயம்புத்தூர், ஓசூர் மற்றும் சேலம்) திறன்மிகு மையங்களாக தரம் உயர்த்திட ஒவ்வொரு பயிற்சி நிலையத்திற்கும் ரூ.1.60 கோடி உள்நாட்டு நிதியினை வழங்கிட இந்திய அரசு அனுமதி அளித்தது.

இரண்டாம் கட்டமாக 14 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை (கிண்டி, கிண்டி [மகளிர்], வட சென்னை, செங்கல்பட்டு, வேலூர், கடலூர், தஞ்சாவூர், மதுரை, காரைக்குடி, தாராபுரம், தருமபுரி, கோயம்பத்தூர் [மகளிர்], தூத்துக்குடி மற்றும்

திருநெல்வேலி) தலா ரூ.3.50 கோடி வீதம் திறன் மிகு மையங்களாகவும் மற்றும் மூன்று அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை (திண்டுக்கல், அரியலூர் மற்றும் நாகப்பட்டினம்) தலா ரூ.2.00 கோடி உலக வங்கி நிதி உதவியுடனும் தரம் உயர்த்திட அனுமதி வழங்கப்பட்டது.

**இத்திட்டத்தின் பலன்கள்**

1. தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப புதிய மேம்படுத்தப்பட்ட மற்றும் சிறப்பு பல்திறன் பாடப்பிரிவுகளை அறிமுகப்படுத்த வழிவகுக்கிறது.
2. புதிய மற்றும் ஏற்கனவே செயல்படும் தொழிற்பிரிவுகளுக்கான கட்டடங்கள், கருவிகள் மற்றும் இயந்திரங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளைஅதிகப்படுத்துகிறது.

மேலும், மத்திய அரசு ரூ.22.58 கோடியை இத்திட்டத்திற்கான கூடுதல் நிதியாகவும், ரூ.3.49 கோடியை இத்திட்டத்தின்கீழ் ஊக்க நிதியாகவும் வழங்கியுள்ளது. இதுவரை இத்திட்டத்தை செயல்படுத்திட ரூ.82.96 கோடி வழங்கப்பட்டு ரூ.81.36 கோடி செலவிடப்பட்டுள்ளது. வருடந்தோறும் 4750 மாணவர்கள் பயன் பெறுகின்றனர்.

### 3.14.11. பொது மற்றும் தனியார் கூட்டமைப்புத் திட்டத்தின் கீழ் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தரம் உயர்த்துதல்

மாநிலத்தில் 32 அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் பொது மற்றும் தனியார் கூட்டமைப்பின் கீழ் தரம் உயர்த்துவதற்காக தேர்வு செய்யப்பட்டன. இத்திட்டத்தை தொழிற்பயிற்சி நிலையங்களில் செயல்படுத்திட, கூட்டுறவு பதிவு சட்டத்தின் கீழ் கூட்டுறவு சங்கமாகப் பதிவு செய்யப்பட்ட ஒரு நிலைய மேலாண்மைக்குழு ஒவ்வொரு தொழிற்பயிற்சி நிலையத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நிலைய மேலாண்மைக்குழுவில் மொத்தம் 10 உறுப்பினர்கள் உள்ளனர். இதில் ஐந்து பிரதிநிதிகள் தொழில் நிறுவனங்களிலிருந்தும், நான்கு உறுப்பினர்கள் அரசு துறையிலிருந்தும் ஒரு மாணவர் பிரதிநிதியும் உள்ளனர். இக்குழுவிற்கு தொழில் நிறுவன பங்குதாரர் தலைவராகவும், தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் உறுப்பினர்–செயலாளராகவும், மண்டல பயிற்சி இணை இயக்குநர் இயக்குநரகப் பிரதிநிதியாகவும் உள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு ஒவ்வொரு தொழிற்பயிற்சி நிலையத்திற்கும் ரூ.2.50 கோடியை வட்டியில்லா கடனாக வழங்கியுள்ளது. இக்கடன் தொகை, கடனை திருப்பிச் செலுத்த அவகாசம் தரப்படும் 10 வருட காலத்திற்குப் பின் 20 சம

வருட தவணைகளில் திரும்ப செலுத்தப்பட வேண்டும். நிலைய மேலாண்மைக் குழு தொழிற்சாலைகளின் தற்கால தேவைக்கேற்ற வகையில் தொழிற்பயிற்சி நிலையத்தினை மேம்படுத்திடவும் பயிற்சித் திட்டங்களை மேம்படுத்திடவும் நிலைய மேம்பாட்டுத் திட்டத்தை தயார் செய்து வருவாய் ஈட்டும் செயல்பாடுகளை மேற்கொள்கிறது. உறுண்டாய் மோட்டார்ஸ் இந்தியா லிமிடெட், இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், மாருதி சுசூக்கி இந்தியா லிமிடெட், டாட்டா மோட்டார்ஸ் லிமிடெட், பென்னா் இந்தியா லிமிடெட், டி.வி.எஸ் மோட்டார் கம்பெனி, ஜெ.எஸ்.டபிள்யூ. ஸ்டீல்ஸ் லிமிடெட், சக்தி ஆட்டோ காம்போனென்ட்ஸ், அரவிந்த் குரூப் நிறுவனங்கள், டவ் கெமிக்கல்ஸ் போன்றவை இத்திட்டத்தின் கீழ் முக்கிய தொழில் நிறுவன பங்காளர்களாக செயல்படுகின்றன.

**இத்திட்டத்தின் பலன்கள்**

- தொழிற் நிறுவனங்கள் தங்களின் தேவைக்கேற்ற வகையில் பயிற்சி பெற்ற திறனுள்ள தொழிலாளர்களை உருவாக்க முடிகிறது.
- பயிற்றுநர்களைப் பரிமாறிக்கொள்ளும் திட்டங்கள் மூலம் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்கவும் திறன் குறைந்த தொழிற்சாலை

பணியாளர்களுக்கு மறு பயிற்சி வழங்கிடவும் உதவுகிறது.

- தொழிற்சாலை பார்வையிடல்கள் (Industrial visits) தொழிற்சாலைகளில் நிலவும் பணிச்சூழல் தொடர்பான செய்முறை அறிவினை பயிற்சியாளர்கள் பெற்றிட உதவுகிறது.
- பயிற்சியாளர்களுக்கு நவீன தொழில் நுட்பம் பற்றிய திறனையும் அறிவையும் மேம்படுத்த தொழில் நிறுவன பங்களிப்பாளர் விரிவுரையாளர்களை (Guest Lecturers) அளித்து உதவுகிறார்.
- குறுகிய கால தொழிற்பிரிவுகளின் மூலம் வழங்கப்படும் நேரடிப்பயிற்சி வாயிலாக பயிற்சியாளர்களின் திறன் உயர்த்தப்படுவதுடன் அவர்களின் வேலைவாய்ப்பும் உயர்கிறது.
- நிலைய மேலாண்மைக் குழுக்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள முன்மாதிரி தொழிற்கூடங்கள் தொழிற்பயிற்சி நிலையங்களின் கற்றல் சூழலை மேலும் அதிகரித்துள்ளன.

நிலைய மேலாண்மைக்குழுக்கள் இத்திட்டம் செயல்படுத்தப்படும் தொழிற்பயிற்சி நிலையங்களில் 20

தொழிற்பிரிவுகளை தொடங்கி, இதன் மூலம் 1181 மாணவர் சேர்க்கை இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. 31.03.2016 வரை பெறப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூ.80.00 கோடியில், ரூ.41.73 கோடி தொழிற்பயிற்சி நிலைய முன்னேற்றம் மற்றும் பயிற்சி முன்னேற்றத்திற்காக நிலைய மேலாண்மை குழுக்களால் செலவிடப்பட்டுள்ளன.

### 3.14.12. புதிய முன்மாதிரி தொழிற் பயிற்சி நிலைய திட்டம் (New Model ITI Scheme)

அரசு தொழிற் பயிற்சி நிலையங்களை முன் மாதிரி தொழிற் பயிற்சி நிலையமாக தரம் உயர்த்துவதற்கென புதிய திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது. இத்திட்டம் ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் மத்திய மற்றும் மாநில அரசுகள் 70 : 30 என்ற விகிதத்தில் செலவினை பகிர்ந்துகொள்ளும் திட்டமாகும். தமிழ்நாட்டில், கோயம்புத்தூர் அரசு தொழிற் பயிற்சி நிலையம் இத்திட்டத்தின் கீழ் முன்மாதிரி தொழிற்பயிற்சி நிலையமாக தரம் உயர்த்த தேர்வு செய்யப்பட்டுள்ளது.

### 3.15. மாநில தொழில் பயிற்சி குழுமம்

தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தின் வழிகாட்டுதலின்படி, தொழிற் பயிற்சி தொடர்பான அனைத்து செயல்களையும் மாநில அளவில் மேற்கொள்ள இந்த அரசு மாண்புமிகு தொழிலாளர்

நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் மாநில தொழிற் பயிற்சி குழுமம் அமைத்துள்ளது. புதிதாக தோற்றுவிக்கப்பட்ட 23 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும் 29 புதிய தொழிற்பிரிவுகளும் தற்போது மாநில தொழிற்பயிற்சி குழுமத்தின் கீழ் இயங்கி வருகின்றன. மாநில தொழிற்பயிற்சி குழுமம் சீரமைக்கப்பட்ட பின்பு தொழிற்பள்ளிகள் திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்கும் நிலையங்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும்.

### 3.16. தொழிற்பழகுநர் பயிற்சி திட்டம்

**(தொழிற்பழகுநர் சட்டம், 1961)**

தொழிற்பயிற்சி நிலையங்களிலிருந்து வெளிவரும் பகுதி திறன் பெற்ற இளைஞர்களுக்கு தொழிற்சாலைகளில் நேரடி செய்முறைப் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களின் வேலைக்கான தகுதியை அதிகரிக்கும் வகையிலும் அதிக ஊதியம் பெற உதவும் வகையிலும் அவர்களை திறன் பெறச் செய்வதே தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டத்தின் நோக்கமாகும். முழுத் திறன் பெற்ற தொழிலாளர்களாக இருப்பதன் மூலம் வருவாய் ஈட்டும் வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. தொழிற்பழகுநர் சட்டம் 1961–ன்படி, தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம் மாநிலத்தில் பல்வேறு தொழில் நிறுவனங்கள் வழியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிற்பழகுநர் சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு,

பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்கள் ஒப்பந்தத் தொழிலாளர்கள் உட்பட தங்களின் மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 2.5 சதவீதம் முதல் 10 சதவீதம் வரையிலான அளவில் தொழிற்பழகுநர்களை அமர்த்துவது அவர்களின் கடமையாகும். தொழிற்பயிற்சி நிலையங்களிலிருந்து தேர்ச்சி பெற்றவர்கள் ஒப்பந்தத் தொழிலாளர்கள் உட்பட 40க்கும் மேற்பட்ட பணியாளர்கள் எண்ணிக்கை கொண்ட கீழ்க்கண்ட வகையிலான தொழில் நிறுவனங்களில் தொழிற்பழகுநர்களாக அமர்த்தப்படுகின்றனர்.

1. மத்திய அரசு துறைகள் மற்றும் மத்திய அரசு பொதுத்துறை நிறுவனங்கள்
2. மாநில அரசு துறைகள் மற்றும் மாநில அரசு பொதுத் துறை நிறுவனங்கள்
3. தனியார் தொழில் நிறுவனங்கள்

தொழிற் பழகுநர் சட்டப்படி வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் மாநில தொழிற் பழகுநர் ஆலோசகராக செயல்பட்டு வருகிறார். மாநிலத்தில் உள்ள அரசு துறைகள், அரசு பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழில் நிறுவனங்களில் இச்சட்டத்தை அமலாக்கம் செய்வதற்கு இவர் பொறுப்பானவராக உள்ளார். மாநிலத்தில், 91 வரையறுக்கப்பட்ட தொழிற்பிரிவுகளில் தொழிற்பழகுநர் பயிற்சி வழங்கப்படுகிறது. கடைசலர் (Turner), இயந்திர வேலையாளர் (Machinist),

மின் பணியாளர் (Electrician), பொருத்துநர் (Fitter), பற்றவைப்பவர் (Welder) ஆகியவை வரவேற்பு பெற்றுள்ள சில தொழிற்பிரிவுகளாகும். தொழிற்பயிற்சி நிலைய பயிற்சி முடித்தவர்கள் பொதுவாக ஒரு வருடத்தில் இரு முறை தொழிற்பழகுநர்களாக அமர்த்தப்படுகின்றனர். தொழிற்பழகுநர் பயிற்சியானது அடிப்படைப் பயிற்சி உட்பட ஆறு மாதம் முதல் நான்கு ஆண்டுகள் வரை என கால அளவில் மாறுபடுகிறது.

தமிழ்நாடு உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித்துறை போன்ற அரசு நிறுவனங்கள் உட்பட **2341**க்கு மேற்பட்ட தொழில் நிறுவனங்களில் தொழில் பழகுநர் பயிற்சித்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **31.03.2016** நிலவரப்படி **7523** தொழிற்பழகுநர்கள் தொழில் நிறுவனங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**(i) தொழிற்பழகுநர்களுக்கான உதவித்தொகை**

தொழிற்பயிற்சி நிலைய பயிற்சி பெற்ற தொழிற்பழகுநர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகைக்கான செலவினம் தொழிற்பழகுநர் சட்டத்தில் கூறப்பட்டவாறு பணி வழங்குபவரால் ஏற்கப்படுகிறது. வழங்கப்படும் குறைந்தபட்ச உதவித் தொகை விவரங்கள் கீழ்க்கண்டவாறு

| | | |
|---|---|---|
| முதல் ஆண்டு பயிற்சி | – | மாநில அரசால் அறிவிக்கப்படும் பகுதித் திறன் தொழிலாளர்களுக்கான (semi-skilled workers) குறைந்த பட்ச ஊதியத்தில் 70 சதவீதம் |
| இரண்டாம் ஆண்டு பயிற்சி | – | மாநில அரசால் அறிவிக்கப்படும் பகுதித் திறன் தொழிலாளர்களுக்கான (semi-skilled workers) குறைந்த பட்ச ஊதியத்தில் 80 சதவீதம் |
| மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டு பயிற்சி | – | மாநில அரசால் அறிவிக்கப்படும் பகுதித் திறன் தொழிலாளர்களுக்கான (semi- killed workers) குறைந்த பட்ச ஊதியத்தில் 90 சதவீதம் |

**(ii) இறுதித் தேர்வு மற்றும் சான்றிதழ் வழங்குதல்**

தொழிற்பழகுநர் பயிற்சிக்கென நிர்ணயிக்கப்பட்ட பயிற்சிக் காலத்தை முடித்து, தேர்வு எழுதுவதற்கு தேவையான குறைந்த பட்ச வருகை சதவீதம் பெற்ற ஒவ்வொரு தொழிற்பழகுநரும் தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தின் கீழ் (National Council for Vocational Training) நடத்தப்படும் தொழிற்பழகுநர்களுக்கான அகில இந்திய தொழில் தேர்வில் கலந்து கொள்ளலாம். தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு இந்திய அரசின் தேசிய தொழிற்பயிற்சி குழுமம் மூலம் தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் (National Apprenticeship Certificate) வழங்கப்படுகிறது. கடந்த 2015 ஆம் ஆண்டு

நடைபெற்ற தேர்வில் 5120 தொழிற்பழகுநர்கள் தேர்வு எழுதியதில் 4327 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

### (iii) அடிப்படை பயிற்சி மையம்

500 அல்லது அதற்கு மேல் தொழிலாளர்கள் பணிபுரியும் எந்த ஒரு தொழில் நிறுவனமும் அடிப்படை பயிற்சி மையம் (Basic Training Centre) தொடங்கலாம். அடிப்படை பயிற்சி வழங்க வேண்டிய தொழிற்பிரிவுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் ஒரு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு தேவைப்படும் அளவிலேயே பணிவழங்குபவரால் உருவாக்கப்பட வேண்டும். மாநிலத்தில் தனியார் நிறுவனங்களால் நடத்தப்படும் 19 அடிப்படை பயிற்சி மையங்கள் தொழிற்பயிற்சிகளை வழங்கி வருகின்றன. அனைத்து அடிப்படை பயிற்சி மையங்கள் மூலம் வருடத்திற்கு 980 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

### 3.17. தொழிற் பள்ளிகள்

தமிழ்நாட்டில் 477 தனியார் தொழிற் பள்ளிகள் செயல்படுகின்றன. இத்தொழிற்பள்ளிகள் அந்தந்த பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்புகளுக்கு ஏற்பவும், உள்ளூர் பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்பவும் இளைஞர்களுக்கு பயிற்சி வழங்குகின்றன. அரசிடமிருந்து பராமரிப்பு மானியம் பெறும் சிறுபான்மையினர் பள்ளிகள் உள்ளிட்ட 22 தொழிற் பள்ளிகளைத் தவிர ஏனைய தொழிற்

பள்ளிகள் சுய நிதியில் இயங்குகின்றன. இப்பள்ளிகள் தொழிற்பயிற்சி நிலையங்கள் போன்றே இருந்தாலும் இப்பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குனரகத்தால் நிர்ணயிக்கப்படும் பயிற்சித்திட்டம் மற்றும் விதிமுறைகளை பின்பற்றுகின்றன.

தற்போது, 18,244 பயிற்சியாளர்கள் இத்தொழிற் பள்ளிகளில் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சிகள் 90 தொழிற் பிரிவுகளில் வழங்கப்படுகிறது. பயிற்சி காலமானது தொழிற்பிரிவிற்கு ஏற்றவாறு ஒரு மாதம் முதல் மூன்று வருடங்கள் வரை வேறுபடுகிறது. எட்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று சான்றிதழ் உள்ளவர்கள் இப்பயிற்சிக்கு அனுமதிக்கப்படுகின்றனர். தொழிற் பிரிவுகளுக்கு உரிய தேர்வுகள் நடத்தப்பட்டு தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரகத்தால் சான்றுகள் வழங்கப்படுகின்றன.

### 3.18. சாதனைகள் மற்றும் முனைப்பு நடவடிக்கைகள்

#### (அ) வேலைவாய்ப்புப் பிரிவு

#### (i) கட்டடங்கள்

கடந்த ஐந்து வருடங்களில், 20 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மற்றும் ஒரு மதுரை மண்டல இணை இயக்குநர்

அலுவலகத்திற்கு கட்டடங்கள் கட்ட ரூ.30.80 கோடி அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இவற்றில், 14 மாவட்டவேலைவாய்ப்பு அலுவலகங்கள் மற்றும் ஒரு மண்டல இணை இயக்குநர் அலுவலகம் கட்டிமுடிக்கப்பட்டு தற்போது இவ்வலுவலகங்கள் புதிய கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன.

**(ii) 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இணையதளம் மூலம் பதிவு செய்வதற்கான வசதி**

2011 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இணையதளம் மூலம் பதிவு செய்யும் வசதியைப் பயன்படுத்தி கடந்த ஐந்து ஆண்டுகளில், 60,51,582 மாணவர்கள் இணையதளம் மூலமாக பதிவு செய்துள்ளனர்.

**(iii) மாவட்ட அளவிலான தனியார் துறை பணியமர்த்தும் பிரிவு**

மாவட்ட அளவிலான தனியார் துறை பணியமர்த்தும் பிரிவுகள் 37 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் 2012 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவற்றின் மூலம் இதுவரை 82,882 நபர்கள் தனியார் துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**(iv) பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள்**

பதினைந்து மாவட்டங்களில் நடத்தப்பட்ட பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களில் 2,468

வேலையளிப்பவர்களும் **3,89,058** வேலைநாடுநர்களும் பங்கு பெற்றனர். கடந்த ஐந்து ஆண்டுகளில் நடத்தப்பட்ட மிகப்பெரிய வேலைவாய்ப்பு முகாம்களின் மூலம் **59,232** வேலை நாடுநர்கள் தனியார் துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டனர்.

**(v) சிறப்பு புதுப்பித்தல் சலுகை**

கடந்த ஐந்து வருடங்களில் **2012** மற்றும் **2014** ஆம் ஆண்டுகளில் சிறப்பு புதுப்பித்தல் சலுகை வழங்கப்பட்டது. இதன் மூலம் **2,38,389** புதுப்பிக்கத் தவறிய பதிவர்கள் பயன் பெற்றார்கள்.

**(ஆ) பயிற்சிப் பிரிவு**

**(i) 23 புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் துவங்கப்பட்டன**

இந்த அரசால் 23 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களும் ரூ.142.44 கோடி செலவில் துவக்கப்பட்டுள்ளன.

- 2013–14 – பத்து புதிய தொழிற் பயிற்சி நிலையங்கள்
- 2014–15 – ஐந்து புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள்
- 2015–16 – எட்டு புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள்

**(ii) புதிய / கூடுதல் தொழிற் பிரிவுகள் / அலகுகள் ஏற்கனவே உள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்துதல்**

கடந்த ஐந்து ஆண்டுகளில், 29 புதிய தொழிற்பிரிவுகள் ரூ.14.39 கோடி செலவில் அந்தந்த பகுதியில் உள்ள தொழிற்சாலைகளின் திறன் வாய்ந்த தொழிலாளர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்காக இந்த அரசால் தொடங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் 588 பயிற்சியாளர்கள் பயனடைகின்றனர்.

**(iii) பயோ–மெட்ரிக் வருகை பதிவு முறை**

அரசு தொழிற் பயிற்சி நிலையங்களின் பயிற்றுநர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் வருகை புரிவதை கண்காணிக்க 2013 ஆம் ஆண்டு முதன் முறையாக பயோ–மெட்ரிக் வருகை பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

**(iv) ஏற்கனவே உள்ள 15 தொழிற் பயிற்சி நிலையங்களை புனரமைத்தல்**

சுமார் 50 வருடங்களுக்கு மேற்பட்ட 15 அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் ரூ.15.00 கோடி செலவில் புனரமைக்கப்பட்டன.

### (v) அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் மொழி மற்றும் மென்திறன் ஆய்வகம்

அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு மென்திறன், மொழித் திறன் மற்றும் அடிப்படைத் தகவல் தொழில்நுட்பத் திறன் போன்றவற்றில் பயிற்சி அளித்திட 60 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் மொழி மற்றும் மென்திறன் ஆய்வகங்கள் ரூ 17.91 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

### (vi) இணையதளம் மூலம் சான்றிதழ் உண்மைத்தன்மையை சரிபார்க்கும் முறை அறிமுகப்படுத்துதல்

வேலைவாய்ப்பு பெறும் போது சான்றிதழ்களின் உண்மைத் தன்மையினை சரிபார்க்கும் பணியினை எளிமையாக்குவதற்கு இணையதளம் மூலமாக சான்றிதழ் உண்மைத் தன்மை சரிபார்ப்பு முறையை ஏற்படுத்த தமிழ்நாடு மின்னணு ஆளுகை நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### (vii) மாநில தேர்வுக்குழுமத்தை நவீனமயமாக்குதல்

இயக்குநரகத்தில் உள்ள தேர்வுக்குழுமம் ரூ.30.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

## 3.19. அடுத்த ஐந்தாண்டுகளுக்கான தொலைநோக்கு திட்டங்கள்

- அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களும் தொழில் நெறி வழிகாட்டும் ஆலோசனை மையங்களாக மாற்றுதல்
- இணையதளம் சார்ந்த கற்பித்தல் மற்றும் கட்டமைப்பு வசதிகளுடன் (virtual training centre) கூடிய மைய பயிற்சி நிலையம் ஏற்படுத்துதல்.
- தொழிற்சாலைகளுக்கும் – தொழிற் பயிற்சி நிலையங்களுக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்தி தொழிற்சாலைகளின் தற்போதைய தேவைக்கேற்ற வகையில் பயிற்சி திட்டங்கள் மேம்படுத்தப்படும்.
- பயிற்சியாளர்கள் தொழில் நிறுவனங்கள் மூலம் நேரடி பயிற்சி பெறும் வகையில் தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம் மாநிலம் முழுவதும் மேம்படுத்தப்படும்.
- தனியார் துறையில் வேலைகிடைப்பதை பெருக்கும் வகையில் வேலையளிப்போர் மற்றும் வேலைநாடுநர்கள் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தும் மிகப்பெரிய அளவிலான சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல்

* * * * *

## தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் 2013–ம் ஆண்டில், திறன் பெற்ற தொழிலாளர் பற்றாக் குறையை ஈடு செய்யும் பொருட்டு துவக்கப்பட்டது. இது கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலாபம் ஈட்டா நிறுவனமாக பதிவு பெற்ற கழகமாகும். இந்நடவடிக்கைக்குப் பிறகு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கு திறன் பயிற்சிகளை அதிகப்படுத்த தன்னாட்சியும் எளியமுறை செயல்பாடும் உத்வேகமும் கிடைக்கப் பெற்றுள்ளது. முதலில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கமாக துவக்கப்பட்டு, அதன் பின்னர் சங்கமாக மாற்றப்பட்டு தற்போது கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### 3.20. நோக்கம்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் திறன் மிகு இளையோர்களின் தொழில் திறமைகளைப் பெருக்கி அதன் மூலம் தமிழ்நாட்டில் திறன் பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையை பெருக்கி தொழிற் துறையில் பெரும் முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்துடன் இயங்கி வருகிறது. தொலைநோக்குப் பார்வை, 2023ஆம் வருடத்திற்குள் 20 மில்லியன் நபர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்நோக்கத்தினை அடையும் வகையில், இந்த அரசு, மாநிலத்தில் அதிக அளவிலான மற்றும்

தரமான திறன்மிக்க தொழிலாளர்களை உருவாக்கி தமிழ்நாட்டை திறன் கேந்திரமாக மாற்றும் வகையில் பல முன்மாதிரி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இது, நமது மாநிலத்திற்கு முதலீட்டினை ஈர்ப்பதோடு இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு களையும் அதிக அளவில் உருவாக்கும்.

### 3.21. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் – திறன் பயிற்சி ஒருங்கிணைப்பு முகமை

திறன் பயிற்சி நடவடிக்கைகளை திறம்பட வழங்கவும் ஒரேமாதிரியான பயிற்சிகளை பல்வேறு நிறுவனங்கள் வழங்குவதைத் தவிர்க்கவும் பயிற்சிகளை வழங்கும் வெவ்வேறு துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை அதிகரிக்க அரசு முடிவு செய்தது. திறன் மேம்பாட்டு பயிற்சியளிக்கும் நிறுவனங்களை தேர்வு செய்தல், கண்காணித்தல் மற்றும் பயிற்சிகள், பயிற்சிக்கான கால அளவு, பயிற்சிக் கட்டணம் ஆகிய அனைத்தையும் ஒரே நெறிமுறையின்படி உள்ளதை உறுதி செய்து பயிற்சியாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வரை தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு மைய அமைப்பைக் கொண்டு வருவது இதன் நோக்கமாகும். மாநிலத்தில் வழங்கப்படும் அனைத்து திறன் எய்தும் பயிற்சிகளுக்கும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ‘ஒருங்கிணைப்பு முகமையாக’ (Nodal Agency) செயல்பட

2013 ஆம் ஆண்டில் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு, திறன் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளும் பல்வேறு துறைகளிடையே வலுவான ஒருங்கிணைப்பை ஏற்படுத்த உதவுகிறது.

### 3.22. நெறிமுறைப்படுத்துதல் மற்றும் தர உத்தரவாதம்

#### அ) பயிற்சி பிரிவுகள்

மாநிலம் முழுவதும் திறன் பயிற்சிகள் வழங்குவதற்காக ஏற்கனவே உள்ள தொழில் திறன் பயிற்சி வழங்கும் முன்னணி தொழில் நிறுவனங்களோடு மத்திய மற்றும் மாநில அரசின் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் முகமைகளையும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் கண்டறிந்துள்ளது. தேசிய திறன் தகுதி கட்டமைப்பு (National Skill Qualification Framework) தேசிய தொழில் குறியீடுகள் (National Occupational Standard) மற்றும் தகுதி தொகுப்புகள் (Qualification Packs) ஆகியவற்றின் மூலம் திறன் மேம்பாட்டு பயிற்சிக்காக இந்திய அரசால் நிர்ணக்கப்பட்டுள்ள பயிற்சிக்கான தேசிய அளவிலான தர அளவுகளின் அடிப்படையிலேயே அனைத்து திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் அமைய தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் உறுதி பூண்டுள்ளது.

**ஆ) பயிற்சி கட்டணம்**

மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம் நிர்ணயித்துள்ள பயிற்சி கட்டணம், தேர்வு கட்டணம், விடுதி மற்றும் உணவுக் கட்டணம் மற்றும் போக்குவரத்துக் கட்டணங்களையே தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் பின்பற்றுகிறது.

**இ) பயிற்சி காலம்**

பயிற்சிக்கான ஒவ்வொரு தகுதி தொகுப்பின் (QP) கால அளவு, துறைவாரி திறன் குழுக்களாலும் (Sector skill councils) ஒவ்வொரு பயிற்சி தொகுதிக்கான கால அளவு தலைமை இயக்குநர், பயிற்சி–ஆல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதையே தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமும் பின்பற்றுகிறது.

**3.23. தேசிய திறன் தகுதி கட்டமைப்பை (NSQF) செயல்படுத்தும் மைய குழு (Core Committee)**

மாநிலத்தில், பல்வேறு திறன் பயிற்சிகளுக்கு திறன் சான்றிதழ்கள் வழங்கும் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து தேசிய திறன் தகுதி கட்டமைப்பு (NSQF) தர அளவுகோல்களை செயல்படுத்த அரசு மையக்குழு ஒன்றினை அமைத்து ஆணையிட்டுள்ளது. தமிழக அரசின் தொழிலாளர்

மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசுச் செயலர், இந்த மையக் குழுவின் தலைவராகவும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் உறுப்பினர் செயலராகவும், ஏழு துறைத் தலைவர்களும், தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகம், பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத் துறை மற்றும் தேசிய திறன் மேம்பாட்டு முகமை (NSDA), புதுதில்லி ஆகியவற்றின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### 3.24. திறன் பயிற்சிக்கான முக்கிய துறைகள்

திறன் தேவை குறித்து நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையிலும் தொழிற்சாலைகளில் பணியாளர் தேவையைக் கருத்தில் கொண்டும் ஆட்டோமொபைல்ஸ், சுகாதாரம், ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள், தகவல் தொழில் நுட்பம், வேளாண்மை, தோல் மற்றும் தோல்பொருட்கள், அழகு கலை, லாஜிஸ்டிக்ஸ் (Logistics), வங்கி நிதி சேவை மற்றும் காப்பீடு , ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு, கட்டுமானம், பிளம்பிங் (Plumbing), சில்லறை வர்த்தகம், மின்னணுவியல், பாதுகாப்பு சேவைகள், தொலைதொடர்புத் துறை, உணவு பதனிடுதல், இரத்தினம் மற்றும் ஆபரணங்கள், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் ஆகிய முக்கிய துறைகளில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் திறன் பயிற்சிகளை அளித்து வருகிறது.

### 3.25. திறன் மேம்பாட்டில் பொது மற்றும் தனியார் துறை கூட்டமைப்பு

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் பயிற்சிக்கு பின் உரிய வேலைவாய்ப்பினை இளைஞர்கள் பெற்றிடும் வகையில் பயிற்சிகளை வழங்கி வரும் அரசு மற்றும் தனியார் பயிற்சி நிறுவனங்களை கண்டறிந்துள்ளது. தொலைநோக்கு திட்டம், 2023ல் திறன் மேம்பாட்டு இயக்ககத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை அடைவதற்கு திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களின் எண்ணிக்கையினை அதிகப்படுத்துவது அவசிய தேவையாகிறது. எனவே, தேசிய தர அளவுகோல்களின்படி இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து பயிற்சி முடிப்பவர்களில் குறைந்தபட்சம் 70% இளைஞர்களை பணியமர்த்தக் கூடிய தனியார் திறன் பயிற்சி நிறுவனங்களிடமிருந்து விருப்பம் (EoI) கோரப்பப்பட்டது.

### 3.26. திறன் முகாம்கள் வாயிலாக திறன் பயிற்சிக்கு ஆள் சேர்த்தல்

இளைஞர்களுக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதற்கும், திறன் பயிற்சிக்காக தங்களை பதிவு செய்து கொள்வதற்கும், பணிநாடுநர்கள் மற்றும் பணியளிப்போருக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்தும்

வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மிகப் பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. இந்த சந்திப்பானது தற்போது இளைஞர்கள் திறன் பயிற்சிகளுக்காக பதிவு செய்துகொள்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது. வேலைவாய்ப்பு முகாம்களில் வேலைவாய்ப்பு கிடைக்கப் பெறாத இளைஞர்களுக்கு விரைவில் வேலை கிடைத்திடும் வகையில் வேலை அளிப்போரின் தேவைக்கேற்றவாறு பல்வேறு துறைகளில் பயிற்சி பெற இவ்விளைஞர்கள் பதிவு செய்யப்படுகிறார்கள். திறன் பயிற்சி வழங்கும் முக்கிய நிறுவனங்களுக்காக ஒவ்வொரு வேலைவாய்ப்பு முகாமிலும் தனிப்பட்ட அரங்குகள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அமைக்கப்படுகின்றன. மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து இதுவரை நடத்தப்பட்ட **12** வேலைவாய்ப்பு முகாம்களில் **4,47,496** இளைஞர்கள் பங்கேற்று அவர்களில் **55,224** இளைஞர்கள் பல்வேறு துறைகளில் திறன் பயிற்சிக்காக பதிவு செய்துள்ளனர். இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்கள் தங்களை பயிற்சிக்காக பதிவு செய்து கொள்ளும் வகையில் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் திறன் பயிற்சிகள் குறித்து விளம்பரப்படுத்தப்படுகிறது.

பொது மக்களிடையே திறன் பயிற்சியின் முக்கியத்துவத்தினை தெரியப்படுத்தி திறன் பயிற்சிக்கான சேர்க்கையை அதிகப்படுத்துவதற்காக அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் விளம்பர தட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணையதளம், திறன் பயிற்சி பெற விரும்பும் இளைஞர்கள் பயிற்சியில் சேர விண்ணப்பிக்கும் நுழைவாயிலாக விளங்கும். மேலும் அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் விண்ணப்பங்கள் மற்றும் இணையதளம் வாயிலாக திறன் பயிற்சிகளில் பதிவு செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 3.27. இணையதளம்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக இணையதளம், திறன் பயிற்சி அளிப்பதில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் ஒரு தொடர்பு தளமாக இருக்கும். திறன் பயிற்சி பெற விருப்பமுள்ளவர்கள் பயிற்சியில் சேருவதற்கு ஏதுவாக பயிற்சிகளின் விவரம், பயிற்சியின் காலஅளவு மற்றும் பாட விவரங்களை இவ்விணையதளம் வாயிலாக தெரிந்து கொண்டு இணையதளம் மூலமாகவே தாம் விரும்பும் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். பயிற்சியளிக்கும் நிறுவனங்கள், பயிற்சியில் சேர விருப்பமுள்ளவர்களின் விவரங்களை இவ்விணையதளம்

வாயிலாக தெரிந்து கொண்டு கைபேசி அல்லது மின்னஞ்சல் மூலமாக அவர்களைத் தொடர்பு கொண்டு பயிற்சியில் சேர்த்துக் கொள்ளலாம். இவ்விணையதளத்தில் பதிவு செய்து கொள்ளும் வேலையளிப்போர் தங்களது பணிகாலியிட விவரங்களை பதிவிடலாம். மேலும், இணையதளத்தில் விண்ணப்பித்துள்ளவர்கள் அல்லது திறன் பதிவு தரவு தொகுப்பில் (Skill Registry Database) உள்ள திறன் பயிற்சி பெற்றவர்களை பணிகளுக்கு தேர்வு செய்து கொள்ளலாம். தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அளிக்கப்படும் திறன் பயிற்சிகளை கண்காணிப்பு தளம் (dashboard) மூலம் கண்காணிப்பதற்கு இந்த இணையதளம் உதவியாக இருக்கும்.

### 3.28. திறன் பதிவு

பயிற்சியினை வெற்றிகரமாக முடித்த பயிற்சியாளர்களின் விபரங்கள் திறன் பதிவு தொகுதிக்கு (Skill Registry) கொண்டு செல்லப்பட்டு, அது பெரிய திறன் தொகுப்பாக பராமரிக்கப்படும். இந்தத் திறன் பதிவுத் தொகுப்பினை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக இணையதளத்தில் பதிவு செய்யும் தனியார் தொழில் நிறுவனங்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும். தேசிய தொழிற்சான்றிதழ், தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ், பட்டயம் பெற்ற இளைஞர்கள் மற்றும் இதர துறை பயிற்சிகள் வாயிலாக

திறன்பெற்றோர் விவரங்களும் இந்தத் திறன் பதிவில் தொடர்ந்து சேர்க்கப்படும்.

### 3.29. திறன் சான்றிதழ் வழங்குதல்

திறன் பயிற்சிகளில் தர உத்திரவாதத்தை உறுதி செய்வதற்கு பயிற்சியாளர்கள் குறித்து சுதந்திரமான மற்றும் நடுநிலையான மதிப்பீட்டை மேற்கொண்டு சான்றிதழ் வழங்குவதற்கு அங்கீகாரம் பெற்ற மூன்றாம் மதிப்பீட்டாளார் (Third Party Assessment) நியமிக்கப்பட வேண்டும். தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வழங்கும் திறன் பயிற்சிகளின் மதிப்பீட்டு அமைப்புகளாக தொழிற்கல்வி இயக்ககம் (DoTE) மற்றும் மாநில தொழிற்பயிற்சி குழுமம் (SCVT) ஆகியவற்றை அறிவிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மதிப்பீட்டு அமைப்புகள் மதிப்பீட்டை மேற்கொள்வதற்கும் சான்று வழங்குவதற்கும் உரிய கட்டணத்தை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமே வழங்கும்.

### 3.30. அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல் (Recognition of Prior Learning – (RPL))

தமிழ்நாட்டில் உள்ள தொழிலாளர்களில் சுமார் 80 விழுக்காட்டினர் முறைசாரா பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ஒரே மாதிரியான பணியினை நீண்ட

காலம் செய்வதால் திறன் பெற்றவர்களாக உள்ளனர். அனுபவத்தின் மூலம் பெற்ற இத்திறமையை அங்கீகரித்தல் (RPL) என்பது ஏற்கனவே தமது தொழில் அனுபவத்தினால் திறன் பெற்ற ஒருவரை தகுதி மற்றும் சான்றிதழ் நோக்கி நகர்த்துவதாகும். அனுபவத்தின் மூலம் பெற்ற திறமையை அங்கீகரித்தல் திட்டத்தின் மூலம் தொழிலாளர்கள் பணிமேன்மை, கூடுதல் வருமானம், பணி நகர்வு, சமூகத்தில் மேம்பட்ட நிலை அடைதல் மற்றும் முறைசாரா பணியிலிருந்து முறையான பணிக்கு மாறுதல் ஆகிய நன்மைகளைப் பெறுகின்றனர்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், அனுபவத்தின் அடிப்படையில் பெற்ற திறனை அங்கீகரித்தல் திட்டத்தின் மூலம் சான்றிதழின்றி திறன் பெற்றிருக்கும் தொழிலாளர்களை அங்கீகரிக்க உத்தேசித்துள்ளது. முதற்கட்டமாக, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், கட்டுமானம், தோல், ஜவுளி, தானியங்கி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் சான்றிதழ் இன்றி பணிபுரியும் தொழிலாளர்களை மதிப்பீடு செய்ய உள்ளது. சான்றளிக்கப்படாமல் முறைசாரா துறைகளில் பெருமளவு பணிபுரியும் தொழிலாளர்களை மதிப்பீடு செய்து அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குவதன் மூலம் அவர்களை திறன் பெற்ற

தொழிலாளர் வளையத்திற்குள் கொண்டு வருவதோடு அவர்தம் வாழ்க்கை தரமும் மேம்படுத்தப்படும்.

### 3.31. கடந்த ஐந்தாண்டு கால சாதனைகள்

- கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் 2,27,106 இளைஞர்களுக்கு திறன் பயிற்சி வழங்கியுள்ளது.
- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கென ரூ.1.59 கோடி செலவில் 2016–ஆம் ஆண்டு புதிய கட்டடம் கட்டப்பட்டது.
- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் 248 திறன் பயிற்சி வழங்கும் நிறுவனங்களாக பட்டியலிடப்பட்டுள்ளன.
- முக்கிய துறைகளுக்கான பயிற்சிகள், பயிற்சி கால அளவு மற்றும் பயிற்சி கட்டணம் ஆகியவற்றை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் 2016ல் நெறிமுறைப்படுத்தியுள்ளது.

### 3.32. அடுத்த ஐந்தாண்டுகளுக்கான தொலைநோக்கு திட்டம்

- திறன் தேவைக்கேற்ப புதிய துறைகளில் திறன் பயிற்சி அளிப்பது விரிவுபடுத்தப்படும்.
- திறன் பயிற்சிகளில் தர உத்தரவாதத்தை அடையும் பொருட்டு அதிக அளவு மதிப்பீடு மற்றும் சான்றிதழ் வழங்கும் அமைப்புகள் பதிவு செய்யப்படும்

- ஒரே இடத்தில் மாநிலத்தின் அனைத்து திறன் பெற்ற மனித வள விவரத்தைப் பெறும் வகையில் திறன் பதிவு தொகுப்பு தரவு வலுப்படுத்தப்படும்
- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன பணியாளர்களுக்கு மேன்மை திறன் பயிற்சி (Upskilling) வழங்கி அவர்களை தொழில் முனைவோராக உருவாக்குவதற்கு வழிவகை செய்யப்படும்
- முறைசாரா துறைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அவர்கள் தங்கள் அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை அங்கீகரித்து (RPL) சான்றிதழ் வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் வருமானம் உயர வழிவகை செய்யப்படும்.

## 4. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

தமிழ்நாடு அரசிற்கு சொந்தமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (OMCL) 1978ஆம் ஆண்டு இந்திய கம்பெனிகள் சட்டம் 1956ன்படி துவக்கப்பட்டு இந்திய குடிபெயர்வோர் சட்டம் 1983ன்படி பதிவு செய்யப்பட்டது. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முக்கிய பணியானது, வெளிநாட்டு வேலைதேடும் இளைஞர்களை ஏமாற்று முகவர்களின் பிடியில் இருந்து பாதுகாப்பதாகும். ஆயிரத்திற்கு மேற்பட்ட குடிபெயர்வோரை வெளிநாட்டு வேலைக்கு அனுப்பி வைக்க அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்திற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

### 4.1. மூலதன அமைப்பு

இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 இலட்சம் ஆகும். இது ரூ.1000 மதிப்புள்ள 5000 சமவீத பங்குகளாக பிரிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.15.00 இலட்சம் ஆகும். இது ரூ.1000 மதிப்புள்ள 1500 சமவீத பங்குகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

### 4.2. பதிவு

கடந்த ஐந்து ஆண்டுகளில், 10,308 நபர்களும், 2015-2016 நிதியாண்டில் 2,111 நபர்களும் வெளிநாட்டு வேலை வேண்டி

பதிவு செய்துள்ளனர். ஆக மொத்தம், **31.3.2016** அன்றமைந்தவாறு, **20,773** பதிவுதாரர்கள் பதிவேட்டில் உள்ளனர்.

**4.3. பணியமர்த்தல்**

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், கடந்த ஐந்து ஆண்டுகளில் **(2011**-2016**)** **1,164** பதிவுதாரர்களை பணியமர்த்தியுள்ளது. **2015**-2016 நிதியாண்டில், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலம் **308** நபர்கள் பல்வேறு நாடுகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். பதிவர்கள் ஐக்கிய அரபு குடியரசு, குவைத், சவூதி அரேபியா, பக்ரைன், ஜோர்டான், மாலத்தீவு, கத்தார், புரூனே, கனடா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**4.4. பணியமர்த்தலில் வகைவாரியான எண்ணிக்கை**

இந்நிறுவனம் கீழ்க்கண்டவாறு பல்வேறு வகையான பதிவர்களை பணியமர்த்தியுள்ளது:

1. தொழில் திறனற்றோர் : 110
2. ஓரளவு தொழில் திறன் பெற்றோர் : 66
3. தொழில் திறன் பெற்றோர் : 136
4. தொழிற்கல்வி பயின்று மேம்பட்ட திறன் பெற்றோர் : 852

**4.5. இந்நிறுவனத்தின் செயல்பாடுகள்**

இந்நிறுவனம், பதிவு செய்தல் மற்றும் பணியமர்த்தல் பணிகளுடன் பின்வரும் இதர செயல்பாடுகளையும் செய்து வருகிறது:

1. மாநில தலைமையகம் மற்றும் இதர மாவட்டங்களில் விழிப்புணர்வு/பதிவு முகாம்களை நடத்துதல்
2. தேர்ந்தெடுக்கப்படும் பதிவுதாரர்களின் சான்றிதழ்களை மாநில தலைமைச் செயலக துறைகள் /பல்கலைக்கழகங்கள் /கல்வித்துறை போன்றவைகள் மூலம் சரிபார்த்து சான்றொப்பம் பெற உதவுதல்
3. வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் மூலம் சான்றிதழ்களை சரிபார்த்து சான்றொப்பம் பெற உதவுதல்
4. பதிவுதாரர்கள் மற்றும் பணியமர்த்தப்பட்ட நபர்களுக்கு ஆதரவுக்கரம் அளித்தல்

**4.6. நிதி நிலைமை**

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் மொத்த வருவாய் ரூ.6.28 கோடியாகவும் நிகர இலாபம் ரூ.99.22 இலட்சமாகவும் உள்ளது. கடந்த 2015-2016ல், மொத்த வருவாய் ரூ. 1.50 கோடியாகவும் நிகர இலாபம் ரூ.45.23 இலட்சமாகவும் உள்ளது. இந்நிறுவனம் 2014-2015

நிதியாண்டில் பங்கு மூலதனத்தில் 30 சதவீதம் ஈவுத் தொகையாக அறிவித்ததன் மூலம், ரூ.4.50 இலட்சம் அரசிற்கு அளித்துள்ளது.

இந்திய அரசினால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஈ-மைகிரேட் (E-migrate) முறை காரணமாகவும் செவிலியர்களை அரசு நிறுவனங்கள் மூலமாக மட்டுமே பணியமர்த்தப்பட வேண்டும் என்ற இந்திய அரசின் ஆணைக்கிணங்கவும் இந்நிறுவனத்தின் வளர்ச்சி மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 4.7. சிறப்பு முனைப்பு நடவடிக்கை

இந்நிறுவனம் மேம்படுத்தப்பட்ட மென்பொருள் மூலம் பதிவு செய்தல், விசா பரிசீலனை, வெளிநாட்டு வேலையளிப்போருக்கான பதிவு, தேர்ந்தெடுத்தல் மற்றும் பணியமர்த்தல் தொடர்பான நடைமுறைகளை ஆன்லைன் மூலம் செயல்படுத்திட முனைப்பு கொண்டுள்ளது. இதனை செயல்படுத்தும் நோக்கில் இந்நிறுவனத்தின் இணையதளத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 5. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொ.அ.ஈ.தி)

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டமானது, அமைப்பு சார்ந்த துறைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு எதிர்பாராமல் ஏற்படும் நோய்கள், மகப்பேறு. பணியின்போது ஏற்படும் விபத்து அல்லது தொழில்முறைநோய் காரணமாக ஏற்படும் இயலாமை / மரணம் ஆகிய நிகழ்வுகளில் சமூக பாதுகாப்பினை உறுதி செய்யும் விதமாக உருவாக்கப்பட்ட ஓர் ஒருங்கிணைந்த சமூக பாதுகாப்பு திட்டமாகும். இந்நோக்கத்தின் அடிப்படையில், இத்திட்டத்தில் பதிவு செய்துகொண்ட தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு முழு இலவச மருத்துவ வசதியும் மற்றும் தொழிலாளர் உழைக்க இயலாதநிலை ஏற்படும்போது பண பயன்களும் அளிக்கப்படுகின்றன. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி சட்டம், 1948ல் உள்ள ஷரத்தின்படி ஏற்படுத்தப்பட்ட "தொழிலாளர் மாநில காப்புறுதி கழகம்" எனும் அமைப்பு இத்திட்டத்தினை நிர்வகிக்கிறது.

### 5.1. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தில் சேர்வதற்கான தகுதிகள்

கீழ்கண்ட தகுதிகள் உடைய தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்படுகிறார்கள்.

- ரூ. 15,000/– வரை மாத ஊதியம் பெறும் தொழிலாளர்கள்
- ஆட்டிசம், செரிபரல் பால்சி, மூளை வளர்ச்சி குறைபாடுகள் மற்றும் பல்வகை குறைபாடுகளுடன் ரூ.25,000 வரை மாத ஊதியம் பெறும் தொழிலாளர்கள்.

**5.2. திட்டத்தின் நிதி ஆதாரம்**

தொழிலாளர்களின் பங்களிப்பாக ஊதியத்தில் 1.75 சதவீதமும் வேலையளிப்போரின் பங்களிப்பாக 4.75 சதவீதமும் சேர்ந்து ஒவ்வொரு மாதமும் பெறப்படும் பங்கு தொகையே தொழிலாளர் மாநில காப்புறுதி கழகத்தின் நிதி ஆதாரம் ஆகும். தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தை அமல்படுத்த ஆகும் மொத்த செலவினத்தில் 7/8 பங்கினை தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகம் காலாண்டு அடிப்படையில் மாநில அரசுக்கு திரும்ப வழங்குகிறது.

**5.3. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட நிர்வாக அமைப்பு**

தமிழ்நாட்டில், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகளின் இயக்குநர் (தொ.அ.ஈ.தி) தம் கட்டுப்பாட்டில் பணிபுரியும் கீழ்காணும் கள அலுவலர்கள் மூலம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தை நிர்வகிக்கிறார்.

1. மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்கள் (தொ.அ.ஈ.தி) (சென்னை, சேலம், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்கள்)

2. மருத்துவமனை கண்காணிப்பாளர்கள் (அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருச்சி, ஓசூர் மற்றும் சிவகாசி ஆகிய எட்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள்)

## 5.4. மாநிலத்தில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள்

தமிழ்நாட்டில் தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கும் பரவலாக உள்ள மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் மூலம் சுகாதார சேவை அளிக்கப்படுகிறது.

1. **10** தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் (மொத்தம் 2011 படுக்கை வசதிகளுடன்)

   **அ)** மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் எட்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள்

   **ஆ)** தொழிலாளர் மாநில காப்புறுதி கழகத்தின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் சென்னை (கே.கே.நகர்) மற்றும் திருநெல்வேலி ஆகிய

இரண்டு தொழிலாளர் மாநில காப்புறுதி கழக மருத்துவமனைகள்

2. **216** தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்

    - **209** தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்
    - ஐந்து நடமாடும் மருந்தகங்கள்
    - இரண்டு பயனீட்டாளர்கள் மருந்தகங்கள்

**2015–2016**ம் வருடத்தில், **7,589** தொழிலாளர்கள் பயன் பெறும் வகையில் ஆறு புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் திறக்கப்பட்டுள்ளன. கடந்த ஐந்தாண்டுகளில் **1,81,680** தொழிலாளர்கள் பயன் பெறும் வகையில் **33** புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

### 5.5. தொழிலாளர் ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் இயங்கும் ஆயுஷ் (AYUSH) பிரிவுகள்

காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும் ஆங்கில முறை சிகிச்சை வசதிகளுடன் கூடுதலாக ஆயுர்வேதா, யோகா, யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி ஆகிய சிகிச்சை முறைகள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த “ஆயுஷ்” (AYUSH) சிகிச்சை வசதியும் வழங்கப்படுகிறது

- ஆயுர்வேத பிரிவுகள் எட்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன. (அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருச்சி, ஓசூர் மற்றும் சிவகாசி)
- யோகாசன பிரிவுகள் எட்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன. (அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருச்சி, ஓசூர் மற்றும் சிவகாசி)
- யுனானி பிரிவுகள் மூன்று தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன. (அயனாவரம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை)
- சித்தமருத்துவப் பிரிவுகள் எட்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளிலும் (அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருச்சி, ஓசூர் மற்றும் சிவகாசி), 20 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களிலும் (தாம்பரம், திருவொற்றியூர், திருபெரும்புதூர், தூத்துக்குடி, இராஜபாளையம், கோவில்பட்டி, பொள்ளாச்சி, துடியலூர், பள்ளிபாளையம், கும்பகோணம், திருவல்லிக்கேணி, ஆவடி, கொரட்டூர், திண்டுக்கல், திருநகர், உடுமலைப்பேட்டை, காட்டூர் – 1,

திருப்பூர்–1, ஆம்பூர் மற்றும் ராணிப்பேட்டை) இயங்குகின்றன.

- ஹோமியோபதி பிரிவுகள் மூன்று தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன. (அயனாவரம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை)

**5.6. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் பயன்கள்**

இத்திட்டத்தினால் கீழ்காணும் பயன்கள் தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

**5.6.1. மருத்துவ உதவி:**

- தொழிலாளர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் வேலையில் சேர்ந்த நாள் முதல் முழுமையான மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன.
- ஆரம்ப சிகிச்சை, சிறப்பு சிகிச்சை மற்றும் உயர் சிறப்பு சிகிச்சை ஆகியவை பரவலாக அமைந்துள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள் மூலம் அளிக்கப்படுகின்றன.

**5.6.2.. பேறுகால உதவி (பணமாக)**

ஒரு வருடத்தில் 70 நாட்களுக்குண்டான சந்தா தொகையினை செலுத்திய பெண் காப்பீட்டு நபர்கள் இவ்வுதவியினைப் பெற தகுதியுடையவராகிறார்கள்.

- பேறுகாலத்தில் 84 நாட்களுக்கும், கருக்கலைப்பு காலத்தில் 42 நாட்களுக்கும் முழுசம்பள பணப்பயன் அளிக்கப்படுகிறது.
- மகப்பேறு தொடர்பான நோய்களுக்கு மேலும் 30 நாட்களுக்கான முழுசம்பள பணப்பயன் அளிக்கப்படுகிறது.

ஆறு மாத காலத்தில் 78 நாட்களுக்குண்டான சந்தா தொகையினை செலுத்தியிருப்பின் காப்பீட்டு நபர், உடல்நலமின்மை உதவி, உடல் நலமின்மைக்கான நீட்டித்த உதவி மற்றும் உயர்த்தி வழங்கும் உடல் நலமின்மைக்கான உதவி ஆகியவற்றை பணப்பயனாக பெற தகுதியுடையவராகிறார்.

**5.6.3. உடல்நலமின்மை உதவி**

காப்பீட்டாளர் உடல் நலமின்றி பணிக்கு செல்ல இயலாத நிலை ஏற்படும்போது, உரிமையளிக்கப்பட்ட காப்பீட்டு மருத்துவ அலுவலரின் சான்றிதழின் பேரில் உடல் நலமின்மை உதவி பணமாக வழங்கப்படுகிறது.

### 5.6.4.. நீட்டித்த உடல் நலமின்மை உதவி

காப்பீட்டாளர்களுக்கு நீண்டகால சிகிச்சை தேவைப்படும் குறிப்பிட்ட 34 வகையான நோய்களுக்கு, மருத்துவரால் சான்றளிக்கப்படும் சிகிச்சை காலம் வரை, நீட்டித்த உடல் நலமின்மை உதவியும், மருத்துவர் ஆலோசனையின் பேரில் அதிகபட்சமாக இரண்டு வருடங்களுக்கு விடுப்பும் வழங்கப்படுகிறது.

### 5.6.5. உயர்த்தி வழங்கப்படும் உடல் நலமின்மை உதவி

கருத்தடை அறுவை சிகிச்சை (வாசக்டமி / ட்யூபக்டமி) செய்து கொள்ள தகுதி வாய்ந்த வயதில் உள்ள காப்பீட்டாளர்கள் கருத்தடை செய்து கொள்ளும்போது, உயர்த்தி வழங்கும் உடல்நலமின்மை உதவி வழங்கப்படுகிறது.

### 5.6.6. இயலாமைக்கான உதவி

காப்பீட்டாளர்கள் பணிபுரியும் போது ஏற்படும் விபத்தினால் விளையும் உடல் நலக்குறைகளுக்கும் தொழில் வழி நோய்களுக்கும் இயலாமைக்கான உதவி வழங்கப்படுகிறது.

### (i) தற்காலிக இயலாமைக்கான உதவி

தற்காலிக இயலாமை ஏற்படும்போது காப்பீட்டாளருக்கு அ) முதல் பயன் துய்க்கும் காலம் தொடங்குவதற்கு முன்பே தற்காலிக இயலாமை ஏற்பட்டால் ஊதியத்தில் 90 விழுக்காடும்

ஆ) பங்களிப்பு காலத்திற்கு பின் வரும் பயன் துய்க்கும் காலத்தில் தற்காலிக இயலாமை ஏற்பட்டால் நிலையான நன்மை விகிதத்தில் **90** விழுக்காடும் அக்காப்பீட்டாளர் ஈட்டுறுதி பெறத்தக்க வேலையில் சேர்ந்த நாள் முதலே உரிமையளிக்கப்பட்ட காப்பீட்டு மருத்துவ அலுவலரின் சான்றிதழின்பேரில் அவருடைய தற்காலிக இயலாமை தொடரும் வரை பணமாக வழங்கப்படுகிறது.

**(ii) நிரந்தர இயலாமைக்கான உதவி**

பணியின்போது நிரந்தர இயலாமை ஏற்படின் காப்பீட்டாளருக்கு அவர் ஈட்டுறுதி பெறத்தக்க வேலையில் சேர்ந்த நாள் முதலே நிரந்தர இயலாமைக்கான உதவி அவர்தம் வாழ்நாள் முழுவதும் பணமாக வழங்கப்படுகிறது.

**5.6.7. சார்ந்துள்ளோர் உதவி**

சார்ந்துள்ளோருக்கான பண உதவி, காப்பீட்டாளர் வேலை செய்யும் போது ஏற்படும் விபத்தினால் அல்லது அவர் செய்யும் தொழிலினால் ஏற்படும் நோயினால் காப்பீட்டாளர் இறந்துவிட்டால், அவரது குடும்பத்தினருக்கு பணமாக வழங்கப்படுகிறது.

**5.6.8. இறுதிச் சடங்கிற்குரிய உதவி**

காப்பீட்டாளர் இறந்துவிட்டால், அவர் ஈட்டுறுதி பெறத்தக்க வேலையில் சேர்ந்த நாள் முதலே அவரின் இறுதிச் சடங்கிற்கு ரூ.10,000./– அவரது குடும்பத்தினருக்கு பணமாக வழங்கப்படுகிறது.

**5.6.9. வேலையின்மைக்கான உதவி**

காப்பீட்டாளர், தொழிற்சாலை மூடப்படுவதாலோ, ஆட்குறைப்பு செய்யப்படுவதாலோ, பணியில் இல்லாத நேரத்தில் நிரந்தரமாக இயலாமை ஏற்படுவதாலோ மற்றும் இதர எதிர்பாராத காரணங்களால் சுயவிருப்பின்றி வேலை இழக்க நேரிட்டால், குறைந்தபட்சம் 3 வருடம் அந்த தொழிற்சாலையில் தொடர்ந்து வேலை பார்த்திருப்பின், அவர் கடைசியாக வாங்கிய சம்பளத்தின் 50 விழுக்காட்டினை ''ராஜீவ் காந்தி சிரமிக் கல்யாண் யோஜ்னா '' திட்டத்தின் கீழ் வேலையிழந்தோர் படிகளாக ஒரு வருடத்திற்கு பெற தகுதியுடைவராகிறார்.

## 5.6.10. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் இதர உதவிகள்

1. வயது மூப்பு காரணமாக பணி ஓய்வு பெற்ற பின்னர் குறைந்த பட்ச தொகையாக வருடத்திற்கு ரூ.120/– பெற்றுக் கொண்டு காப்பீட்டாளருக்கும் அவரது

வாழ்க்கைத்துணைக்கும் முதியோர் மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது.

2. காலிழந்தோர் பயன்படுத்தும் ஊன்றுகோல்கள் மற்றும் செயற்கை கால்கள், சக்கர நாற்காலிகள், பல்செட்கள், மூக்கு கண்ணாடிகள் போன்ற சாதனங்கள் இத்திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்படுகின்றன.

3. நோய் தடுப்பு சேவைகளான தடுப்பூசிகள், எச்ஐவி / எயிட்ஸ் நோய் கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சை அளித்தல் போன்ற வசதிகளும் தரப்படுகின்றன.

4. குடும்பநலம் மற்றும் காசநோய் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கான தேசிய திட்டங்களும் அமல்படுத்தப்படுகின்றன.

5. காப்பீட்டாளரின் மனைவி அல்லது பெண் காப்பீட்டாளரது பிரசவம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ வசதிகள் இல்லாத இடத்தில் நடைபெற நேர்ந்தால் மருத்துவ படியாக ரூ.5,000/– அளிக்கப்படுகிறது.

## 5.7. காப்பீட்டு பயனாளிகள் தனியார் மருத்துவமனைகளில் செய்துகொண்ட சிகிச்சைக்கான செலவினை திரும்ப வழங்கல்.

**(1) செறிவுத்திட்டம் (தனியார் மருத்துவமனைகளுடன் ஒப்பந்தம்)**

காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு சிறப்பு மற்றும் உயர்சிறப்பு சிகிச்சை எடுத்துக்கொள்வதற்கு வசதியாக 164 தனியார் மருத்துவமனைகள் செறிவு திட்டத்தின்கீழ் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களின் பரிந்துரைகளின் பேரில் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு கட்டணமில்லா சிகிச்சை அளிக்கப்படுவதோடு, செறிவு திட்டத்தின்கீழ் உள்ள ஒப்பந்தப்படி மருத்துவமனை செலவின பட்டியல்கள் நேரிடையாக நேர் செய்யப்படுகின்றன.

2015–2016ம் நிதியாண்டில், ரூ.25.50 கோடி மதிப்பிலான பட்டியல்கள் தனியார் மருத்துவமனைகளுக்கு சிறப்பு மற்றும் அதிசிறப்பு சிகிச்சைகளுக்காக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. கடந்த ஐந்தாண்டுகளில், ரூ.115.50 கோடி மதிப்பிலான பட்டியல்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

**(2) சுழற்சி நிதி**

காப்பீட்டாளர்கள் மருத்துவ பரிந்துரைகளின்றி தனியார் மருத்துவமனைகளில் எடுத்துக்கொள்ளும் சிறப்பு மற்றும் அதிசிறப்பு மருத்துவ சிகிச்சைக்காக செலவிட்ட தொகையை தாமதமில்லாமல் திரும்ப பெறுவதற்காக ‘சுழற்சி நிதி’ 2004ல் உருவாக்கப்பட்டது.

- 2015–2016ம் நிதியாண்டில், 6,593 காப்பீட்டு நபர்களுக்கு ரூ.15,44 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- கடந்த ஐந்தாண்டுகளில் தனியார் மருத்துவமனைகளில் எடுத்துக்கொண்ட ரூ.70.70 கோடி மதிப்பிலான சிறப்பு / அதிசிறப்பு சிகிச்சைக்கான பட்டியல்கள் 32,342 காப்பீட்டு நபர்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 5.8. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட விரிவாக்கம்

**ஏற்கனவே இயங்கிக்கொண்டிருக்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் புதிய பகுதிகளை இணைத்தல்.**

கடந்த ஐந்தாண்டுகளில் மொத்தம் 50,253 தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் 42 புதிய பகுதிகள் ஏற்கனவே இயங்கிக்கொண்டிருக்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

2015–2016ம் வருடத்தில் 4,551 தொழிலாளர்கள் பயன் பெறும் வகையில் ஐந்து புதிய பகுதிகள் ஏற்கனவே இயங்கிக்கொண்டிருக்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைக்கப்பட்டன. மேலும் 3,867 தொழிலாளர்கள் பயன் பெறும் வகையில் எட்டு புதிய பகுதிகளை ஏற்கனவே இயங்கிக்கொண்டிருக்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைக்க அரசாணை வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**5.9. மருத்துவமனை மேம்பாட்டுக் குழு**

தொழிலாளர் காப்புறுதி கழகத்திற்கு சொந்தமான கட்டடங்களில் சிறிய மற்றும் பெரிய புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளவும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்யவும், பழுது பார்க்கவும் அனைத்து தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளிலும் மருத்துவமனை மேம்பாட்டு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**டாக்டர் நிலோபர் கபில்**
**தொழிலாளர் நலத்துறை அமைச்சர்**